தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ ஆவணி ௴ சக்கரம் 33 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

மதமாற்றம், சமூகத்தில் காணப்படும் தர்மானுஷ்டானக் குறைவு இவைகளுக்குப் பரிகாரமாக மக்கள் மனதில் நல்ல உணர்வுகளைத் தூண்டி பக்தி வழியில் வழி நடத்துவதற்கு ஒரு நல்ல உபாயமாக தர்ம சக்கரம் மக்கள் பலருக்கும் கிடைக்கவேண்டுமெனக் கருதுகிறோம். நம் அன்பர்களில் பலரும் இக்கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே நம் சந்தாதாரர்கள் தாங்களே தர்ம சக்கரத்தைப் பயன்படுத்தவும் மற்றவர்களுக்குத் தந்து படிக்க உதவவும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தந்து உதவும்படியும் வேண்டுகிறோம்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித்தாள்களில் உள்ளவை போன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் திரும்பவும் வாசிக்கக் கூடிய ஒரு நூலாக இது அமைகிறது. ஆதலால் ஓராண்டுக்கான பன்னிரண்டு தர்ம சக்கர இதழ்களையும் பொருளடக்கத் துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருதற்கும் அது வசதியாக இருக்கும்.

ஆகவே அன்பர்கள் முயன்று புதிய சந்தாதாரர்களை அறிமுகப் படுத்திப் பலரையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம். குறிப்பிட்ட அளவே பிரதிகள் அச்சாக்கப்படுவதால் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய பழைய சந்தாதாரர்கள் உடன் புதுப்பித்துக்கொண்டு மற்றும் பலரையும் புதிய சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தரும் அருட்பணியில் ஈடு படும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொருளாதாரத்தில் எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, அரசினர் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்பு தல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

சந்தா விவரம் பொருளடக்கத்தின்கீழ் தரப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

ACC. NO. 38682

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஹு ஆவணி மீ	ஆரம் 8

பொருளடக்கம்

வருட சந்தா: உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 45-00
தனி இதழ் ,,	ரூ. 1-50	,,	ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

கன்னியாகுமரி ஜில்லா—நாகர்கோவிலில் 19—8—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: திருநடுக்காடு இசக்கியம்மன்கோவில்

நேரம்: காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 26—8—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் நண்பகல் 1-00 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 2—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00ம் மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் நேரில் செலுத்தவும்.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 2—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—பெரியகுளத்தில் 2—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பிரம்மஞானமந்திரம் பள்ளி (முனிசிபாலிடிக்கு எதிர்ப்புறம்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 2—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சோமசுந்தரி அம்மன் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

தர்மபுரி ஜில்லா—பாலஜங்கமனஹள்ளியில் 3—9—84 திங்கட்கிழமை

இடம்: அருள்மிகு பச்சையம்மன் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரையில்—9—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிவானந்த தபோவனம், சிவானந்த நகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

கோவை ஜில்லா—பல்லடத்தில் 16—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்திரோடு, ஹைஸ்கூல் எதிரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—கேத்தனூரில் 16—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ பெருமாள் கோவில்
நேரம்: இரவு 7-00 மணிமுதல் 9-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 16—9—84 ஞாயிறு

இடம்: அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
நேரம்: காலை 9-30மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 ‖ ரக்தாக்ஷி ௵ ஆவணி ௴ ‖ ஆரம் 8

ப்ரார்த்தனை

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि स्थिताः ।
अथ मर्त्योऽमृतो भवति अत्र ब्रह्म समश्नुते ॥

— कठोपनिषद्

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஸ்திதா: ।
அத மர்த்யோऽம்ருதோ பவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே ॥

— கடோபநிஷதம்.

ஆசைகள் அனைத்தையும் உள்ளத்தினின்று அகற்றுபவன் இம்மையிலேயே பேரானந்தத்துக்கு உரியவனாகிறான். மரணமிலாப் பெரு நிலைக்கு அன்னவனே உரியவனாகிறான்.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

— தேவாரம்.

அருள் விருந்து

பிறரைத் துன்புறுத்துவது சமய நெறி ஆகாது.

நன்னெறி ஓங்குதற்கேற்பத் தீ நெறி தளர்வுறுகிறது.

ஏழை நெஞ்சம் படைத்திருப்பவனுக்கு அமைதி இல்லை.

உலக வியவகாரங்களுக்குச் செல்வம் இன்றியமையாதது.

அல்ப எண்ணத்துக்கும் அச்சத்துக்கும் உள்ளத்தில் இடம் தராதே.

யாண்டும் ஆனந்தத்தில் திளைத்திருப்பவனே பெரு வாழ்வு வாழ்கிறான்.

அரசியல் இயக்கத்தில் மிகைபட ஈடுபடுபவன் மக்களுக்கு நலன் செய்ய மாட்டான்.

இந்திரியங்களைப் பாழ்படுத்துபவன் சீலத்தின் பெருமையை அறிய மாட்டான்.

சத்திய விரதம் பூண்டிருப்பவன் உண்மை அல்லாததைக் கனவிலும் கருதலாகாது.

பொருந்தாதவைகளைச் சகித்துப் பழகு. இதன் வாயிலாக நீ உறுதிப்பாடு அடைகின்றாய்.

பிரபஞ்சம் வேறு, பரம்பொருள் வேறு என்று உணர்பவன் கடவுளைக் காணமாட்டான்.

நெடுநாள் வெறுமனே வாழ்ந்திருப்பதைவிட ஒருநாள் ஆத்மசொரூபத்தில் திளைத்திருப்பது மேல்.

அறநெறியை உறுதியாகக் கடைப்பிடிப்பவனை இடைஞ்சல்கள் வந்து அல்லற்படுத்த மாட்டா.

தன்னை மறந்து பிறர் நலனுக்காக வாழ்ந்திருப்பவனே பேரானந்தத்திற்குத் தகுதி உடையவனாகிறான்.

தனக்கு உரியதைப் பிறர்க்கு உரியதாக்குவதன் வாயிலாக மனிதன் தன்னைத் தானே பக்குவப் படுத்திக்கொள்கிறான்.

இறைவனே அனைத்துமாய் உள்ளான் என்னும் கோட்பாட்டில் உறுதி பெற்றிருப்பவன் யாரிடத்து இரக்கம் கொள்வது?

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

1885 ஆம் வருடம் மே மாதம் 23ஆம் தேதி சனிக்கிழமை.

ராம் என்னும் பெயர் படைத்திருந்த பக்தர் வீட்டின் முன் மண்டபத்தில் பரமஹம்சதேவர் அமர்ந்திருந்தார். பக்தர்கள் பலர் அவரைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். அவர்களுடன் பரமஹம்ச தேவர் உரையாடிக்கொண்டிருந்தார். மகிமசரன் அவர் எதிரே அமர்ந்திருந்தார். மகேந்திரர் அவருக்கு இடது புறம் அமர்ந்திருந்தார். பால்த்து என்னும் பக்தரும், நித்திய கோபால், ஹரமோகன் ஆகியவர்களும் இன்னும் பலரும், அவரைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். அப்பொழுது பிற்பகல் சுமார் ஐந்து மணி இருக்கும். பரமஹம்ஸதேவர் பக்தர்கள் சிலரைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார்.

பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் கேட்டதாவது; "இளைய நரேந்திரன் இன்னும் வரவில்லையா?"

இங்ஙனம் அவர் கேட்டுக்கொண்டிருந்தபோது அதே இளைய நரேந்திரன் மண்டபத்திற்குள் வந்து சேர்ந்தான். "அவன் எங்கே?" என்று பரமஹம்சதேவர் மீண்டும் விசாரித்தார்.

மகேந்திரர்: "யார் ஐயனே?"

பரமஹம்சதேவர்: "கிஷோரி. கிரீஷ்சந்திர கோஷ் வருவானல்லவா? நரேந்திரனைப்பற்றிய விஷயம் யாது?"

சிறிது நேரத்திற்குள் நரேந்திரன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் பரமஹம்சதேவர் முன்னிலையில் வீழ்ந்து வணங்கினன்.

பரமஹம்சதேவர்: "கேதார்நாதன் இங்கு வருவானாகில் அது அனைவருக்கும் மகிழ்வூட்டும். கிரீஷ்சந்திரகோஷ் 'பரமஹம்சதேவர் ஓர் அசாதாரணமான மூர்த்தி' என்று பலரிடம் பேசி வருகின்றான். அக்கூற்றை மகேந்திரநாதனும் ஏற்றுக்கொள்கின்றான்."

சங்கீர்த்தனங்கள் பாடுதற்கு அவ்வீட்டுத் தலைவராகிய ராம் ஏற்பாடு செய்திருந்தார்.

"ஐயனே, நான் கீர்த்தனைகளைப் பாட ஆரம்பிக்கலாமா?" என்று பாடகன் கைகூப்பிக் கொண்டு பரமஹம்சதேவரை வேண்டினன்.

பரமஹம்சதேவர் தாகசாந்தி பண்ணிக் கொண்டார். பிறகு அவர் கையில் இருந்த ஒரு சிறிய பையினின்று ஏதோ சில பொருள்களை எடுத்து வாய்க்குள் போட்டுக்கொண்டார். அதன் பிறகு அச்சிறிய பையை மூடி வைக்கும்படி மகேந்திரரிடம் தெரிவித்தார்.

பிறகு எல்லாரும் பாடகன் பாடுவதை எதிர்பார்த்து அமைதியுற்றிருந்தனர். பாடகன் இப்பொழுது கீர்த்தனங்கள் பாட ஆரம்பித்தான். பக்க வாத்தியமாகிய மிருதங்க ஓசையைக் கேட்டவுடனே பரமஹம்ச தேவருக்கு ஆனந்த பரவசநிலை உண்டாயிற்று. கீர்த்தனம் துவங்கியதும் அதனுடைய உட்பொருள் பரமஹம்ச தேவரை ஆழ்ந்த சமாதியில் மூழ்கும்படி செய்தது. அருகில் அமர்ந்திருந்த நித்திய கோபாலுடைய மடியின்மீது பரமஹம்சதேவர் தம்முடைய பாதத்தை நாட்டினர். அந்தப் பக்தனும் பரவச நிலையில் இருந்தான். உணர்ச்சியின் வேகத்தால் அன்னவன் ஆனந்த பாஷ்பம் பொழிவானாயினன். இந்த அபூர்வமான சம்பவம் ஆங்குக் கூடியிருந்த அன்பர்களுக்குப் பேரானந்தத்தை அளிப்பதாய் இருந்தது. அவர்கள் இந்நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பரமஹம்சதேவருக்கு இப்பிரபஞ்ச ஞாபகம் சிறிது வந்தது. அப்பொழுது அவர் இயம்பியதாவது: "பரம்பொருளானவர் நித்தியனாகவும் லீலாவினோதங்கள் உள்ளவனாகவும் இலங்குகின்றார். இதைப் பற்றி உன்னுடைய கருத்து யாது?"

நித்தியகோபால்: "பரமன் படைத்துள்ள இரண்டு கூறுகளும் மங்களமானவைகளே."

பரமஹம்சதேவர் தம் கண்களை மூடிய நிலையில் அமர்ந்துகொண்டு பகர்வாராயினர்: "இது தானா உண்மை? கண்களை மூடிய நிலையில் தான் நாம் கடவுளைக் காண்கின்றோமா? நாம் கண் திறந்திருக்கின்ற பொழுது கடவுளின்

காட்சி நமக்குப் புலப்படுவதில்லையா? மெய்ப் பொருளாகிய பரமனே பிரபஞ்சமாக வடிவெடுத்து விளையாடுகின்றான். ஆதலால் பிரபஞ்சம் வேறு, பரம்பொருள் வேறு எனக் கருதுவது பொருந்தாது. இதுவே மெய்ப் பொருளைப் பற்றிய உண்மையாகும்" என்று மகிமசரணிடம் பரமஹம்சதேவர் தெரிவித்தார்.

மகிமசரண்: ஐயனே, கட்புலனாகின்ற பிரபஞ்சமாக இருப்பதும் அதில் வாழ்கின்ற உயிர்வகைகளாய் இருப்பதும் இறைவனுடைய திருவுளப்பாங்கின் படியேயாம்."

பரமஹம்சதேவர்: "பரமனுடைய அருளுக்குப் பாத்திரமானவர்களுள் ஒருசிலர் ஏழாவது ஞானபூமியிலேயே தங்கியிருக்கின்றனர். வேறு சிலர் அதன் கீழ் உள்ள ஞான பூமிகளுக்கும் இறங்கிவந்து இன்புற்றிருக்கின்றனர்."

உத்தவன் கோபிமார்களிடம் கூறியதாவது: "எந்தப் பரவஸ்துவை நீங்கள் கிருஷ்ணன் என்று கூறுகின்றீர்களோ அதே வஸ்துதான் எல்லாருடைய உள்ளத்திலும் மனச்சாட்சியாக இலங்குகின்றது. உலகனைத்துமாய் இலங்குபவன் அவனே. அண்டமெங்கும் உள்ள உயிர்களாக வடிவெடுத்திருப்பவனும் அவனே. அண்டசராசரங்களாக, சர்வவியாபியாய் இருக்கும் மூலப் பொருள் அவனே. அதனால்தான், 'கண்மூடி தியானத்தில் இருக்கின்ற பொழுது தான் சாதகன் ஒருவன் இறைவனுடைய சான்னித்தியத்தை உணர்கின்றானா? கண்ணைத் திறந்து உயிர்களைக் காணும்போது அவை யாவும் இறைவனுடைய சொரூபம் என்பதை அவன் ஏற்றுக் கொள்வதில்லையா?' என்று நான் கேட்கிறேன்."

மகிமசரண் பரமஹம்ச தேவரிடம் பணிவுடன் விண்ணப்பித்ததாவது:

"வடிவங்கள் எடுத்து விளையாடுகின்ற இறைவனோடு இணங்கி இருக்கின்ற பக்தன் ஒருவனுக்கு ஏதேனும் ஒரு தருணத்தில் இந்த வடிவங்களை எல்லாம் தாண்டியுள்ள நிர்க்குண நிராகாரத்தை அடையவேண்டும் என்னும் எண்ணம் வருவதில்லையா?"

பரமஹம்சதேவர்: "அது அந்தந்தப் பக்தனுடைய மனப்பான்மையைப் பொறுத்ததாகும். சான்றோர்களுக்கிடையில் இரண்டு கொள்கைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நித்திய சூரிகளைப் பற்றியதாம். கிருஷ்ணன் யாண்டும் வடிவத்திலேயே இருக்கிறான் என்றும் அவனைச் சூழ்ந்துகொண்டு சில பக்தர்கள் நித்திய சூரிகளாக அவனுடைய சான்னித்தியத்தில் இன்புற்றிருக்கிறார்கள் என்றும் அந்தச் சம்பிரதாயத்தினர் கருதுகின்றனர். கிருஷ்ணனாக வடிவெடுத்திருப்பதும் சைதன்யமே; அகிலாண்டங்களாக வடிவெடுத்திருப்பதும் சைதன்யமே. இங்ஙனம் வடிவெடுத்துள்ள மூர்த்திகளாக நித்தியசூரிகள் யாண்டும் இருக்கின்றனர். ஓர் உபமானத்தின் மூலம் இக்கோட்பாட்டை விளக்கலாம். பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற சந்திரனைச் சூழ்ந்துகொண்டு நட்சத்திரங்கள் சில வானத்தில் சஞ்சரிப்பதை நாம் காண்கின்றோம். அதே விதத்தில்தான் இந்த நித்தியசூரிகளும் கிருஷ்ணபரமாத்மாவும் நட்சத்திரங்களைப் போன்றும் ஒளிமயமான சந்திரனைப் போன்றும் நித்திய மூர்த்திகளாக இலங்கி வருகின்றனர். கிருஷ்ணனுடைய சான்னித்தியத்தையே உள்ளும் புறமும் காண்பவனுக்குத் தவம் எதற்கு என்னும் கேள்வியை நீயே கிளப்புகின்றாயல்லவா? மற்றும் ஒருவிஷயம். மகாவிஷ்ணுவின் அம்சத்தில் ஒரு சிறு பகுதியோடு கூடியவனாகப் பிறந்திருக்கும் பக்தன் ஒருவன் ஒருபொழுதும் தான் படைத்துள்ள பக்தியைப் புறக்கணிக்கமாட்டான்.

"எனக்குக் குருவாய் வாய்த்திருந்த நிறைஞானியாகிய தோதாபுரியுடன் நான் பதினொரு மாதகாலம் வாழ்ந்திருந்தேன். வேதாந்த தத்துவத்தை அவர் எனக்கு எடுத்து வழங்கினார். யாண்டும் நித்திய வஸ்துவாயிருப்பது சுத்த சைதன்யம் ஒன்றே. அந்தச் சுத்த சைதன்யத்திற்கு வடிவங்கள் இருப்பதும் அந்த வடிவங்கள் ஒன்றோடொன்று ஒட்டி உறவாடுவதும் வெறும் கற்பனையாம் என்பது அந்தச் சம்பிரதாயத்தின் சாரமாகும். அக்கூற்றை நான் ஏற்றுக்கொண்டேன் எனினும் பக்தியின் பாங்கை என் உள்ளத்தினின்று அகற்றிவிட அவருக்கு இயலவில்லை. எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் என் மனது யாண்டும் அன்னையின் சன்னிதானத்திலேயே இன்புற்று இருந்துவந்தது. நான் ஆனந்த பரவசமாக அன்னையைக் குறித்துப் பாடிக்கொண்டிருந்த பொழுது தோதாபுரி அதைச் செவி

மடுத்துக் கேட்டார். அவருக்கும் பக்தியின் பாங்கு தாற்காலிகமாக வந்து அமைந்துவிடும். அவர் கண்ணீர் சிந்துவது முறையன்று என்று கருதுபவராயிருந்தாலும் சில வேளைகளில் என் பாடலைக்கேட்டு ஆனந்த பாஷ்பம் பொழிந்தார். பக்தி மேலிட்டால் அவர் பேரானந்தமுற்றவராகத் தென்பட்டார்.

"இது என்ன மகிமை' என்று அந்த நிலையில் இருந்துகொண்டு அவர் இயம்பினர். அத்தகைய நிறைஞானியாகிய அவரும் பக்தியின் வசப்பட்டவராக இருந்து ஆனந்த பாஷ்பம் பொழிந்தார் என்றால் பக்தியின் மகிமையை யாரே எடுத்துச் சொல்ல வல்லவர் ஆவார்!"

இளைய நரேந்திரன் முதலிய இளைஞர்களைப் பார்த்துப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "கற்பகக்கொடி ஒன்றின் விதையைப் பக்தன் ஒருவன் அருந்துவானாகில் அது அவனுடைய இருதயத்தில் செடியாக முளைக்கிறது என்னும் கொள்கை ஒன்று உண்டு. பின்பு அந்த விதையானது வளர்ந்து, பூத்து, காய்த்துக் கனியைத் தருகின்றது. பக்தியின் பாங்கு அத்தகையது. யுக்தியைக்கொண்டு நீங்கள் பலவாறு விவாதிக்கலாம். யுக்தி பூர்வமாக நீங்கள் ஞானத்திற்கு நிகரானது யாதும் இல்லை என்று முடிவுகட்டலாம். ஆயினும் பக்திக்கு வசப்படாதார் பிரபஞ்சத்தில் யாரும் இல்லை."

இங்ஙனம் பரமஹம்சதேவர் பகர்ந்தருளிய கூற்றைப் பக்தர்கள் ஆழ்ந்து கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

புன்னகை பூத்த நிலையில் இருந்து கொண்டு, "நீ ரசிப்பவைகளில் தலை சிறந்தது யாது?" என்று மகிமசரணிடம் பரமஹம்சர் கேட்டார். மகிமசரண் புன்னகையுடன் கொடுத்த விடையாவது: "தாங்கள் கேட்ட கேள்விக்கு விடைதர நான் தகுதி அற்றவனாக இருக்கிறேன். ஆயினும் உலகப்போக்கில் வைத்து ஆராய்ந்தால் நான் மாம்பழத்தை மிகவும் ரசிக்கிறேன்."

புன்னகையுடன் பரமஹம்சதேவர் மீண்டும் கேட்டதாவது:

"நீ மாம்பழத்தை ரசிப்பது தன்னந்தனியாக இருந்து கொண்டா? அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டா?"

புன்னகையுடன் மகிமசரண் கொடுத்த விடையாவது:

"மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை என்னிடத்து இல்லை. அகப்படுகிற மாம்பழத்தை ஏதேனும் ஒரு விதத்தில் நான் மட்டும் அருந்தும் பாங்குடையவனாக இருக்கிறேன்."

"பின்பு என்னுடைய மனப்பான்மை எத்தகையது என்று உனக்குத் தெரியுமா? பரம்பொருள் அசைவற்றதாகவும், அசைவுற்றதாகவும் இருக்கிறது என்னும் கோட்பாட்டை நான் உறுதியாகக் கடைப்பிடிக்கிறேன். வடிவெடுத்து மிளிர்வதெல்லாம் கடவுளின் தோற்றமல்லாது வேறு யாதாக இருக்கக்கூடும்? அனுபூதியில் பரமனை அடையப்பெற்றவனுக்கே பரம்பொருளின் பாங்கு முழுதும் தெற்றென விளங்கும். நிர்க்குண நிராமயமாய் இருப்பது பரவஸ்து. உலகில் சற்குணமாய், அனைத்துமாய் வடிவெடுத்து விளையாடுவதும் அதே பரவஸ்துவாம். பிரபஞ்சம் எங்கும் வாழ்ந்துவரும் உயிர்கள் அனைத்துமாக இலங்குவதும் அதுவேயாம்.

"ஆத்ம சாதனங்கள் புரிவது முற்றிலும் அவசியமாகிறது. வெறும் ஏட்டுக் கல்வி ஒன்றுக்கும் உதவாது. ஈசுவர சந்திரவித்தியாசாகர் ஏராளமாகக் கற்றறிந்தவர் என்பது உண்மை. ஆயினும் தம் உள்ளத்திலே இருக்கின்ற பேரானந்தத்தை அவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை என்று நான் அறிய வந்தேன். மாணக்கர்கள் பலருக்கு அவர் கல்வியை வேண்டியவாறு வழங்கினர். ஆயினும் இறைவனிடத்திருந்து ஊற்றெடுத்து வருகின்ற பேரானந்தத்தைத் தம் உள்ளத்தினுள்ளே அவர் அனுபூதியில் அறிந்துகொள்ளவில்லை. வெறும் ஏட்டுக் கல்வியால் ஆவது என்ன? ஏட்டுக் கல்வியின் மூலம் மனிதன் அடைகின்ற ஆத்ம பரிபாகம் மிகச் சிறியதாம். பஞ்சாங்கத்தில் இவ்வாண்டு இருபது மரக்கால் மழை பெய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் அப்பஞ்சாங்கத்தின் பக்கங்களை எவ்வளவுதான் பிழிந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் அகப்படாது. ஏட்டுக் கல்வியின் பாங்கு அத்தகையதாகும். ஏட்டுக்கல்வியைக் காட்டிலும் அனுபவக் கல்வியே சிறந்தது.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-13. புண்ணீர்மை யாளர் புலம்புமா போல்புலம்பிக்
கண்ணீரும் கம்பலையும் காட்டுநாள் எந்நாளோ.

அழுகையில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. ஒன்று இவ்வுலக சம்பந்தமான சுகஜீவிதத்தை ஒட்டியது. அத்தகைய அழுகைக்கு இராவணாகார அழுகை என்று பெயர். மற்றது இவ்வுலக சம்பந்தமானதன்று. அது இங்கு வாய்க்கும் நலன், கேடுகளை மறந்துவிட்டுஅருள் நாட்டம் கொண்டுள்ள அழுகையாம். அத்தகைய அழுகைக்கு ருத்திராகார அழுகை என்று பெயர். இராவணன், ருத்திரன் ஆகிய இரண்டு சொற்களும் "ருத்" என்னும் அடிச்சொல்லிலிருந்து வந்தவைகள். 'அழச் செய்பவன்' என்பது அதன் பொருள். ஆனால் அழுகையின் விளைவாக முந்தையது உலகப்பற்றை வளர்க்கிறது. பிந்தையது உலகப்பற்றை ஒதுக்கி வைத்து விட்டுத் தெய்வ அருளை நாடுவது. வெளித் தோற்றத்துக்கு இரண்டும் அழுகை எனினும் உலகப்பற்றை வளர்க்கும் அழுகை அழுபவனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது. அருள் நாட்டம் பூண்டு அழும் அழுகை தெய்விக ஆற்றலை வளர்க்கிறது. முந்தைய அழுகை பார்க்கத் தகுதியற்றது, அழகைக் குறைக்கிறது. பரம்பொருளை நாடி அழுகின்ற அழுகையோ ஆற்றலை வளர்க்கிறது. அழகை ஓங்குவிக்கிறது. சீதாபிராட்டி இலங்கையிலே சிறை கிடந்தபொழுது அழுத அழுகை முற்றிலும் பர நாட்டத்துக்குரியதாயிருந்தது. அங்ஙனம் அவள் கண்ணீரும் கம்பலையுமாக அழுததால் மனபரிபாகத்தில் ஒப்பற்றவளாக மாறி அமைந்தாள். ஆதலால் தான் இராமாயணத்தில் அந்தப் பகுதி 'சுந்தர காண்டம்' எனப் பெயர் பெற்றுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம் அழுகையில் பரநாட்டமே வடிவெடுத்திருந்தார். மனதுக்கு அவர் புகட்டிய நல்லறிவு வருமாறு: "ஓ மனமே! நீ உலக வாழ்வை நாடிக் குடம் குடமாகக் கண்ணீர் கொட்டுகின்றாய். இறைவனை நாடி நீ ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியதுண்டா? இன்று இருந்து நாளை அழிந்து பட்டுப்போம் இவ்வுலக வாழ்வை நாடி நீ வேண்டியவாறு கண்ணீர் கொட்டுகின்றாய். அநித்திய வஸ்துவாகிய உடலைப் பேணிப் பாதுகாத்தல் பொருட்டுப் பெருமுயற்சி எடுத்துக் கொள்கின்றாய். யாண்டும் அழியாப் பொருளாகிய பரமனை நாடி ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியதுண்டா? ஓ மனமே! போகத்தை நாடி நீ சதா அலைந்து திரிகின்றாய். பரமனை நாடி ஒரு கணப்பொழுதாவது நீ கவலையுற்றிருந்ததுண்டா? ஓ மனமே, பதவியை நாடி நீ படாதபாடு படுகின்றாய். ஒரு சிறிதாவது நீ பரநாட்டம் பூண்டிருந்ததுண்டா? ஓ மனமே, பேருக்கும் புகழுக்குமாக நீ அலைந்து திரிகின்றாய். போற்றுதற்குரிய பெரிய பொருளாகிய பரமனை நாடி நீ சிறிதளவாவது சிரமம் எடுத்துக் கொள்கின்றாயா?" இங்ஙனம் பரமஹம்சதேவர் காட்டியுள்ள இம்முறையைக் கையாண்டு மனதை நல்வழிக்குத் திருப்ப வேண்டும். தாயுமான சுவாமிகள் இக்கண்ணியில் பூண்டுள்ள கருத்து இதுவேயாம்.

11-14. போற்றேன்என் றுள்ளமென்னைப் புந்திசெயும்
வேதனைக்கு இங்கு
ஆற்றேன்ஆற் றேன்என்று அரற்றுநாள்
எந்நாளோ.

பிரபஞ்சநாட்டம், பரநாட்டம் ஆகிய இரண்டனுள் புறக்கணிக்க வேண்டியது முந்தியது; நாடவேண்டியது பிந்தியது. பரநாட்டம் வாய்க்காதிருப்பது ஆத்ம சாதகன் ஒருவனுக்குப் பெரிய குறையாகாது.ஆனால் பிரபஞ்சநாட்டத்தில் அவனுடைய அறிவு சிறிய அளவாவது செல்லுமாகில் அது பெரிய குற்றமாகிறது. பிரபஞ்ச நாட்டத்தை எந்த அளவுக்கு ஆத்மசாதகன் ஒதுக்குகின்றானோ அந்த அளவுக்குத்தான் அவன் பரிபக்குவம் அடைகிறான்.

ஓர் உபமானத்தின் மூலம் பரமஹம்சதேவர் இதை விளக்குகிறார். நற்குடியில் பிறந்துள்ள மேன் மகன் ஒருவன் அதற்கேற்ற தூய சூழ்நிலையில் வசித்திருக்க விரும்புகிறான். அசுசியே வடிவெடுத்துள்ள கீழ் மக்கள் வாழும் சேரி போன்ற சூழ்நிலையில் வசித்திருக்க அவன் ஒருபொழுதும் விரும்பான். அத்தகைய சூழ்நிலையில் அவன் ஒரு கணமேனும் சகித்திருக்க

இயலாது. அத்தகைய மேன்மகனுக்கு நிக ரானது நல்ல மனம். அது ஒருபொழுதும் அற்பத்தனத்தில் ஈடுபடலாகாது. எண்ணு கிற எண்ணங்கள் அனைத்தும் போற்றுதற் குரிய மேலாம் எண்ணங்களாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் செய்கிற செயல் கள் எல்லாம் மேன்மை பொருந்தியனவாக அமையும். மானுடன் ஒருவன் எண்ணுகிற எண்ணங்களை மற்றவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள். அவற்றை எண்ணுபவனாகிய தானும் தன் உள்ளத்தில் மனச்சாட்சியாக வீற்றிருக்கும் இறைவனும்மட்டுமே அவற்றை அறியவருகிறார்கள். எனவே தீவிர வைராக் கியமுடைய ஆத்ம சாதகன் ஒருவன் யாண்டும் நல்ல சிந்தனைகளையே மேற்கொண்டு வர வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் ஆத்ம சாதகன் கீழான எண்ணத்தில் மூழ்கி இருக்கலாகாது என்பதே இக்கண்ணியின் உட்பொருளாம்.

11-15. பொய்ம்முடங்கும் பூமிசில போட்டு
அலறப் பூங்கமலன்
கைம்முடங்க நான்ஜனனக் கட்டுஅறுவது
எந்நாளோ.

சிருஷ்டிக்கும் வல்லமை படைத்திருப்பவன் பிரம்மதேவன் மட்டுமல்லன். ஜீவனுக்கும் அந்த வல்லமை ஓரளவு அமைந்திருக்கிறது. நனவு நிலையில் மனிதன் காணும் உலகம் பிரம்ம தேவனுடைய சிருஷ்டி. அதற்கு நிகரான ஓர் உலகைக் கனவு நிலையில் மனிதன் நாள்தோறும் தனக்குத்தானே சிருஷ்டித்துக்கொள்கிறான். நனவு நிலையில் இருக்கின்றபொழுது நிலவுலக வாழ்வு நித்தியமாகத் தோன்றுகிறது. கனவு நிலைக்குப் போன உடனே இவ்வுலகம் மாய மாய் மறைந்து போகிறது. இதற்குப் பதிலாக ஜீவாத்மன் கனவிலே தனக்கேற்ற உலகம் ஒன்றைக் கற்பித்துக்கொள்கிறான். நனவிலே பணம் படைத்திருப்பவன் கனவிலே ஏழை யாவதும் நனவிலே ஏழையாயிருப்பவன் கன விலே பணக்காரனாவதும் சாத்தியம். இவ் விரண்டு மனநிலைகளுள் ஒன்று மற்றொன்றை மறைத்துத் தள்ளுகிறது. அந்தந்த மனநிலை இருக்கும் பரியந்தம் அதை அனுபவிப்பவ னுக்கு உண்மையாகவே தோன்றுகிறது. ஆயி னும் அவை இரண்டும் நிலையற்றவை என்னும் உண்மையை உள்ளபடி அறிந்துகொள்பவனே விவேகியாகிறான். இறைவனுடைய திருவரு ளால் இத்தகைய சூழ்நிலை மக்கள் எல்லார்க் கும் வந்து வாய்க்கிறது. ஆனால் மக்கள் எல் லாரும் கனவினின்று விழித்துக்கொண்ட வுடனே அதை வெறும் கனவு என்று ஒதுக்கு கின்றனர். அதே பாங்கில் ஒதுக்குதற்கேற்ற நிலையில் நனவும் இருக்கிறது என்பது அவர் களுக்கு விளங்குவதில்லை. பிறவிகள் பல எடுத்து, பிரபஞ்ச வாழ்வை அனுபவித்துப் பார்த்து, சலிப்புத் தட்டும்பொழுதுதான் அந்த விவேகம் வந்தமைகிறது.

வெறும் நூல்களைக் கற்பதன்மூலம் விவேகம் வந்து விடுவதில்லை. ஒழுக்க வாழ்வினின்றே விவேகம் உண்டாகிறது. விவேகமுடையவர் கள் தான் சத்தியம் எது மித்தை எது என் பதைச் சரியான பாங்கில் பொருள்படுத்த முடி யும். மித்தையைச் சத்தியம் என்று எண்ணிக் கொண்டு மித்தையில் பற்று வைத்துக்கொண் டிருப்பவர்கள் அவிவேகிகள் ஆகிறார்கள். அவர்கள் ஜனனம், மரணம் என்னும் சுழலில் அகப்பட்டுக்கொண்டு துன்பப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். அவிவேகியினுடைய நினை வில் இருந்து விடுபட்டு விவேகத்தைப் பெற்று ஜனன மரணக் கட்டுகளை அறுத்து, பேரின்ப நிலையில் இருக்கும் நாள் வந்து அமையாதோ என்று தாயுமானவர் இக்கண்ணியில் இறை வனைக் கேட்கின்றார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் சான் றோர் ஒருவர் இருந்தார். அவர் கனவிலே தாம் அழகியதொரு பட்டுப் பூச்சியாகி விட்டதாக உணர்ந்தார். அக்கனவினின்று விழித்துக் கொண்ட பிறகு விசாரித்துப் பார்த்தார். உண் மையில் பட்டுப்பூச்சியாயிருக்கும் தாம் மனித னாயிருந்ததாகக் கனவு காண்கிறாரா? அல்லது மனிதனாயிருக்கும் தாம் பட்டுப்பூச்சியாயிருந்த தாகக் கனவு கண்டாரா? இரண்டில் எது உண்மை என்று விசாரித்ததில் இரண்டும் வெறும் மனோகற்பனை என்னும் முடிவுக்கு வந்தார். அவர் கட்டிய முடிவே உண்மை. அத் தகைய விவேகம் உதயமாகின்ற பொழுது மக்கள் மாயப் பிரபஞ்சத்தில் பற்று வைக்க மாட்டார்கள் என்பதே இக்கண்ணியின் உட் பொருளாம்.

இலட்சிய சமுதாயம்

(சுவாமி விவேகானந்தர்)

கிருதயுகத்தில் பிராம்மணர்களுடைய ஆட்சி ஓங்கி நிற்கும். ஞானம் நிறைந்த அவர்கள் அற நெறி பிறழாது ஆட்சிபுரிவார்கள். அப்பொழுது மக்கள் அறவழி நின்று அறத்தின் மூலம் வரும் தூய இன்பத்தை அனுபவிப்பார்கள். திரேதாயுகத்தில் க்ஷத்திரியர்கள் ஆட்சி ஓங்கி நிற்கும். வீரமும் பராக்கிரமும் நிறைந்த வாழ்வு மக்களிடையே ஓங்கி நிற்கும். தீமையை அகற்றி நல்லதைப் பாதுகாக்கும் வீரச்செயல்களின் மூலம் வரும் இன்பத்தை அப்பொழுது மக்கள் அனுபவிப்பார்கள். துவாபரயுகத்தில் வைசியர்களுடைய ஆட்சி நிகழும். பொருள் வளமும் போகப் பொருள்களும் அப்பொழுது நிறைந்திருக்கும். மக்கள் யாவரும் வறுமையின்றிச் செல்வத்தின் மூலம் வரும் இன்பத்தை அப்பொழுது அனுபவிப்பார்கள். கலியுகத்தில் சூத்திரர்களுடைய ஆட்சி ஓங்கும். அப்பொழுது எங்கும் சுயநலமும் அக்கிரமும் வளர்ச்சியடையும். மக்கள் அடிமை வாழ்வில் வரும் அற்ப இன்பத்தை அடையவே அப்பொழுது விரும்புவார்கள்.

கிருதயுகத்திலுள்ள ஞானமும், திரேதாயுகத்திலுள்ள வீரமும், துவாபரயுகத்திலுள்ள செல்வமும், கலியுகத்திலுள்ள சமரசமும் ஒன்று சேர்ந்து ஒரு சமுதாயம் அமையுமானல் அதுதான் இலட்சிய சமுதாயமாகும்.

ஜாதிபேதங்கள் ஒழிந்து மெய் அறிவு ஓங்கி அமைதியும் சமரசமும் நிலவும் சத்தியயுகம் விரைவில் வருமென்று நான் நம்புகிறேன். சத்தியயுகத்தைப் பற்றிய கருத்து இந்தியாவைப் புத்துயிர் பெறச்செய்யும். இளைஞர்களே! இதை நம்புங்கள். ஊக்கத்துடன் உங்களைப் பணியில் ஈடுபடுத்துங்கள். யாண்டும் புராதன இந்து மதத்தைப் போற்றுங்கள். என் இளைஞர்களே! எழுந்திருங்கள்! ஊக்கம் நிறைந்தவர்களாக இருங்கள்! வெற்றி நிச்சயமாக நமக்குக் கிடைக்கும்!

உழவர்கள் வாழும் குடிசைகளிலிருந்தும், மீனவர்கள் வாழும் குடிசைகளிலிருந்தும், சக்கிலியர்கள் வாழும் குடிசைகளிலிருந்தும், தோட்டிகள் வாழும் குடிசைகளிலிருந்தும் புது இந்தியா உருவாகட்டும். தொழிற்சாலைகள், கடை வீதிகள், சந்தைகள் ஆகியவற்றிலிருந்து புதிய இந்தியா வெளித் தோன்றட்டும். தோட்டங்களிலிருந்தும் ஆரண்யங்களிலிருந்தும் மலைகளிலிருந்தும் புது இந்தியா தோன்றி வரட்டும்.

இறந்தகாலத்தின் எலும்புக் கூடுகளே! உங்கள் முன் இதோ உங்கள் வாரிசுகள் நிற்கின்றனர்கள். உருவாகப் போகும் இந்தியா உங்கள் முன் நிற்கின்றது. உங்களிடமுள்ள பெருநிதிப் பெட்டகங்களையும் ஆபரணங்களையும் அவர்களிடம் வீசி எறியுங்கள். இதை எவ்வளவு விரைவில் செய்யமுடியுமோ அவ்வளவு விரைவில் செய்யுங்கள். இதை விரைவில் செய்துவிட்டுக் காற்றில் கலந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோய்விடுங்கள். உங்கள் காதுகளை மட்டும் திறந்து வைத்திருங்கள். நீங்கள் மறைந்துபோகும் அக்கணமே புத்துணர்ச்சி பெற்றபாரதத்தின் முழக்கத்தைக் கேட்பீர்கள்.

எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நமது தாயகமாகிய பாரததேவி அழிவற்ற அரியணை மீது இளமையுடையவளாகவும் முன்பு எப்போதும் இருந்ததைவிட மகிமையுடையவளாகவும் அமர்ந்திருப்பதைக் காண்பீர்கள்.

தாயும், தாய்நாடும் போற்றப்படவேண்டும். நம் பாரத அன்னை போற்றுதற்குரியவள். புனிதம் நிறைந்தது நம் பாரதம். பாரதத்தின் ஒவ்வொரு தூசும் புனிதம் நிறைந்ததாக எனக்குத் தென்படுகின்றது. சாந்தமும் அமைதியும் வேண்டுமென்று மற்ற நாட்டினர் நம் பாரதத்திற்கு வருகின்றனர்கள். நம் பாரதத்தாய் உலகெங்கும் ஞானத்தையும் சாந்தத்தையும் அமைதியையும் அளிக்கப்போகின்றாள். அக்காலம் விரைவில் வரப்போகின்றது. என் இளைஞர்களே! அதைக்காண எழுந்திருங்கள்! தாய்நாட்டின் பெருமைக்கு நீங்கள் பாடுபடுங்கள். அயராத உழைப்பின்மூலம் நம் பாரதத்தாய் விரைவில் அம்மகிமையைப் பெறுவதற்கு உதவி செய்வீர்களாக. இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவது பாரதக் குழந்தைகளாகிய உங்களுக்கே இயலும். இதில் நம்பிக்கை வையுங்கள். வெற்றி அடைவீர்கள்.

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ல் விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[262ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ண பரமாத்மா யக்ஞத்தைப் பற்றிக் கூறியதாவது :

सहयज्ञाः प्रजाः सृष्ट्वापुरोवाच प्रजापतिः ।

अनेन प्रसविष्यध्वमेषवोऽस्त्विष्टकामधुक् ॥

ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வாபுரோவாச ப்ரஜாபதி:
அனேன ப்ரஸவிஷ்யத்வம் ஏஷவோ அஸ்து இஷ்ட காமதுக். (3-10)

சிருஷ்டி துவக்கத்தில் பிரம்மதேவன் யக்ஞத்தோடே பிரஜைகளைப் படைத்து, 'இதனால் விருத்தி அடையுங்கள்; இது உங்களுக்குக் காமதேனுவாகட்டும்' என்றார்.

பிரஜாபதி பிரம்மதேவன் ஆகின்றார். அவர் பிரஜைகளை உண்டுபண்ணிய அதே சமயத்தில் யக்ஞத்தையும் படைத்து அதைப் பிரஜைகளிடம் ஒப்புவித்து "நீங்கள் முன்னேற்றம் அடைவதற்குரிய காமதேனுவாக இந்த யக்ஞம் இருக்கட்டும்" என்றார். காமதேனு வசிஷ்ட மகரிஷி ஆஸ்ரமத்தில் இருந்தது. ஒரு சமயம் விசுவாமித்திரர் தம் பெரும் படையோடு வசிஷ்டர் ஆஸ்ரமத்துக்குச் சென்றிருந்தார். ஆங்குச் சிறிது நேரம் ஓய்வு எடுத்த பின் தாம் திரும்புவதாக விசுவாமித்திரர் கூறினார். "நீங்கள் அனைவரும் உண்டு பசியாறிப் போக வேண்டும்" என்று வசிஷ்டர் கூறினார். "நாங்கள் பெரும் கூட்டமாக இருக்கின்றோம். எங்கள் அனைவருக்கும் உங்களால் உண வளிக்க இயலாது" என்றார் விசுவாமித்திரர். "ஆஸ்ரமத்துக்கு வந்தவர்கள் உணவேற்றுக் கொண்டுதான் திரும்பவேண்டும். ஆகவே நீங்கள் அனைவரும் உணவு எடுக்காது செல்லலாகாது" என்றார் வசிஷ்டர். இந்த ஆஸ்ரமத்தில் இவ்வளவு பேருக்கு உணவு எங்கே கிடைக்கப் போகின்றது? வசிஷ்டருடைய சொல்லையும் மீற முடியவில்லை. அரை மனதாக விசுவாமித்திரர் ஒத்துக்கொண்டார். ராஜரீதியாக அனைவருக்கும் உபசாரம் நடந்தது. ஆங்கு நடந்த அற்புதமான ஏற்பாட்டைப் பார்த்து விசுவாமித்திரர் பிரமித்துப் போய்விட்டார். இவ்வளவு விமரிசையாக விருந்து நடந்ததற்கு வசிஷ்டரிடமிருந்த நந்தினி என்னும் பசுவே காரணம் என்பது விசுவாமித்திரருக்குத் தெரிய வந்தது. இத்தகைய நந்தினி என்னும் பசு வசிஷ்டருக்குத் தேவை இல்லை. மேலும் நல்ல பொருள் எங்கிருந்தாலும் அதை அரசன் உரிமையாக்கிக் கொள்ளலாம். எனவே, வசிஷ்டரிடமுள்ள நந்தினி பசுவை விசுவாமித்திரர் தாம் எடுத்துக் கொண்டு போவதாகக் கூறினார். அதற்கு வசிஷ்டர் கூறியதாவது: "அப்பசுவை எடுத்துக்கொண்டு போய் உங்களால் பரிபாலிக்க முடியாது. எனவே அதை எடுத்துச் செல்கின்ற எண்ணம் வேண்டாம்." பசுவை விட்டு விட்டுப் போக விசுவாமித்திரருடைய மனம் சம்மதிக்கவில்லை. வசிஷ்டர் சொல்லை மீறிப் பசுவை அபகரிக்க முயன்றார். ஆனால் அதில் விசுவாமித்திரர் தோல்வியடைந்தார். இதையொட்டி மகாபாரதத்திலும் ஒரு நிகழ்ச்சி வருகின்றது. பாண்டவர்கள் வனவாச காலத்தில் அதிதிசேவை செய்வதற்குச் சாத்தியமில்லாதிருந்தபொழுது வருத்தமடைந்தனர். அப்பொழுது சூரிய பகவான் அவர்களுக்கு அட்சய பாத்திரம் ஒன்றைக் கொடுத்தார். அவ் அட்சய பாத்திரத்தினுடைய மகிமையாவது : அதன் துணைகொண்டு வருகின்றவர்கள் எத்தனை பேர்களாக இருந்தாலும் அவ்வளவு பேர்களுக்கும் உணவு படைக்க முடியும். ஆனால் பாண்டவர்களும் திரௌபதி தேவியும் சாப்பிட்டு முடித்து விடுவார்களானால் மேற்கொண்டு அன்றையதினம் அதிலிருந்து உணவு பெற முடியாது. இந்த அட்சய பாத்திரத்தின் துணைகொண்டு தங்களை நாடி வந்த அதிதிகளுக்கெல்லாம் பாண்டவர்கள் வேண்டியவாறு உணவு படைத்தார்கள். காமதேனு, அக்ஷயபாத்திரம் போன்றவைகள் பண்பாட்டுக்குச் சின்னங்களாக அமைந்திருக்கின்றன. நாம் பண்பாடு அடைகின்ற பொழுது காமதேனு அல்லது அக்ஷய பாத்திரம் நமக்குச் சொந்தமாகின்றது. நம்மிடத்திலுள்ள நலனையெல்லாம் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் மனப்

பான்மை நமக்கு வந்துவிட்டால் காமதேனு அல்லது அட்சய பாத்திரம் நமக்கு உரியதாகின்றது. நம்மிடத்துள்ள நலன்கள் நமக்கே உரியனவென்று எண்ணிப் பிறருக்கு அவற்றைப் பங்கிட்டுத்தர மறுத்தால் அவை நம்மிடத்தினின்று மறைந்து போகும். இது வாழ்க்கையைப் பற்றிய ஒரு பெரிய தத்துவமாகும்.

வழங்கும் மனப்பான்மை படைத்தவர்கள் காமதேனு அல்லது அட்சய பாத்திரத்திற்கு நிகராகின்றார்கள். சமீபகாலத்தில் பழனியில் சாது சுவாமி என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் ஆஸ்ரமத்தில் நாள்தோறும் பெரிய அளவில் அன்னதானம் நிகழ்ந்து கொண்டு வந்தது. அவர் காசைத் தொட மாட்டார். அன்னதானத்துக்காகப் பணம் தர வருபவர்களிடம் கடை ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டி அக்கடைக்காரனிடம் பணத்தைக் கொடுக்கும்படி கூறிவிடுவார். அக்கடைக்காரனிடம் அவர் கூறி இருந்ததாவது: "உன்னிடம் வந்து யாராவது பணம் கொடுத்தால் அதை வாங்கிக்கொள். பிறகு ஆஸ்ரமத்துக்குக் கேட்கும் பொருளை நீ கொடுத்துக்கொண்டே இரு. நான் கணக்கு ஏதும் வைத்துக்கொண்டிருக்கமாட்டேன். நீ ஒழுங்காக நடந்து கொள்ளுதல் வேண்டும். கணக்கு வைக்க வேண்டியது உன் பொறுப்பு." அன்னதானம் முறையாக நடந்துகொண்டிருந்தது. கடைக்காரனும் அன்னதானத்துக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துக்கொண்டே இருந்தான். கடைக்காரனுக்கும் யாரோ பணம் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். மாதக்கடைசியில் கணக்குப் பார்த்தபொழுது வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்தது. இது தென்னாட்டு நிகழ்ச்சியாகும்.

வடநாட்டில் காலேகம்பளிவாலா என்ற ஒரு சாது இருந்தார். அவர் பத்ரிநாத், கேதாரநாத் யாத்திரை போய் வருபவர்கள் வழியில் தங்குவதற்கும் உணவுக்கும் வசதியில்லாது கஷ்டப்படுவதைக் கண்டார். அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்ப்பதற்குப் பத்ரிநாத், கேதாரநாத் போகின்ற வழியில் தர்மசாலைகள் கட்டி யாத்ரிகர்களுக்கு உணவு வசதியும் குளிருக்குக் கம்பளம் கொடுக்க ஏற்பாடும் செய்யவேண்டுமென்று எண்ணினார். இதற்கு வேண்டிய நிதி திரட்டப் பம்பாய், கல்கத்தாவிலுள்ள சில பிரமுகர்களை அணுகினார். அவர்களிடம் அவர் பகர்ந்ததாவது: "நான் பத்ரி, கேதாரநாத் யாத்திரை செல்பவர்களுடைய துயரத்தைப் போக்குவதற்கு வழியில் தர்மசாலைகள் கட்ட வேண்டும். அதற்கு எனக்கு நாள்தோறும் பணம் வந்துகொண்டே இருக்கவேண்டும். அப்படி வராவிட்டால் நான் வெட்டவெளியில் நின்று தபசு செய்வேன்." அவர் கேட்டபடி பணம் கொடுத்தார்கள். பணம் வராதபொழுது வெட்டவெளியில் நின்று தபசு செய்வார். அவர் தபசு செய்வதைப் பார்த்தவர்கள் உடனே பணம் தந்துவிடுவார்கள். அப்படி வந்த பணத்தைக்கொண்டு பத்ரிநாத், கேதாரநாத் செல்லும் வழிநெடுகிலும் தர்மசாலைகளைக் கட்டினார். இன்னும் அத்தர்ம சாலைகளில் யாத்ரிகர்களுக்கு உணவும் கம்பளி உடையும் இலவசமாகத் தந்துகொண்டு இருக்கிறார்கள். அந்தச் சாது செய்த யாகம் அத்தகையதாகும்.

பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய திரவியங்களுள் காமதேனுவோடு கற்பகவிருக்ஷமும் ஒன்றாகும். கற்பக விருக்ஷத்தின் கீழ் இருந்து கொண்டு நாம் விரும்பியதையெல்லாம் பெறலாம். ஸ்தாவர உலகில் தென்னைமரம் கற்பக விருக்ஷமாக இருக்கின்றது. அதுநமக்குஉணவும் பானமும்தருவதோடுவீடுகட்டுவதற்குக்கீற்றும் தருகின்றது. அதனுடைய பன்னாடை ஆடையாகவும் உபயோகப்படுத்தப்படுகின்றது. 1934ஆம்ஆண்டில்பீகாரில்பூகம்பம்வந்தபோது மக்கள் துணி இல்லாது அதைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆக, உணவு, பானம், உடை, வீடு ஆகிய எல்லாவற்றையும் தரக்கூடியதாகத் தென்னை மரம் இருக்கிறது. அதனால் நாம் அதைக் கற்பக விருக்ஷம் என்கின்றோம். விலங்குகளுக்கிடையில் நாம் வளர்க்கும் பசு காமதேனுவாக இருக்கின்றது. நாம் அதற்குப் புல், வைக்கோல், தட்டை போன்றவற்றை உணவாகத் தருகின்றோம். அது நமக்கு அருமையான பால் தருகின்றது. அதன் மலம், மூத்திரம் நமக்கு நன்கு பயன்பட்டு வருகின்றன. எனவே நாம் பசுவைக் கோமாதா என்று அழைக்கின்றோம். உலகில் வாழத் தெரிந்த மனிதன் கற்பகவிருக்ஷமாகவும் காமதேனு

வாகவும் இருக்கின்றான். மனிதன் தன் மனதை மாற்றி அமைத்துக்கொள்வானானால் அவன் செய்வது யக்ஞச் செயல் ஆகிறது. அவரவர் தரத்துக்கு ஏற்றவாறு சிறிய அளவில் அல்லது பெரிய அளவில் யக்ஞம் செய்யலாம். மனம் பண்பட்டதாக மாறி அமையும் பொழுது மனிதனுக்குப் புதிய கர்மபந்தம் உண்டாவதில்லை. பழைய கர்ம பந்தத்திலிருந்து யக்ஞச் செயல் மூலம் அவன் தன்னை விடுவித்துக்கொள்கின்றான். அறியாமையினால் பல பிறவிகளில் நாம் கர்மபந்தத்தை வளர்த்துக்கொண்டு வந்துள்ளோம். கணக்கிட முடியாத அளவு நம்மிடம் கர்மம் இருக்கின்றது. கர்மத்தின் விளைவாக நாம் பிறவி எடுக்கின்றோம். பிறவி எடுக்க எடுக்கப் புதிய கர்மபந்தம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதற்கு முடிவே இல்லை. இப்பரிதாபகரமான நிலையிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு நாம் பரத்தை அடையமுடியும். பூலோக வாழ்வைச் சொர்க்கமாக மாற்றியமைக்க முடியும். அதற்கு நாம் யக்ஞசொருபமாக மாறி அமையவேண்டும்.

தத்துவத்தை அறிந்துகொண்டால் நாம் செய்யும் எந்தச் செயலையும் யக்ஞச் செயலாக மாற்றி அமைக்கமுடியும். வியாபாரத் தொழில் செய்யும் ஒருவனை எடுத்துக்கொள்வோம். வியாபாரி ஒருவன் சுயநலம் கருதாது மக்கள் நலன் கருதி மக்களுக்குத் தேவையான பொருள்களை நியாயமான முறையில் நியாயமான லாபத்துக்கு வழங்குவானானால் அவன் செய்யும் வியாபாரம் யாகமாகின்றது. வருஷக் கடைசியில் வரும் லாபத்தின் ஒரு பகுதியைப் பொது நலனுக்கென்று ஒதுக்கினால் அது யாகம்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்

என்பது வள்ளுவர் வாக்கு.

நாம்வேறு பிறர் வேறு அல்லர். பொருளுக்கு ஏற்ற விலை கொடுக்கவேண்டும். நம்நாட்டில் தயாராகும் கார்களைத்தான் மக்கள் வாங்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் திட்டம். கார் தயாரிப்பாளர்களுக்குப் பெரும் லாபம் கிடைக்கும்படி விலை நிர்ணயித்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அதன்மூலம் நல்ல வரி கிடைக்கின்றது. ஆனால் காரின் தரம் மிக மோசமாக இருக்கின்றது. கார் வாங்கிய நாள் முதல் அதைப் பழுதுபார்க்கச் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டியதாய் உள்ளது. அரசாங்கம் வெளியிடும் பாடப் புத்தகத்தைத் தான் எல்லாரும் வாங்கவேண்டும். அப்பாடப் புத்தகங்களில் எழுத்துப் பிழைகள் ஏராளமாக இருக்கின்றன. இவைகளெல்லாம் யக்ஞச் செயல்களல்ல.

சென்னையில் ஸ்பென்சர் கம்பெனி, அடிசன் கம்பெனி, சைனா பஜார் ஆகிய இடங்களில் முன்பு வாட்டர்மென், ஸ்வான், ப்ளாக் போர்டு ஆகிய பேனாக்கள் விலைக்கு விற்கப்பட்டன. அவற்றுள் முதல் தரமானது வாட்டர் மென். இரண்டாம் தரமானது ஸ்வான். மூன்றாம் தரமானது ப்ளாக் போர்டு. ஸ்பென்சர் கம்பெனியிலும், அடிசன் கம்பெனியிலும் பேனா வேண்டுமென்று கேட்டால் மூன்று தரத்திலுள்ள பேனாக்களையும் காட்டி விலை கூறுவார்கள். நாம் வேண்டுமென்று கேட்கும் தரத்தில் பத்துப் பேனாக்களைக் கொண்டுவந்து கொடுத்து எழுதச்சொல்வார்கள். நம் கைக்கு ஒத்துக்கொள்ளும் அமைப்புள்ள பேனாவை எடுத்துக்கொடுப்பார்கள். வீட்டுக்குக் கொண்டு போய் எழுதிப்பார்த்து ஒத்துக்கொள்ளாவிட்டால் திருப்பிக் கொண்டு வரச்சொல்லி வேறு பேனா மாற்றித்தருவார்கள். ஆனால் சைனா பஜாரில் பேனாவின்விலை குறைவாக இருக்கும். அங்கிருந்து பேனாவை வாங்கிவந்து எழுதிப் பார்த்தபின் சரியாக இல்லையென்று திருப்பிக் கொண்டுபோனால் அவர்கள் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். முதலிலேயே எழுதிப் பார்த்து விட்டு வாங்கிக்கொண்டு போயிருக்கவேண்டுமென்று கூறி வேறு பேனா மாற்றித்தர மறுத்துவிடுவார்கள். இது சரியான மனப்பான்மையன்று. ஸ்பென்சர் கம்பெனியாரும், அடிசன் கம்பெனியாரும், வியாபாரத்தைச் சரியான மனத்தோடு செய்தார்கள். அவர்கள் செய்ததுபோன்று சேவை மனப்பான்மையோடு செய்வதுதான் யாகமாகும். மேல்நாடுகளில் ஒரு கடைக்குச் சென்று நாம் கேட்கும் பொருள் அங்கு இல்லாவிட்டால் நாம் கேட்கின்ற பொருள் கிடைக்குமிடத்திற்கு வழி காட்டி நம்மை அங்கு அனுப்பிவைப்பார்கள். அத்தகைய சேவை மனப்பான்மையோடு செய்

யும் செயல்தான் யக்ஞச் செயலாகும். நாம் கேட்கும் பொருள் அவர்களிடம் இல்லாவிட்டால் அப்பொருளின் விலையைக் குறைத்துக் கூறி இன்னும் நான்கு நாள் கழித்து வந்தால் தருகிறோம் என்று கூறுவார்கள். வேறு கடைக்கு நம்மைப் போகாது தடுக்க உபாயத்தைக் கையாளுவார்கள். இது சுயநல மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. இது யக்ஞமாகாது.

மனிதன் பல ஜன்மாந்தரங்களில் தனக்கென்றே தேடும் செயலில் ஈடுபட்டு வாழ்ந்து வந்திருக்கின்றான். அது பலருக்கு விளங்குவதில்லை. கோவிலுக்குச் சென்று கடவுளிடம் தனக்கு இன்னது வேண்டுமென்று பிரார்த்திப்பது காமியப் பிரார்த்தனையாகும்; அது சுய நலத்தை வளர்க்குமேயன்றி யக்ஞமாகாது. சுயநலத்தை வளர்க்கும் கர்மங்கள் கர்மகாண்டம் என்று சொல்லப்படுகின்றன. கர்மத்தைப் பயன்படுத்தித் தனக்கு வேண்டிய ஊதியத்தைப் பெறுவது கர்மகாண்டமாகும். கர்ம பலத் தியாகம் செய்வதே யக்ஞமாகும். சிலர் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தால் கனகாபிஷேகம் செய்கிறோம் என்றும், கண்நோய் வந்தவர்கள் அந்த நோய் சரியாகி விட்டால் வெள்ளியில் கண் செய்துவைக்கிறோம் என்றும் வேண்டுதல் செய்துகொள்வார்கள். இவைகளெல்லாம் கர்மகாண்டத்தைச் சேர்ந்தவை. சிலர் தாங்கள் நீண்ட நாள் வாழவேண்டுமென்று ஆயுள் ஹோமம் செய்வார்கள். தாங்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று அர்ச்சனை செய்வார்கள். தாங்கள் சுகவாசிகளாக இருக்கவேண்டுமென்று சில உற்சவங்கள் செய்வதற்குத் தங்கள் பெயரில் கட்டளைகள் ஏற்படுத்திக் கொள்வார்கள். இவைகள் எல்லாம் கர்மகாண்டத்தின் வெவ்வேறு தோற்றங்களாகும். வியாபாரத்தில் வரும் லாபத்தின் ஒரு பகுதியைக் கடவுள் பெயரால் சமுதாய நலனுக்குச் செலவு செய்வது யக்ஞமாகும். அதே போன்று விவசாயி நிலத்தில் விளைந்து வந்த விளைச்சலில் நல்லதை எடுத்துத் தெய்வத்துக்குக் கொடுத்து, தெய்வப் பிரசாதமாக அப்பொருள் மக்களுக்கிடையில் வழங்கப்படுமானால் அது யக்ஞச் செயலாகும். நெற்கதிரில் நல்லவற்றைப் பொறுக்கி எடுத்துச் சாமரம் போன்று கட்டி கணபதிக்குப் படைப்பார்கள். பிறகு அதைப் பொங்கலிட்டுப் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவார்கள். அது சுயநலத் தியாகம் எனப்படும். சம்பளம் வாங்குபவர்கள் சம்பளத்தின் ஒரு பகுதியைக் கடவுள் பெயரால் நல்ல காரியத்துக்குச் செலவிடுவது சுயநலத்தியாகம் எனப்படும். முன்பு திருப்பதியில் வெங்கடாசலபதிக்கு உண்டியலில் போட்ட நகைகளை எல்லாம் ஏலம்போடுவார்கள். சென்னையிலுள்ள சில வியாபாரிகள் ஒன்று கூடிப் பேசிக்கொண்டு அவற்றைக் குறைந்த விலைக்கு ஏலம் எடுப்பார்கள். பிறகு தங்களுக்கிடையில் ஏலம் போட்டு நியாயமான விலைக்கு எடுத்துக்கொள்வார்கள். அதில் வந்த லாபத்தின் ஒரு பகுதியை வெங்கடாசலபதிக்குக் கொடுப்பார்கள். இவர்களுடைய செயல் கடவுள் தலையிலேயே கைவைக்கின்ற செயலாக இருக்கின்றது. கோவில் சொத்தைத் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்பவர்களைக் கோவில் பெருச்சாளி என்று சொல்லுவார்கள். இவர்களுடைய செயல் சுயநலச் செயலாகும். அது யக்ஞமன்று.

பண்டைக் காலத்தில் பிரம்மாண்டமான ஆலயங்கள் எழுப்பினார்கள். அக்கால மக்கள் தியாக உள்ளத்தோடு செயல் பட்டதால் அவ்வளவு பெரிய காரியம் செய்வது சாத்தியமாயிற்று. தங்களுடைய சொத்துக்களைக் கோயில் சொத்தாகச் செய்து பொது மக்களுக்குப் பயன்படும்படியாகச் செய்தார்கள். இன்றைக்குப் பொதுச் சொத்துக்களை எல்லாம் எடுத்துத் தனிப்பட்ட மனிதனுக்கு உரிமையாக்கிச் சுயநலத்தை வளர்த்து வருகிறார்கள். இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் உணவுப்பொருள்களை எல்லா மக்களுக்கும் பிரசாதமாக வழங்கும்பொழுது அது யக்ஞச் செயலாகிறது. தெய்வத்துக்கு அபிஷேகப் பொருள் தந்தவர் உள்ளத்தில் ஒரு புனித உணர்வைப் பெறுகின்றார். அபிஷேகப் பொருள்களைத் தெய்வப் பிரசாதமாக ஏற்றுக்கொள்பவர்களும் உள்ளத்தில் புனித உணர்வைப் பெறுகின்றார்கள். இங்ஙனம் மக்களுடைய உள்ளத்தில் புனித உணர்வையும், தியாக உணர்வையும் வளர்க்கும் செயல்களெல்லாம் யக்ஞச் செயல்களாகின்றன. (தொடரும்)

புரந்தரதாசர் சரிதம்

(251 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரந்தரதாசர் திருவேங்கடத்தான் சன்னிதியில் இருந்து வீடு வந்து சேர்ந்தார். புரந்தரியை வணங்கி 'அம்மையே! உம் அருளினல் திருவேங்கடத்தான் தரிசனம் பெற்றேன். திருவேங்கடத்தான் உம்மைக் குருவாக ஏற்கும்படி எனக்குத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். எனவே என்னை முக்தனுக்கும் செயலையும் பகவான் ஆணைப்படி செய்தருள்வீராக. உங்கள் உபதேசத்தைப் பெறுதற்குரிய மனப் பக்குவத்தைத் தந்து பகவானேடு ஐக்கியமாகுமாறு என்னை இரட்சிக்க வேண்டுமென்று உங்களிடம் நான் சரண்புகுகின்றேன்' என்று கூறிப் புரந்தரியின் திருவடிகளில் வீழ்ந்தார். புரந்தரி பகர்ந்ததாவது: ''பக்த சிகாமணியே! நான் என் நிலையை எண்ணிச் சற்றுச் சங்கடமான நிலையில் இருக்கின்றேன். நீர் சிறந்த பக்திமான். உமக்கு உபதேசம் செய்யும் நிலையில் என்னைப் பகவான் வைத்திருப்பது விந்தைக்குரியதாயிருக்கிறது. நீங்களோ பகவானின் காட்சியைப் பெற்றுவிட்டீர்கள். இனி உங்களுக்கு உபதேசம் எதற்கு? இருப்பினும் பகவானது ஆணையும் உங்களுடைய திருவுள்ளமும் பூர்த்தியாகுமாறு முருகப் பெருமான் சிவ பெருமானுக்கு உபதேசம் செய்தது போன்று உங்களுக்கு நான் உபதேசிக்கிறேன்.

"ஜீவன் யார்? பிரபஞ்சம் எது? ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? ஐயம் திரிபின்றி கல்வி கேள்விகளாலும் ஆச்சாரியருடைய உபதேசத்தினுலும் மேற்கூறியவற்றைப்பற்றி அறிகின்ற அன்பர்க்குத்தான் மெய்யுணர்வு உண்டாகும். நாம் காணும் இவ்வுலகப் பொருட்கள் நிலையானவை அல்ல. அவை நிலையுடையன என்று நம்மை நம்ப வைப்பதே மாயையின் செயலாகும். மாயையின் செயலுக்கு வசப்பட்டு ஜீவன் பல பிறப்புக்கள் எடுக்கின்ருன். பிறப்புக்களின் வாயிலாக ஜீவன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு வருகின்ருன். மனபரிபாகம் ஏற்படுகின்றபோது இவ்வுலகத்தின் செயல் நாடகம் போன்று தென்படுகின்றது. நாடகம் முடிந்தவுடன் நாடகத்தில் அரசனுக நடித்தவன் தான் அரசனல்லன் என்பதை உணர்கின்ருன். அதே போன்று மனபரிபாகம் ஏற்படுகின்றபோது இவ்வுலகக் காட்சி மெய்யானதன்று என்பதை உணர்கின்ருன். இவ்வுலக விஷயங்களில் செல்லும் புலன்களை அடக்கித் தம் கைவசம் கொண்டு வருவதே பற்றற்ற நிலையாகும். பற்று நீங்கியவனுக்குத் துன்பம் அகலுகிறது. 'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்' என்பது கோட்பாடு. உள்ளத்தில் உதித்துவரும் ஆசைகளை எல்லாம் துறந்து தன்னில்தான் மகிழ்ச்சியுற்றிருப்பவன் ஸ்திரபுத்தி உடையவன் ஆகின்ருன். துன்பத்தில் மனதை உழலவிடாது இன்பத்தில் விருப்பமில்லாது பயத்தையும் கோபத்தையும் விடுத்துப் பகவானிடத்தில் புத்தியைச் செலுத்துபவன் உறுதியான அறிவு படைத்தவன் ஆகின்ருன். விஷயாதிகளில் நாம் மனதைச் செலுத்தாவிடில் அவை நம்மை விட்டுத் தாமே விலகிப் போய்விடுகின்றன. விஷயாதிகள் நம்மைவிட்டுப் போய்விட்டாலும் அவற்றை அனுபவிக்கின்ற சுகத்தை ஜீவன் பெற்றிருக்கின்ருன். பரப்பிரம்மத்தை உணர்கின்றபொழுது மனதில் இருந்து அந்தவாசனையும் நீங்கிவிடுகின்றது. தவத்தில் ஈடுபட்டிருக்கும் மகானையும் இந்திரியங்கள் இழுத்துச் செல்கின்றன. அவற்றை அடக்கி யோகத்தில் நிலை நிற்பவன் தீரன் ஆகின்ருன். விஷயாதிகளைப்பற்றி நினைக்கும்பொழுது பற்று உண்டாகிறது. பற்று ஆசையாகவும் ஆசை கோபமாகவும் வடிவெடுக்கின்றது. கோபத்தால் மயக்கமும் மயக்கத்தால் புத்தி நாசமும், புத்தி நாசத்தால் ஆள் அழியவும் செய்கின்ருன். விருப்பு வெறுப்பின்றி மனதை நடுநிலையில் வைத்திருப்பவனே யோகியாகின்ருன். யோக மில்லாதவனுக்கு அமைதியில்லை. அமைதியில்லாதவனுக்கு ஆனந்தமில்லை.

"வேதங்களும் உபநிடதங்களும் விளக்கும் பிரம்ம வித்தையைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இருப்பினும் அதை அடியேனது வாயினின்றும் வெளிப்படுத்துவது பகவானுடைய திருவுளம் போலும். தாங்கள் பிரம்ம ஞானம்

பெற்றுப் பிரம்மத்தில் ஐக்கியமாகி அனைவருடைய அக்ஞானத்தையும் போக்கி அனைவரும் உய்யும் வகை செய்வீராக.'' இங்ஙனம் புரந்தரி உபதேசம் செய்தாள். இவ்வுபதேசத்தைப் பெற்றபின் புரந்தரதாசர் சில நாட்கள் புரந்தரியின் இல்லத்தில் வசித்து வந்தார். சில நாட்களுக்குப் பின்பு புரந்தரியின் அனுமதி பெற்றுப் பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றார். ஆங்காங்குத் தம்முடைய போதனையினால் பலரிடத்து ஞான விழிப்பை உண்டாக்கினார். இறுதியில் வேமனபுரி வந்து சேர்ந்தார்.

கிஷ்கிந்தாபுரியில் ருக்மணிபாய் தன் மாமனார் வீட்டில் யாவரும் மனமுவக்கும் வண்ணம் நடந்து வந்தாள். தந்தையைப் போன்றே பகவத் சிந்தனையில் யாண்டும் ஈடுபட்டவளாக இருந்தாள். அவள் மங்கைப்பருவம் அடைந்த செய்தியை அவரது மாமனார் கேசவராவ் வேமனபுரியிலிருந்த புரந்தரதாசருக்குத் தெரிவித்தார். மகளின் ருதுசாந்திக்கு என்ன செய்வதென்று எண்ணி லக்ஷ்மிபாய் சிறிது வருத்தமடைந்தாள். தன் மகளுடைய ருது சாந்திக்குச் சீர்செய்வதற்கு வேண்டிய பொருள் தன்னிடம் இல்லாத நிலையைக் குறித்துச் சற்று மனத்தாங்கல் அடைந்தாள். பக்தர்களின் துக்கத்தைப் போக்குவது பகவானுடைய செயலாகும். பகவான் தாமே வண்டிகள் நிறையச் சாமான்களை ஏற்றிக்கொண்டு கேசவராவ் வீட்டுக்குப் புரந்தரதாசரின் வேஷத்தில் சென்றார். விலை மதிக்க முடியாத சாமான்களைச்சீர்வரிசையாகக் கேசவராவ் வீட்டில் கொண்டு போய் இறக்கினார். ருக்மணிபாயின் ருதுசாந்தி வைபவம் கல்யாண வைபவத்தைக் காட்டிலும் விமரிசையாக நடந்தது. அவ்வைபவத்தில் கலந்து கொண்டவர் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தவராகப் பெரும் பொருளையும் பெற்றுச் சென்றார்கள். பகவான் புரந்தரதாசரின் வேடம் தரித்து லக்ஷ்மிபாயின் ருதுசாந்தியைச் சீரும் சிறப்புமாக நடத்திய செய்தியை அறிந்த புரந்தரதாசர் பகவானிடம் பிரார்த்தித்ததாவது: "பண்டரிநாதா! என் குமாரத்தி மனமகிழும்படி என்னுடைய வேடத்தில் அவளுக்கு வேண்டிய வரிசையை எடுத்துச் சென்றீர். உம்மிடத்து நிஷ்காமிய பக்தி செய்ய அருள்புரிவீராக."

புரந்தரதாசரின் தந்தையின் சிரார்த்த தினம் வந்தது. சிரார்த்தத்துக்கு வேண்டிய நெய் தம் ஊரில் கிடைக்காததால் தம் சிஷ்யர் அப்பண்ணுவிடம் குடமும் பணமும் கொடுத்துப் பண்டரிபுரம் சென்று வாங்கி வரும்படி கூறினார். அப்பண்ணு நெய் வாங்கிக்கொண்டு வருகையில் வழியில் பகவான் சுங்கச்சாவடி ஒன்றை ஏற்படுத்தி நின்று கொண்டிருந்தார். அப்பண்ணு சுங்கச்சாவடியை நெருங்கியதும் அவரை அங்கேயே நிறுத்திச் சுங்கத்திற்குப் பணம் கேட்டார். கொண்டு சென்ற பணத்தை நெய் வாங்குவதில் அப்பண்ணுசெலவழித்துவிட்டார். சுங்கப்பணம் செலுத்தக் கையில் பணம் இல்லை. தீர்வை செலுத்தத் தம்மிடம் பணம் இல்லை என்று கூறிச் சுங்கத் தீர்வையைத் தவிர்க்கும்படி வேண்டிக்கொண்டார். அதற்குச் சுங்கச் சாவடிக்காரன் "இது சர்க்கார் பணம். இதை நீ செலுத்தித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் நெய்க்குடம் பறிமுதல் ஆகிவிடும்'' என்று கூறினார்.

நெய்க்குடத்தைப் பறிகொடுத்து விட்டு, அப்பண்ணுவேறு வழியில்லாது ஏக்கத்துடன் புரந்தரதாசர் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். புரந்தரதாசருடைய தந்தையின் சிரார்த்தச் சடங்கு நின்று விடாதிருக்கும் பொருட்டுப் பகவானே அப்பண்ணுவின் வேஷத்தில் நெய்க்குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு புரந்தரதாசர்வீட்டிற்குச் சென்றார். சிரார்த்த காரியம்எவ்விதத் தடையுமின்றி முடிந்தது. அப்பண்ணு வடிவத்தில் நெய்க்குடம் கொண்டு வந்தது இறைவன் என்பதைப் பிறகு புரந்தரதாசர் அறிந்தார்.

புரந்தரதாசருடைய மனதிலும் சிறுகுற்றம் இருந்தது. தம்மைக் குருவாகவும் ஏனையோர்களைத்தம்முடைய சிஷ்யர்களாகவும்கருதி அவர்கள் தமக்குத் தொண்டுபுரியவேண்டும் என்று பக்தர்களிடையே உயர்வு தாழ்வு பாராட்டும் மனநிலையில் புரந்தரதாசர் இருந்தார். சிஷ்யரும் தாமும் சமமானவர் என்பதை அவர் உணராத நிலையில் இருந்தார். அவரிடமிருந்த அம்மனநிலையைத் திருத்தியமைக்க வேண்டும் என்று பகவான் திருவுளம் கொண்டார்.

அவ்வூரில் லீலாவதி என்னும் உத்தம குணம் பொருந்திய ஏழைப் பெண் ஒருத்தி இருந்

தாள். அவளுக்குச் சிறிது பணத்தாசை இருந்தது. 'இறைவா! நான் செல்வம் படைத்தவளாகச் சில நாட்களுக்காவது வாழவேண்டும்' என்று இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டாள். அவளது எண்ணத்தை நிறைவேற்றவும் புரந்தரதாசருடைய செருக்குக்குத் தண்டனை தரவும் பகவான் ஒரு சூழ்ச்சி செய்தார். ஒருநாள் இரவு சன்னிதியில் இருந்த விலை உயர்ந்த இரத்தினமாலை ஒன்றை எடுத்துக்கொண்டு புரந்தரதாசரின் வடிவத்தில் ஏழைப் பெண் வீட்டிற்குச் சென்று, "அம்மா! நீ செல்வம் வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்தாய். இறைவன் என்னிடம் கொண்டுவந்து இதை உன்னிடம் ஒப்படைக்கும்படி கொடுத்துச் சென்றார். இதைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வாயாக" என்று கொடுத்து விட்டுச் சென்றுவிட்டார்.

பொழுது விடிந்ததும் அர்ச்சகர்கள் சன்னிதியைத் திறந்துபார்த்த பொழுது ஆங்கு இரத்தின மாலை இல்லை. மாலை களவுபோன செய்தியை அரசனிடம் ஓடோடிச் சென்று தெரிவித்தார்கள். இரத்தினமாலையைக் கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு நிறைய சன்மானம் வழங்கப்படும் என அரசன் மக்களுக்குத் தெரிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்ட லீலாவதி இரத்தினமாலையை வைத்திருந்தால் அரசனுடைய தண்டனைக்கு உள்ளாகவேண்டுமென்று எண்ணி நேரே அரசனிடம் சென்று இரத்தினமாலையை ஒப்படைத்தாள். புரந்தரதாசர்தான் இந்த மாலையைக் கொண்டு வந்து கொடுத்தார் என்ற உண்மையையும் தெரிவித்தாள். அரசனுக்குக் கோபம வந்து விட்டது. ஏவலாளரை அனுப்பிப் புரந்தரதாசரை அழைத்துவரச் சொன்னர். புரந்தரதாசரை விசாரித்தபொழுது அவர் தமக்கும் அந்த மாலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும், பகவத் சேவையில் ஈடுபட்டிருப்பதே தம் தொழில் என்றும், பொருள் பற்றை விட்டு வெகுநாள் ஆய்விட்டது என்றும் கூறினர். ஆனல் லீலாவதி இவர்தாம் தன்னிடம் கொண்டுவந்து கொடுத்தார் என்பதைத் திட்டவட்டமாகக் கூறினள். அரசன் புரந்தரதாசருக்குக் கசையடி கொடுக்கும்படி ஆணையிட்டார். அரசன் தீர்ப்பை அறிந்த புரந்தரர் அரசன் தண்டனைக்காகத் துக்கப்படவில்லை. "நான் வெகுநாளாகப் பகவத் பக்தியில் ஈடுபட்டிருந்தும், சாஸ்திர ஆராய்ச்சி செய்தும் என்னிடத்திருந்து கர்வம் நீங்கவில்லை. பக்தர்களை நான் நிந்தித்திருக்கின்றேன். நான் கொண்டிருந்த கர்வத்திற்குப் பகவான் அரசன் மூலம் நல்ல தண்டனை கொடுத்திருக்கிருர்" என்று உணர்ந்தார். அவ்வுணர்வு அவருடைய உள்ளத்தில் இருந்த செருக்கை அகற்றியது.

பகவான் அசரீரியாகக் கூறியதாவது: "அரசனே, சரிவர ஆராய்ச்சி செய்யாது குற்றமில்லாதவனைத் தண்டிக்க ஆரம்பித்துள்ளாய். இரத்தினமாலையைக்களவாடியவர்யாரென்பது அறியாது எமக்குயிர் போன்றுள்ள புரந்தரதாசரைத் தண்டிக்க முற்பட்டுள்ளாய். நீ நன்ருக யோசித்துப்பார். சந்நிதியை நன்ருகப் பூட்டிவிட்டுச் சாவியை அர்ச்சகர்கள் எடுத்துப் போய்விட்டார்கள். பூட்டப்பட்ட சந்நிதிக்குள் புரந்தரர் எப்படிப் புகுந்திருப்பார் என்று நீ யோசித்துப்பார். பொழுதுவிடிந்த பிறகும் கதவு பூட்டப்பட்டு இருந்தது என்பதை அர்ச்சகர்கள் உமக்குத் தெரிவிக்கவில்லையா? நான்தான் இந்த இரத்தின மாலையை லீலாவதியிடம்கொண்டு சேர்த்தவன். புரந்தரரின் பெருமையை உலகத்தார் அறியவும் அவர் மனச் செருக்கு நீங்கத் தண்டனை தரவும் இச்செயலை நாமே செய்தோம். புரந்தரரை விடுதலை செய்வாயாக." அவ்வசரீரி புரந்தரருக்குக் கூறியதாவது: "புரந்தரரே! எம்முடைய பக்தரெல்லாம் உமக்குச் சமமானவர் என்பதைஅறிந்து இன்னும் சிலகாலம் பக்தி புரிந்து பின்பு எம் பரமபதம் அடைவீராக."

புரந்தரர் செருக்கு நீங்கியவராக அன்று முதல் பகவானும் பக்தர்களும் ஒன்று என்பதை உணர்ந்து பக்தர்களிடம் பணிவோடும் அன்போடும் நடந்து கொண்டார். தமது சன்மார்க்க ஒழுக்கத்தினல் உலகத்தவர்களைச் சிறந்த பக்தர்களாக்கினர். அடியாருக்கும் ஆண்டவருக்கும் தொண்டு செய்து புரந்தரரும் அவரது மனைவியும் பரமபதம் அடைந்தார்கள். பகவானுக்கும் பக்தர்களுக்கும் தொண்டு செய்து புரந்தரரைப்போல் பரமபதம் அடைய நாம் முயல்வோமாக! (முற்றும்)

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[272ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெய்விக வாழ்வு நடாத்திய சுவாமி பிரேமானந்தர் தம் வாழ்நாளில் அவ்வப்பொழுது தம்மை அணுகிய பக்தர்களுக்கும் தொண்டர்களுக்கும் சீரிய வழிகாட்டும் முறையில் பல ஆன்மிக போதனைகளை மனதில் பதியும் வண்ணம் வழங்கி வந்தார். துறவு வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்க்கு மட்டுமல்லாமல் இல்லறத்தில் வாழ்ந்து வருபவர்களுக்கும் ஏற்ற விதத்தில் அவருடைய பொன்மொழிகள் அமைந்துள்ளன. வாழ்வாங்கு வாழ்ந்த சுவாமி பிரேமானந்தரின் குணாதிசயங்களை உள்ளவாறு அறிந்துகொள்வதற்கு அவருடைய சத்திய வாக்குகளே பிரமாணமாய் உள்ளன. எக்காலத்திலும் எல்லார்க்கும் நல் வழி புகட்டக்கூடிய அவருடைய வார்த்தைகளின் மூலம் பாமர மனிதனும் விழிப்புணர்ச்சி அடைவது திண்ணம்.

1. பிரம்மச்சரியம் என்பது சமய அனுஷ்டானங்களை முறை பிறழாமல் மேற்கொள்வதும், சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபடுவதும், இறை நம்பிக்கையுடனும் பக்திபூர்வமாகவும் ஜபதபங்களைச் செய்வதும் ஆகும். தவம் என்பது எதைச் சொல்கிறோமோ அதையே வாழ்வில் நடைமுறைப்படுத்துவதாகும். சம்பிரதாயமாகப் பிரம்மச்சரிய தீட்சை பெற்றுக் கொள்வதும் அதற்குரிய மந்திரங்களைக் கிளிப் பிள்ளையைப்போல் சொல்லிக்கொண்டிருப்பதும் உண்மையான பிரம்மச்சரியமாகாது.

2. பிறரிடம் குறை காண்பது உங்களுடைய வேலை அன்று. மற்றவர்களிடம் உள்ள குணங்களையும் நல்ல அம்சங்களையும் மட்டும் பார்ப்பது பண்பாடுடைய மனிதனின் செயலாகும். முறம் ஒன்று தானிய மணிகளை மட்டும் தன்னிடம் வைத்துக்கொண்டு கல், உமி போன்றவற்றை ஒதுக்கித் தள்ளிவிடுவதைப் போன்று நாம் இருக்கவேண்டும். சல்லடை போன்று வேண்டாத பொருள்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு நல்லனவற்றைப் புறக்கணித்தலாகாது.

3. பிரபஞ்சம் அனைத்துமாகவும் அதிலுள்ள எல்லா உயிர்களாகவும் பரமன் ஒருவனே இலங்கிக்கொண்டிருக்கிறான். ஒருவரை வெறுப்பதும் துன்புறுத்துவதும் அந்தப் பரம்பொருளையே உதாசீனப்படுத்துவதற்கு நிகராகும். மன்னுயிர்களுக்கு இடையறாது தொண்டு செய்வதன் மூலம் உங்கள் வாழ்வை நல்வாழ்வாக்குங்கள். சோம்பித்திரிவதைவிட ஓயாது கர்மம் செய்தபடியே உயிரை விட்டுவிடுவது சாலச் சிறந்தது.

4. திட்டத்திற்கு மேல் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு அவஸ்தைப் படாதீர்கள். உலகம் முழுவதும் இறைவனுடைய பெருந்திட்டமே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாமோ வெறும் கருவிகள் மாத்திரமே. "நானே கர்த்தா" என்னும் எண்ணம் ஒருவன் உள்ளத்தில் புகுந்துவிட்டால் அவன் பந்தப்பட்டவனாகிவிடுகிறான். அப்போது அவன் ஆற்றும் செயல்களால் ஒரு பயனும் விளைவதில்லை.

5. தற்கால விஞ்ஞானக் கல்வி ஒருபொழுதும் சாந்தியையும் ஆனந்தத்தையும் தரப் போவதில்லை. கள்ளங்கபடமற்ற குழந்தையைப் போல இருங்கள். எல்லா விஷயங்களிலும் நேர்மையைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்குள் அளவிலா ஆற்றல் ஊற்றெடுத்துப் பெருகிக்கொண்டிருப்பதாக உறுதியுடன் நம்புவீர்களாக.

6. துளையுள்ள மட்பாண்டம் தண்ணீர் வைத்திருக்க உதவுவதில்லை. ஆத்ம சாதகனிடம் உள்ள காமகாஞ்சனப் பற்று அத்துளைக்கு நிகரானது. இறைவனைப் புகழ்ந்து பாடுவதாலும் அவனைக் குறித்துத் தியானிப்பதாலும் புனித நூல்களை ஓதுவதாலும் ஜபம் முதலியன செய்வதாலும் காம காஞ்சனத்தைப் போக்கிப் பக்தர்களாக நாம் மாறிவிடலாம்.

7. நலனும் கேடும் நிறைந்தது இந்த மாயப் பிரபஞ்சம். எல்லாம் இறைவனுடைய இச்சைப்படிதான் நடந்து வருகின்றன என்பதில் நம்பிக்கை வையுங்கள். நடப்பதெல்லாம் உங்கள் நன்மைக்குத் தான் என்று நினைத்து ஆறு

தல் அடைவீர்களாக!

8. செய்யும் நற்கருமத்தையும் பற்றற்ற மனப்பான்மையுடன் செய்து பழகவேண்டும். அதுவே உங்களுடைய விடுதலேக்கு வழி வகுப்பதாக அமையும்.

9. 'தியானம் செய்கிறேன்' என்று அமர்ந்துகொண்டு தூங்கி வழிவதைவிட இறைவனுடைய பணியாகக் கருதி ஏதாவது ஒரு கர்மத்தில் ஈடுபடுவது பாராட்டுதற்குரியது. அதே சமயம் 'கர்மம் புரிகிறேன்' என்று சொல்லிக்கொண்டு எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு திணறுவதும் விரும்பத்தக்கதன்று. உண்பது உறங்குவதுபோன்ற எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்குப்பாடு இருக்க வேண்டியது அவசியம்.

10. அன்பினல் தூண்டப்பெற்றுக் கர்மம் புரிவதால் வியத்தகு பலன்களைப் பெறலாம். அன்பின் வயப்படும் பாங்குடைய இளைஞர்கள் தங்கள் உடலையும் உயிரையும் பொது நன்மைக்காக வழங்கத் தயாராய் இருப்பதை அப்போது நீங்கள் காணலாம்.

11. மற்றவர்களிடம் நீங்கள் காணும் குற்றங்குறைகள் உங்களிடமே உள்ளன; நீங்கள் மேன்மக்களாக விரும்பினல் மற்றவர்களையும் மேன்மக்களாகக் கருதிப் பழகுங்கள்.

12. சாஸ்திர ஆராய்ச்சியில் முறையாக ஈடுபட்டு வாருங்கள். ஒவ்வொருவரையும் நாராயண சொரூபமாகக் கருதி அவர்களுடன் வேறுபாடின்றிப் பழகி வாருங்கள். நீங்களெல்லாரும் அன்னை பராசக்தியின் புதல்வர்கள். உங்களிடம் பயமும் கவலையும் இருக்கலாமா? எல்லாமே வீண் என்று கருதவேண்டாம்; தன்னலமற்ற தொண்டர்கள் யாண்டும் வேண்டப்படுகிருர்கள். அந்த வேள்வித்தீயில் உங்களையே ஆகுதியாக்க் கொடுத்து எங்கும் அமைதியும் சாந்தியும் நிலவும்படி செய்வீர்களாக!

13. உங்கள் முயற்சியால் இந்த மாடமாளிகைகள் வானளாவ உயர்ந்து நிற்கலாம். ஆனல் உங்களிடம் தியாக உணர்வும், பக்தியும், விசுவாசமும், பற்றின்மையும் மேலும் மேலும் வளராமற் போய்விட்டால் அந்த மாளிகைகளினல் யாது பயன்?

14. நீங்கள் எல்லாரும் வீடு வாசல்களையும் உற்ருர் உறவினரையும் துறந்துவிட்டு வந்திருக்கிறீர்கள் என்பது உண்மைதான். ஆயினும், நீங்கள் மூன்று பேர் கூட ஒற்றுமையாக இருக்கமுடிவதில்லையே? அப்படியிருக்க, ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று கூறுவது பொருத்தமற்றது.

15. இறைக் காட்சி பெற்றுனதும் நம் குறைபாடுகளெல்லாம் ஆதவனைக்கண்ட காரிருள்போல் மறைந்துபட்டுப்போம். உங்கள் அகங்காரத்தையும் அறியாமையையும் அன்பாலும் பக்தியாலும் அகற்றுங்கள். உங்கள் இதயத்தில் அன்பு ஊற்றெடுக்காமல் இருக்கும்போது நீங்கள் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கூறுவதெல்லாம் வெறும் பித்தலாட்டமேயாகும்.

16. 'நான், எனது' என்னும் மனப்பான்மையை உதறி எறிந்துவிட்டு விஷயங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நேர்மையான முறையில் கர்மத்தில் ஈடுபடுங்கள்.

17. அன்பு நிறைந்துள்ள இதயத்தினின்று ஆனந்தம் பொங்கி வழிகிறது. பரிசுத்தமான அன்பினல் எல்லா ஜீவராசிகளையும் நம்முடன் பிணைத்துக்கொண்டு விடலாம்.

18. ஆன்ம சாதனத்தின் நோக்கமே நம்மிடம் உள்ள குறைகளைக் கண்டுபிடித்து நம்மை நாமே சீர்ப்படுத்திக்கொள்வதுதான். 'இப்பிறவியிலேயே பரிபூரண நிறைநிலை எய்திவிடுவேன்' என்னும் உறுதிப்பாட்டுடன் செயல்புரிவீர்களாக.

19. 'பகவான், பக்தன், பாகவதம் மூன்றும் ஒன்றே' என்பது மிக உயர்ந்த தத்துவம். ஒரு மானுட உடலில் இறைவனுடைய லீலையைக் காண்பது மிகச் சிறந்த மனநிலையாகும்.

20. மற்றவர்களுக்கு வழிகாட்டுவது என்பது மிகக் கடினமானது. இறைவனருள் பூரணமாக உங்களுக்கிருந்தாலன்றி நீங்கள் அகந்தையுணர்விலும் உங்களையே ஏமாற்றிக் கொள்ளும் மனப்பான்மையிலும் சிக்கிக் கொள்வீர்கள். 'நான்' என்பது ஒருபொழுதும் இல்லை; எல்லாம் 'நீ' தான் என்னும் நம்பிக்கை இருந்தால் தான் ஒருவன் தலைமை தாங்கி நடத்திச்செல்ல வல்லவனுகிருன்.

21. உங்கள் உள்ளும் புறமும் அன்பு

பொங்கிப் பெருகி வளரட்டும். அதன் மூலம் இறைவன் ஒருவனே மெய்ப்பொருள்; மற்றவை எல்லாம் வெறும் மாயை என்று உணர்வீர்கள்.

22. 'நான்' என்னும் அகந்தைதான் தீமைகள் எல்லாவற்றிற்கும் மூலகாரணம். அதை ஒழித்துத் தள்ள முடியவில்லை என்ருல் பிறகு விமோசனமே கிடையாது.

23. எங்காவது தவறுதல் நடந்துவிட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்தாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது போன்ற தவறு இனி ஏற்படாமல் காத்தருளவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் அதில் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும்.

24. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்பதே நம் இலட்சியமாக இருந்தாலும் நம்முடைய ஆக்க சக்தி அவ்வளவு வலிவுடையதாயில்லை. இறைவனிடம் பரிபூரண சரணுகதி அடைந்து விட்டோமானல் நாம் அளப்பரிய ஆற்றலைப் பெறுவோம்.

25. ஏழை மக்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் பணிவிடை செய்வதன் மூலம் பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்ததன் பலனைப் பெறுகிறீர்கள்.

26. இலாப நஷ்டங்களுக்கெல்லாம் முற்றிலும் உரியவன் இறைவன். நாமோ உலகப் பொருள்களைப் பிடித்துக்கொண்டு மாயையில் உழன்று கொண்டிருக்கிருேம்.

27. பசியாலும் பட்டினியாலும் வாடும் மக்களுக்கு ஒரு கவளம் உணவு கொடுப்பதால் மட்டும் உங்களை இறைவனின் தொண்டனுகக் கருதிக் கொள்ளவேண்டாம். அச்செயலின் மூலமாக உங்களிடம் மறைந்து கிடக்கும் கடவுள் தன்மையை வெளிப்படுத்த முயலுங்கள்.

28. நீங்கள் சாதாரண மனிதர்கள் என்ரு கருதிக்கொண்டிருக்கிறீர்கள்? அச்சத்தையும் பயத்தையும் உதறித் தள்ளுங்கள். நீங்கள் அன்னை காளியின் புதல்வர்கள்! யாருக்கு இந்த அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது! தரித்திர நாராயணனுக்குச் சேவைபுரிவதே உங்கள் வாழ்வின் நோக்கமாயிருக்கட்டும்.

29. தன் சுயநலத்தையும் கீழ்மையில் தள்ளும் புலனின்பங்களையும் விட்டுவிட முடியாத ஒருவன் தான் மனிதன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படவேண்டும். அறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து எது சரியானது என்று தீர்மானித்துக் கொண்ட பின் அதன் படி செயல் புரியுங்கள். இறைவனின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே சுயநலம் உள்ள பகட்டுக்காரராக இருக்காதீர்கள்.

30. சட்டதிட்டங்கள் ஒரு மனிதனின் நடத்தையை மாற்றியமைக்கலாம்; ஆனுல் அவன் மனப்பான்மையை அவை திருத்தியமைப்பதில்லை.

31. நாம் இந்த உலகில் வாழ்வது சொற்ப காலத்திற்குத்தான். அதற்குள் ஒருவர்க்கொருவர் அபிப்பிராய பேதங்களை வளர்த்துக் கொண்டு சண்டையிட்டுக் கொள்வது ஏன்? ஒவ்வொருவரும் தம் விருப்பப்படியே இருக்கட்டும்; உங்களுக்கு என்ன நஷ்டம் வந்து விட்டது?

32. மனதைப் பரிசுத்தமாக்கிக் கொண்டே சென்ருல் நம்பிக்கையும் உறுதிப்பாடும் தாமே வந்தமைகின்றன. நிலத்தைப் பண்படுத்தி வைத்திருந்தால் அதில் விழும் நல்ல விதை வானளாவிய மரமாகச் செழித்து வளர்கிறது.

33. மற்றவர்களிடம் உன் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்று கணப்பொழுதும் கருதாமலிருப்பது மிகச் சிறந்த மனப்பான்மையாகும். அதே சமயம் உன் அதிகாரத்தை எங்ஙனம் பயன்படுத்தவேண்டும் என்று தெரிந்து கொள்ளாதிருப்பது பெரும் தீமையை விளைவிக்கக்கூடும்.

34. பணிவிடையும் சேவையும் உன் மனதைத் தூய்மைப்படுத்தாவிட்டால் அவற்ருல் ஒரு பயனுமில்லை. நீ ஒரு ஸ்தாபனத்துக்குத் தலைவனுய் இருக்கலாம்; ஆயினும் நீ ஓர் அற்ப மானுடன் என்னும் எண்ணத்தில் நிலைத்திருப்பாயாக!

35. யாண்டும் உண்மையைக் கடைப் பிடித்து உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டும். உன்னிடமிருந்து இம்மண்ணுலகில் இருக்கும் மானுடர்களும் விண்ணுலகில் இருக்கும் தேவர்களும் சகிப்புத்தன்மை, அன்பு, மன்னித்தல் ஆகிய பண்புகளைப் பற்றிப் பாடம் கற்றுக் கொள்வார்களாக!

36. புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகியவற்ருல்

பாதிக்கப்படாதவனாகவும் மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கு ஏற்றாற்போல் சரியான கருத்துக்களை மாற்றிக்கொள்ளாதவனாகவும் முற்றிலும் அச்சமற்றவனாகவும் வாழ்ந்திரு. உன் ஜீவிதமே மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கட்டும்; சொல் ஜாலங்களில் மயங்கி விடாதே. நீ கடவுளின் புதல்வன் என்பதை உன் செயல்கள் நிரூபிக்கட்டும்.

37. சிறு விஷயங்களில் கருத்தழிந்து போவது தன்னலமற்ற தொண்டன் ஒருவனுக்கு ஒவ்வாது. மற்றவர்களின் விமரிசனங்களைப் பொருட்படுத்தாதவனே அரியபெரிய காரியங்களைச் சாதிக்கமுடியும்.

38. உன்னை அணுகுபவர்கள் நல்லவர்களோ, தீயவர்களோ, தகுதியுள்ளவர்களோ, தகுதியற்றவர்களோ என்பதைப்பற்றிக் கவலையில்லை. நீ அனைவரிடமும் ஒரே மாதிரி அன்பு செலுத்துவதுதான் உன் கடமை.

39. 'நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே என்னை ஏற்று ஆட்கொள்ளக் கருணை புரிவாயாக!' என்று எல்லாம் வல்ல இறைவனிடம் நீ பிரார்த்தனை செய்யவேண்டும். அவனையன்றி உனக்கு வேறு புகலிடம் ஏது?

40. சாவைவிட அதி நிச்சயமானது உலகில் ஒன்றுமில்லை. நீ இறைவனின் தொண்டனாகையால் உனக்குப் பயம் என்பது இல்லவே இல்லை.

41. தியானம் செய்வது என்பது எளிதன்று; ஒவ்வொருவரும் தியானம் செய்வது கடினம் என்று அனுபவத்தில் உணர்கிறார்கள். இறைவன் உனக்குச் சொந்தமானவன் என்று உண்மையாக நம்பி அவனிடம் மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்து வரவேண்டியது தான் உன் கடமை.

42. சாதனத்தின் ஆரம்பதசையில் உன் இஷ்ட தேவதையின் நாமங்களை உச்சரிப்பதில் உனக்குச் சுவை ஏற்படாது போகலாம். காலப்போக்கில் அந்த நாமங்களை உச்சரிக்காமல் உன்னால் உயிர் வாழமுடியாது என்று தோன்றும்; நம்பிக்கையும் விசுவாசமும்தான் வேண்டத் தக்கவை.

43. உன்னிடமிருக்கும் குற்றங்குறைகளை ஆராய்ச்சி செய்து நீயே கண்டுபிடிக்க வேண்டும். உனக்கு ஏற்பட்டிருக்கும் நோய்க்காக நான் மருந்து சாப்பிடுவதால் என்ன பலன்? உன்னை நீயே சீர்திருத்திக்கொள்ளவேண்டும்.

44. பரம்பரை விவசாயி ஒருவன் ஒரு பொழுதும் தன் தொழிலை விட்டுவிடமாட்டான் என்று நீ படித்ததில்லையா? தியானம் கைகூடுவது சிரமமாயிருக்கிறது என்பதற்காகச் சாதனையை விட்டுவிடலாமா? இறைவனைப் பற்றியே சர்வகாலமும் சிந்தித்துக் கொண்டிருப்பவன் தன் இலட்சியத்தை உறுதியாக அடைகிறான்.

45. தரித்திர நாராயணர்களிடமும் திக்கற்றவர்களிடமும் அன்புகொள்ள வேண்டும் என்றால் செல்வந்தர்களையும் அதிர்ஷ்டசாலிகளையும் வெறுக்கவேண்டும் என்பது அர்த்தமன்று. அணு முதல் பிரம்மா வரை எல்லாரும் இறைவனின் சொரூபங்களே என்னும் பாவனையை வளர்த்துக்கொள்வாயாக!

46. உறுதி இல்லாமல் யாரும் சாதனத்தில் முன்னேறுவதோ நாட்டுக்கு நலன் புரிவதோ சாத்தியமே இல்லை. நாடு என்பது இந்த உலகம் முழுவதையும் குறிக்கும். சொல்லிலும் செயலிலும் பரந்த மனப்பான்மை படைத்திரு. ஒரே இடத்தில் மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தால்தான் தண்ணீர் கிடைக்கும்; இங்குமங்கும் அலைந்துகொண்டிராமல் சாதனங்கள் புரிந்து வருபவன் அரிய காரியங்களைச் சாதிக்கிறான்.

47. அறியாமை என்னும் கொடிய நோயைப் போக்கும் மாபெரும் வைத்தியனாக இறைவனிருக்கிறான். அவனுடைய மகிமைகளைப்பற்றிப் பாடும்பொழுது உன் பாவங்கள் எல்லாம் நாசமடைந்து நீ புனிதவானாகின்றாய்.

48. தியானத்தின்பொழுது உன் மனம் எந்த விஷயங்களால் சிதறடைகின்றதோ அவற்றை உன் இஷ்ட தேவதையின் வெளிப்பாடுகளாகக் கருதிப் பழகு. இறைவனின் பெருங்கருணையால் உனக்கு மனம் ஒருமுகப்பட்டுச் சமாதிநிலை விரைவில் வாய்ப்பதாகுக.

49. உன் குருவும் இறைவனும் வேறு வேறு மூர்த்திகளல்லர். உன் குருவைப் பற்றித் தியானிப்பதும் இறைவனைப்பற்றித் தியானிப்பதும் ஒன்றே.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 1.

சுகர் சொன்னூர்: அரசே, உனது விசாரம், கேள்வி தலையாயது, உத்தமமானது, கடவுளைப் பற்றியது. யாருடைய நாமங்களை இடையருது கேட்கவேண்டுமோ, இடையருது ஸ்மரித்துக்கொண்டு, உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டுமோ, யாரை இடையருது வழிபட வேண்டுமோ, யாரைச் சதா தியானிக்கவேண்டுமோ அத்தகைய ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிய தல்லவோ உனது விசாரம்! யாரிடம் இந்தவிசாரம் தோன்றிவிட்டதோ அவர் நிச்சயம் அவனை அடைவார், முக்தி பெறுவார். ஏனென்ருல் இந்த விசாரம்தான் முக்திக்கு வழி, முக்திக்குக் காரணமாகிறது. இந்தச் சிந்தனை மிக மேலான தாகையால் ஸ்வானுபூதி பெற்ற மகான்களும் இதை விரும்புகின்றனர். உலக இன்பங்களில் நாட்டமும் பெருவிருப்பமும் பெருமுயற்சியும் உள்ள மனிதனுடைய மனது ஆயிரக்கணக்கான விஷயங்களை நாடி ஓடித் திரிகிறது. ஆனுல் பக்தனுக்கோ, ஆத்ம விசாரம் உள்ளத்தில் ஆரம்பித்துவிட்ட மனிதனுக்கோ அவன் நாடுவதற்கு, ஆவல்படுவதற்கு ஒரே ஒரு பொருள்தான் உண்டு. கடவுள் ஒருவரையே அவன் நாடுகிருன். உலகப்பற்றுடைய மக்கள் தங்கள் அவாக்களை நிறைவேற்றிக் கொள்ளுதல் பொருட்டுப் பொதுவாக மற்ற உலக உயிர் வகைகளுக்கு, சகஜீவர்களுக்கு ஐந்து விதங்களில் துன்பம் விளைவிக்கிருர்கள். அவைகளுக்குப் பஞ்சசுன என்று பெயர். பஞ்ச என்ருல் ஐந்து, சுன என்ருல் அழிக்கும் கருவிகள் என்று பொருள். அவர்கள் ஜீவ தத்துவத்தை அறியமாட்டார்கள். அறிய முயற்சியும் இராது. அவர்கள் வாழ்நாள் முழுவதும் பகலில் பொருள் தேடும் முயற்சியிலும் இரவில் இன்பம் துய்த்தலிலும் தூக்கத்திலும் கழியும். அவர்களுக்குமுதலில் இவ்வுடலின் நிலையாமை விளங்கவேண்டும். எவ்வளவு உற்ருர் உறவினர்களை, எத்தனை வயது உள்ளவர்களையெல்லாம் மயானத்தில் எரித்து விட்டு வந்துள்ளார்கள். மரணம் நிகழாத வீடே இல்லை. யாரையெல்லாம் மிகவும் நேசித்தோமோ, எப் பொருள்களையெல்லாம் தீவிரமாய் நாடித்திரிந்தோமோ அவைகளையெல்லாம் எவ்வளவு கட்டாயமாய் நாம் விட்டுப் போகவேண்டும்! மனைவி மக்கள், பெற்ருேர் என்று நாம் பெரும் பற்றுதல் கொள்ளும் ஜீவர்களில் நமக்கு யாருமே உதவ முடியாது. எல்லாம் கனவு போல் மறைந்துவிடும். ஆயினும் இவ்வுலகப் பற்றுதல் எவ்வளவு வலுவானது! இப்பந்த பாசங்களை நம்மால் எளிதில் உதறி எறிய முடியவில்லை. இவ்வுலகின், இவ்வுடலின் நிலையற்ற தன்மை மனதில் ஆழமாக இடம் பெறுவதில்லை. பரதவம்சத்தின் உத்தம அரசனே, இக்காரணத்தால்தான் முமுக்ஷுக்கள் எப்போதும் ஸ்ரீ ஹரியின் அருளை நாடி நிற்கிருர்கள். அவன் நாமத்தை இடையருது ஸ்மரித்தும், மகிழ்ந்து பாடியும், பாராயணம் பண்ணியும் வருகிருர்கள்.

அழிந்து போகக்கூடிய இம் மானுட ஜன்மத்தின் ஒரே ஒரு தலையாய பயன், குறிக்கோள் என் பிரபு ஹரியைப் பேர் ஆர்வத்துடன் நாடி, தியானித்து, அவனை அடைதலே ஆகும். யார் எந்த உபாசனு மூர்த்தியை எடுத்துக்கொண்டாலும் அந்தந்த மூர்த்தியை ஆர்வமாய், தாகமாய் நாடவேண்டும்; உயிர்க்குயிராய் நேசிக்க வேண்டும். அதுவே முக்கியம். ஆத்ம சாதகர்கள் இடையில் தாற்காலிகமாய்த் தோன்றியுள்ள இந்த ஜீவ உபாதியை, தான் ஜீவன் என்கிற உணர்ச்சியைப் பற்றி ஆராய்ந்து அறிய வேண்டும். அத்துடன் அஷ்டாங்க யோகத்தை அனுஷ்டிக்க வேண்டும். மரணத் தறுவாயிலாவது ஜீவன் ஒருவனுக்குக் கடவுள் ஞாபகம்இருக்க முடியுமானுல் அவன் பாக்கியவான். அவன் ஆண்டவனை அடைவான். சாஸ்திர நியமனங்களை அப்படியே பின்பற்ருத முனிவர்களும் எப்போதும் பரப்பிரம்ம நிர்க்குணப்பிரம்ம நிஷ்டையிலேயே சதா நிலை பெற்றவர்களும் ஆகிய இருபாலாருமே அதி ஆச்சரியமான ஹரிகதா, ஹரிபிரபாவம், பிரவசனம், ஹரிபஜனையில் ஈடுபாடு கொள்கின்றனர். அவர்கள் அதில் மகிழ்ச்சியடைகின்றனர். நான் உனக்குச் சொல்லப்போகும்

புராணம் பாகவதம் ஆகும். வேதங்கள் அனைத்தையும் தொகுத்துத் திரட்டி எடுத்ததற்கு நிகர் இது. இது ஓர் அரிய பொக்கிஷம். எல்லா வேதங்களின் சாரமும் இதில் அடங்கியிருக்கிறது. துவாபர யுகத்தின் ஆரம்பத்தில் எனது தந்தையார் ஆகிய வியாசரிடமிருந்து இப்புரானத்தை நான் கேட்டேன். நான் சதா பிரம்ம நிஷ்டையில் இருக்கிறேன் என்பது உண்மை. இந்த ஜகத்தின் நாயகனுகிய ஸ்ரீ ஹரியினுடைய புகழை ஸ்தூல இந்திரியங்கள் மூலம் கேட்பதும், சிந்திப்பதும், அதில் மூழ்கியிருப்பதும், அந்தக்கரணம் உள் முகத்திலே அந்த ஜகன்மோஹனனின் அருளில் பெருமையில், தத்துவத்தில் ஐக்கியப்பட்டிருப்பதும் ஒன்றே அல்லவா? முதலில் ஸ்தூலத்தில் கேட்டு ஆழ்ந்திருந்தால் பிறகு புற உதவியின்றி தானே அந்தக்கரணம் ஸ்ரீ ஹரியின், பரவாசுதேவரின் ஸ்மரணையில் மூழ்கியிருக்கிறது. பிறகு புறம், அகம் என்கிற வேற்றுமை இன்றி அது சதாகால பூஜை, நிஷ்டை ஆகிறது. எப்பொழுதாவது ஸ்ரீ ஹரியின், ஆண்டவனின் புகழ்பாட, கேட்க, பூரிக்க ஆனந்தக்கண்ணீர் மல்க, பக்தர் திருக்கூட்டத்தில் இருக்க வாய்ப்பு ஏற்பட்டால் சுவானுபூதி பெற்ற பெருமகனும் அதில் விருப்பத்துடன் ஈடுபடுகிறுன். ராஜரிஷியே, இம்முறையில்தான் நான் அப்பா அவர்களிடம் பாகவதம் கேட்டேன். இப்போது உனக்குப் பாகவதம் சொல்லும்படியாக நேரிட்டதும் ஆண்டவன் இச்சைப்படியேயாகும். நீ மிக உத்தமமான பாகவதன் (பக்தன்). உனக்கு மகிழ்வுடன் பாகவதம், பகவான் புகழ் பாடுகிறேன். இதை மிகவும் ஏகாக்கிர சித்தத்துடன் கேட்டுக் கிருஷ்ண பக்தியில் பூரணமாக ஐக்கியப்படுவாயாக, கலந்து போவாயாக.

அரசே! பாகவதம் கேட்டல், சொல்லுதல் இரண்டுமே ஸ்ரீ ஹரியின் புனித நாமங்களை உச்சரித்தல், அவனது தெய்விகமான திருவிளையாடல்களைப் பாடுதல், சிந்தித்தல் ஆகியஆத்ம சாதனம் ஆகிறது. உலகப்பற்று நிறைந்த மனிதனும்கூட இதனல் நன்மை அடைகிறுன். அவனது பற்று குறைந்து பக்தி வளரும். உலகத்திடத்து உதாசீனமும் அதிலுள்ள பொருள்களிடத்துப் பற்றற்றும் இருக்கிறவர்களுக்கும் கூட பாகவத படனம் நன்மை செய்யும். தாற்காலிகமாகத் தேங்கிக் கிடக்கும் மனதுக்கு, உற்சாகம் குன்றிய மனதுக்கு, முன்னேக்கிப் போகாத மனதுக்கு உத்வேகம் தருகிறது. பிரத்யாகாரம்—மனதை உள்முகமாகத் திருப்பிப் பழகுகிற யோகிகளுக்கும் பாகவதபடனம் உதவுகிறது. அவர்களுடைய முயற்சியை எளிதாக்குகிறது. யோகியர்-போகியர்—லௌகிகர்—துறவி, பந்தாத்மா—முக்தாத்மா ஆகிய எல்லாருக்குமே பாகவதபடனம் பேருதவியாக அமைகிறது. உலகப்பற்றில் மூழ்கிக்கிடக்கும் மனிதனும் நெடுநாள்—எவ்வளவு நாள் வாழ்ந்திருந்தாலும் ஏதாவது ஒரு நல்ல காரியம் சிறிதளவாவது செய்யவில்லை என்றல் அவன் வாழ்நாள் வீணுள் ஆகும். நீண்ட பற்றுதலோடு கூடிய வாழ்விலும் எப்போதாவது ஒருநாள் அவனுக்கு அதன் நிலையாமை புலப்பட்டால் அவனது ஜீவிதம் பிரயோஜனமானது ஆகும். அவன் கடவுளை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட்டான் எனலாம். இந்த நினைவு க்ஷணமாத்திரம் அவன் உள்ளத்தில் எழுந்து மறைந்தாலும் இப்படிப் பலதடவை மறுபடி அவ்வெண்ணம் எழும். அது வலிவு பெற்றுக்கொண்டே வரும். அதன் விளைவாக நல்ல செயலில் பிரவிருத்தி அதிகம் உண்டாகும். அவனது முமுக்ஷுத்வம் வளர்ந்து வரும். அரசே, வெகுகாலத்துக்கு முன்பு கட்வாங்கன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவனது அந்திய காலத்தில் அவனுக்கு இன்னும் சில நிமிஷங்களேதான் உயிரோடு இருக்கப் போகிறேம் என்கிற உண்மை தெரியவந்தது. அவனுக்கு மரண பயம் ஏதும் இல்லை. உலகை விட்டுப் போகிறேமே என்கிற விசனம் இல்லை. உடனே அவன் ஸ்ரீ ஹரியைத் தியானித்தான். அவனது நினைவில் அவன் உயிர் போனதே அவனுக்குத் தெரியாது. வாழ்நாள் எல்லாம் சீலமாக, பக்தியாக வாழ்ந்ததன் விளைவு அது. குருவம்சத்தில் பிறந்த உத்தமமான அரசனே, உன் ஜீவிதம் முடிய இன்னும் ஏழு நாட்கள் உள்ளன. எத்தனையோ நல்ல காரியங்கள் செய்ய உனக்கு அவகாசம் உள்ளது. மரணத் தறுவாயிலாயினும் யார் ஒருவனுக்கு உலகப் பற்றுக்களை ஒதுக்கவும், சத்காரியங்களில்

ஈடுபடவும், கடவுளைத் தியானிக்கவும் இயலுகிறதோ அவன் பகவானை அடைவான். மனதின் ஈடுபாட்டின் அளவுக்கு ஏற்ப நற்கதி அடைவான். வரும் ஜன்மங்களில் தீவிர அதிகாரி ஆவான். அவனது கடவுள் நாட்டம் தீவிரமானதாகவும் வலுவானதாகவும் ஆகும். ஆகவே மானுடன் மரணத் தறுவாயில் மரண பயம் கொள்ளலாகாது. உலகப் பற்றுக்களை வைராக்கியத்தால் ஒதுக்கித்தள்ள வேண்டும். மனதைக் கடவுளிடத்து நிலைநிறுத்தவேண்டும்.

உலகஆசைகள் ஓய்ந்த மனிதன் மனச்சாந்தி, திருப்தி பெறுகிறான். அவன் கடைசி பந்தமாகிய வீட்டையும் துறந்து வெளியேறுகிறான். கங்கைக் கரையில் அல்லது ஏதோ ஒரு புனித நதிக்கரையில் வாசம் பண்ணுகிறான். தினமும் விடியற்காலம் அப்புனித நீரில் நீராடுகிறான். பொருத்தமான இடத்தில் ஏகாந்தத்தில் ஒரு ஸ்திர சுக ஆசனத்தில் அமர்ந்து கொண்டு 'ஓம்' என்னும் ஏகாக்ஷரத்தைத் தியானிக்கிறான். அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்று அக்ஷரங்களின் கூட்டு ஓம். அ என்று முதலில் வாய் திறந்து உச்சரிக்கிறோம். வாயைத் திறக்காமல் உச்சரித்தல் சாத்தியமில்லை. ஆகவே ஓசையின் உற்பத்தி ஸ்தானம் அகரம் எனப்படுகிறது. ம் என்று உச்சரிக்கும்போது வாய் மூடிக்கொள்கிறது. அது ஓசைக்கு முடிவை உண்டாக்குகிறது. உகரம் இடைநிலையை, அதாவது ஓசையின் தொடர்ச்சியைக் காக்கிறது. ஆக வாயினால் உச்சரிக்கப்படும் எல்லா ஓசைகளின் சாராம்சம் அல்லது தொகுப்பு போன்றது ஓங்காரம். கடவுளுக்கு நாதப் பிரம்மம் என்று பெயர். அவர் ஓசை வடிவமாக உள்ளார். ஓசையின் புறத்தோற்றமாக, ஸ்தூல வடிவமாக இப்பிரபஞ்சம் அமைந்திருக்கிறது. ஓசையினின்று அனைத்தும் வந்துள்ளன. ஆகவே ஓங்காரம் நிர்க்குண பிரம்மத்தின் சின்னம், மந்திரம் எனலாம். ஆக ஓம் என்னும் ஏகாக்ஷரத்தைத் தியானிப்பது என்பது நிர்க்குண பிரம்ம தியானம் ஆகும். அப்படித் தியானிக்கும் போது தன் சுவாசத்தின் போக்கு வரவை ஒழுங்குபடுத்துவதன் மூலம், நிதானப் படுத்துவதன் மூலம் அவன் மனதை வெளி விவகாரங்களிலின்று பிரித்து உள் முகமாக ஒன்றுகூடச் செய்யவேண்டும். இப்படி ஒன்றுபட்ட, உள்முகப்பட்ட மனதுக்குத் தெளிவு உண்டாகிறது; அது வலிவு பெறுகிறது. அதில் தூய்மை, தெய்விகம் திகழ்கிறது. தெளிந்தமனதுக்குக் கடவுள் தத்துவங்கள் தாமே விளங்குகின்றன. அதற்கு ஞானம், மெய்யறிவு என்று பெயர். பரஞானம் அடைந்த மனிதன் ஒருநாளும் உலகப் பொருளில், பிரபஞ்சத்தில் மயங்குவதில்லை; மோஹமடைவதில்லை. பிரபஞ்சப் பொருள்களை நாடி ஓடிய அவனது மனதும் இந்திரியங்களும் இப்போது கடவுளையே நாடுபவைகள் ஆகிவிட்டன. இவ்வுலகை அவைகள் பரம்பொருளாகக் காண்கின்றன. சகுணப் பிரம்ம உபாசனையும் இத்தகையதே. கடவுள் ஒரு மூர்த்தி வடிவில்—மானுட வடிவில் சர்வ மங்கள சொருபியாக, அருள் மூர்த்தியாக—ஞானப்பழமாகப் பக்தனுக்குத் தோன்றுகிறார். அவனது தாயும் தந்தையும், செல்வமும் கல்வியும், நண்பனும் உறவினனும், இவ்வுலகில் எல்லாமுமே ஆண்டவன் ஆகிறான். அவன் தன் பெயர், ஊர், வயது, சரீரம், ஜீவ வியக்தி அனைத்தையுமே மறந்து தன் ஆண்டவன் ஸ்ரீ கிருஷ்ணன் நினைவிலே ஒன்றிப்போய்விடுகிறான். கண்ணனைத் தவிர வேறு எந்த உபாதியும் அவன் மனதில் இல்லை. மானுட சரீரம் பெற்றதன், அதில் இந்திரியங்கள் அமைக்கப் பெற்றதன் மிகப் பெரிய பாக்கியம், பயன் இதுவே. மனதின் மிக உயர்ந்த பரிசுத்த நிலையில் இப்பிரபஞ்சம் இல்லை. அதன் சாயைகூட இல்லை. இந்த உயர்ந்த அனுபவம் சமாதி எனப்படுகிறது. இத்தகையவனைக் கலைப்பதற்கு, மோஹிக்கச் செய்வதற்கு இயற்கைக்கு இயலாது. தன் பிரபு கண்ணனைத் தவிர அவன் நினைவில் எதுவுமே இல்லை. இவ்வுலகம் என்று ஒன்று இருப்பதாகவே அவன் உணர்வதில்லை. இந்த உயர்ந்த மனநிலையில் கவலையோ, பயமோ புகுவதற்கு இடமெங்கே? மரணபயம், உலக ஆசை, கவலை இவைகளைக் கடந்த மிக உயர்ந்த நிலை அது. அவன் செய்யக் கிடக்கும் கடமையோ செயலோ ஒன்றுமில்லை. இந்த உயர்ந்த, தெய்விகமான, புனிதமான, சாந்தியான, பூரணமான, நிறைவான மனநிலையே பரமபதம் எனப்படுகிறது. இதை அடைதலே மானுட ஜீவிதத்தின் குறிக்கோள்

ஆகும். ரஜோகுண தமோகுண விருத்தியினால் மனது எப்போதாவது கீழே இறங்குமானால், உலகப் பிரக்ஞைக்கு வருமானால் நல்ல ஆத்ம முயற்சி, மனோதிடம் இவைகளின் துணை கொண்டுசாதகன்பழையபடிமனதைமேல்நிலைக் குக் கொண்டுபோய்விடுகிறான்.மாயையை, அக் ஞானத்தை விரட்டி ஓட்டவும், ரஜோ, தமோ குணங்களின் தலைஎடுப்பைத் தகர்க்கவும் ஏற்ற மனோ சங்கல்பம், மனோ உறுதி சாதகனிடத்து இருக்கவேண்டும். இவ்வுலகின், மாயையின் மோஹன சக்தி சாதகனை எந்நிலையில் வேண்டு மானாலும் வழிபிசகச் செய்துவிடலாம். மறைப் பவனும் அவனே, அருளுபவனும் அவனே. அவன் அருளால் அவன் தாள் வணங்கும் பாக்கியம் கிட்டுகிறது. ஆண்டவனே அந்த ஜீவனை உய்விக்க மனம் கொண்ட பிறகு அவனை யாரால் மயக்க முடியும்? அவனை மயக்குவதற்கு ஒன்றும் இல்லை. இப்படிப் பக்தன் நிறைநிலையை-பகவானை அடைகிறான். பக்தியோகத்தின் சுருக்கம் இதுவே. இங்ஙனம் பக்தியோ நம் மானுட இயல்பை ஒட்டினதாக வும் எளிதாகவும் இனிமையானதாகவும் பயன் தருவதாகவும் இருக்கிறது.

பரீக்ஷித்து இங்ஙனம் வினவினார்: "என் ஐயனே,தியானிப்பதற்கு உரிய வழிமுறைகளை, சாஸ்திரம் புகட்டும் உபாயங்களை இயம்பி யருள்வீராக. எதை—எவைகளைப் பொரு ளாகக்கொண்டு ஒருவன் தியானிக்கலாம்? தியானத்தை எங்ஙனம் அப்யசிப்பது, அனுஷ் டானத்துக்குக் கொண்டுவருவது? மனது பரி சுத்தமடைந்து விரைவில் குறியை அடைவது எங்ஙனம் என்பனவற்றையெல்லாம் அருள் கூர்ந்து இயம்புவீராக."

சுகதேவர் சொன்னது: "அரசே, ஆத்ம சாத கன் முதலில் இயம நியமங்களில் சீலமான, திருப்தியான, தூய எளிய வாழ்வில், உலகப் பற்று, ஆசை அற்ற வாழ்வில் நிலைபெறவேண் டும். அப்படிப்பட்ட மனதுக்கு உலகப்பொருள் களிலிருந்து தன் இந்திரியங்களை மீட்டு எடுத்து உள்முகமாகத் திருப்புதல், பிரத்யாஹாரம் எளிதாகிறது. பிறகு ஆசனங்களில் நெடிது அமைதியாக அசையாது உட்கார்தலில் பயிற்சி பெறவேண்டும். அடுத்தது பிராணயா மம்—மூச்சுக்காற்றைத் திட்டமிட்டு மெதுவாக உள்ளே வாங்கவும் வெளியே விடவும் செய் தல்-இதில் பயிற்சி பெறவேண்டும். இதன் மூலமாக உடலும் மனமும் நன்கு வசப்படுத் தப்பட்டவைகள் ஆகின்றன. தூய மனதுக்கு, அடங்கிய மனதுக்கு, ஒன்றுபட்ட மனதுக்கு, உயர்ந்த கடவுள் தத்துவங்களைக் கிரகிக் கிற, ஓதாது உணர்கிற சக்தி வருகிறது. அதற்கு ஞானம் என்று பெயர். கடவுளைப் பற்றி உணர உணர, அறிய அறிய மனது அவனில் கலந்துவிட, கரைந்துவிட விரும்பு கிறது. விட்டில் பூச்சி தீச்சுடரை நோக்கிப் பாய்வது போன்று முழுமனதும் கண்ணனை நாடுகிறது. இதற்குத் தாரணை என்று பெயர். தைலதாரை போன்று இடையீடின்றி மனது கடவுளை-கண்ணனை நாடுகிறது. கடவுளோ, நிர்க்குணப் பிரம்மமோ அகண்டாகாரமானது. அது மனம் வாக்குக்கு எட்டாதது. வர்ணனை-விளக்கங்களை எல்லாம் கடந்தது. ஆனால் பக் தனின் அன்புக்கடவுளோ ஒரு வடிவில் மன மோஹன வடிவில் எழுந்தருள்கிறார். இந்த மூர்த்தி உபாசனையும் முடிவில் அகண்டாகார லக்ஷணங்களுக்குஉபாசகனை எடுத்துச் சென்று விடும். மூர்த்தி வடிவில் எழுந்தருளியுள்ள அந்த ஆண்டவனின் லீலைகள், அருட் செயல் கள் முன்பும் இன்றும் இன்னும் எதிர்காலத் திலும் என்றென்றும் தியானத்துக்குரியவை களாக, பக்தர்கள் நினைத்து உருகுகிறவை களாக இருக்கின்றன. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்சபூதங் களும், அந்தக்கரணமும், மஹத் தத்துவமும் ஆகிய ஏழும் பரம்பொருளின் வடிவங்களே ஆகும். இந்த இயற்கையைப்பார்த்து அது அளப்பரும் தன்மை, வளப்பரும் காட்சி என்று பக்தன் வியக்கிறான். இப்பிரபஞ்சம் பகவா னின் விராட் சரீரம் ஆகும். இவ்வடிவை விஸ்வ ரூபம் என்பார்கள். இதில் உள்ள எல்லா உயிர்களும் ஜடம், சேதனம், அசேதனம் ஆகிய யாவும் ஆண்டவனே-அவனது அம்ஸமே, அவனுடையவையே ஆகும். இப்பெரிய பொருளை இன்னும் எப்படியெல்லாமோ தியா னிக்கலாம்.

இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தவனும் அதன் நாயகனும் ஆகிய ஆண்டவனுக்கு ஆயி ரம், எண்ணற்ற தலைகள் உள்ளன; அவனது

திருவடிக்குக் கீழே பாதாளம் இருக்கிறது. அவனது திருவடிகளுக்கு முன்னும் பின்னும் இருப்பது ரஸதளம். அவனது கணுக்காலுக்கு மஹாதளம் என்றும் இரண்டு கால்களுக்கும் தலாதளம் என்றும் இரண்டு துடைகளுக்கும் சுதளம் என்றும் துடையின் மேல்பாகத்திற்கும் கீழ்ப்பாகத்திற்கும் விதனம், அதவம் என்றும் இடுப்புப் பகுதிக்கு மஹிதளம் என்றும் பெயர். அவனது தொப்புள் பகுதி ஆகாயமாக விளங்குகிறது. அவனது மார்பு சுவர்லோகம். அங்குத் தேவர்கள் வசிக்கிறார்கள். அவனது கழுத்து மகரலோகம். அவனது திருமுகம் ஞான லோகம். அவனது நெற்றி தபலோகம். அவனது தலைகள் சத்திய லோகம். தேவேந்திரனும் மற்ற தேவர்களும் அந்த விசுவரூபனின் கரங்கள். திசைகள் அவனது காதுத் துளைகள் ஆகின்றன. சப்தம் அவனது காதுகள். இரு அஸ்வினி தேவர்கள் அவனது மூக்குத் துவாரங்கள். வாசனை அவனது மூக்கு. அக்னி அவனது கருவிழிகள். சூரியன் அவனது கண். இரவும் பகலும் அவன் கண் இமைகள். பிரம்ம தேவர் புருவம் ஆகிறார். தண்ணீர் அவனது உமிழ்நீர். ருசி அவனது நாக்கு. வேதங்கள் அவனது முடி ஆகின்றன. காலன் அவனது தாடை. நாம் பற்று வைக்கிற,பேரன்புசெலுத்துகிற குழந்தைகளும் மற்றவர்களும் பற்கள். மாயை அவனது புன்முறுவல். மற்றும் கணக்கற்றசிருஷ்டிப் பொருள்கள் அவனது பார்வைகள், விளையாட்டு, லீலை; கெடுதல்கள் எல்லாம் மேல் உதடு, கீழ் உதடு, சீலம் அவனது மார்பு; பாபம் அவனது முதுகு. பிரஜாபதி அவனது ஜனன உறுப்பு. மித்திரன், வருணன் அவனது கொம்புகள். சமுத்திரங்கள் அவனது வயிறு. மலைகள் அவனது தொப்புளில் சென்று ஒடுங்கிவிடுகின்றன. செடிகளும் மரங்களும் அவனது சரீரத்தில் உள்ள உரோமங்கள். பெருவல்லமை வாய்ந்த காற்றானது அவனது கம்பீரமான நடை ஆகும். க்ஷணந்தோறும் கோடிகோடியாக உயிர்கள் தோன்றுவதும் மடிவதும் அவனது விளையாட்டு. குருவம்சத்தின் சிறந்த அரசனே, மேகக்கூட்டமானது அவனது விசுவரூபத்தில் தலைமயிர்போன்று விளங்குகின்றது. காலம் அவனது ஆடை. அன்பே அவனது இயல்பு. சந்திரன் போன்ற குளிர்ந்த மனமுடையவன். அவனது மனதுக்கு விஸ்வ மனஸ் என்று பெயர். அதன் கிரணங்களே மற்ற கணக்கற்ற உயிர்களின் மனதாக, அறிவு, உணர்வாக மிளிர்கிறது. கலை ஞானங்கள் யாவும் அவ் ஆண்டவனின் திருப்புகழையே பாடுகின்றன; க ட வு ளி ன் மகிமையையே விளக்குகின்றன. ருத்திர தேவர் அப்பரம புருஷனின் வீரம் ஆகிறார். ஆ! பக்ஷிவர்க்கம் அவனது கலைஞானச் சிறப்புக்கு விளக்கம் ஆகிறது. சுயம்புவ மனு அவனது அறிவு ஆகிறார். தொண்டரிடத்தே அவன் வீற்றிருக்கிறான். கந்தர்வர், அப்ஸரர், வித்யாதரர், சாரணர் இவர்கள் சப்தசுரங்கள் ஆகின்றனர். ஆண்டவனின் முரட்டு வல்லமை அசுரர்களிடத்து வெளிப்படுகிறது. பிராம்மணர் வாய், க்ஷத்திரியர் கரங்கள், வைஸ்யர் அவனது துடைகள், சூத்திரர் கால்கள். வசுக்கள் ருத்திரர்கள், பூதகணங்கள், தேவ தேவர்கள் யாவரும் அவ்விஸ்வ மூர்த்தியின் புகழைப் பாடிக்கொண்டு அவனது பெரிய திருவடியைச் சுற்றிச் சுற்றி வலம் வருகின்றனர். இப்பிரபஞ்சம் முழுவதும் அவன் புகழ் பாடிக்கொண்டிருக்கிறது. கடவுளின்-ஸ்ரீ வாசுதேவரின்-பிரபஞ்ச மயமான ஸ்தூல அமைப்பு இங்ஙனம் வர்ணிக்கப்படுகிறது. அவனே இவ்வுலகாக, இயற்கையாக வடிவெடுத்துள்ளான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் அவனே; எல்லாம் அவனது உடைமையே; எல்லாம் அவனே; எல்லாம் அவனே.

மேலே கூறியது ஈசனின் விசுவரூபத்துக்கு விளக்கமாகும். ஈசனின் இவ் விசுவரூபத்தைத் தியானிப்பவர்களுக்கு மனம் விரிவடையும். மனம் விரிவடைந்து சரீரப்பற்றைக் கடக்கும் பொழுது மனிதனுக்கு ஆத்ம ஞானம் உண்டாகிறது. பரந்த கடலும் வெட்டவெளியும் மனதை விகசிக்கச் செய்வதுபோன்று ஈசனின் விசுவரூப சிந்தனையும் மனதை விகசிக்கச் செய்கின்றது. சர்வவியாபகனாயும், சர்வசக்திமானாயும், சர்வக்ஞனாயும் இருக்கும் இறைவனுக்கு இவ்விசுவமே உடலாக இருக்கிறது. சகுணப் பிரம்மத்தின் விசுவத் தன்மையைச் சிந்தித்துத் தியானித்து நாம் சரீர உணர்வைக்கடந்து விசுவ உணர்வைப் பெறுவோமாக.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

74. विक्रमः விக்ரம: எதிரிகளை வெல்லும் பாங்குடையவன்.

மூர்த்தி ஒருவனும் அவனை எதிர்ப்பவனும் கிட்டத்தட்ட ஆற்றலில் ஒரே தரம் வகித்திருத்தல் அவசியமாகிறது. ஆனால் பரமனோ ஒப்புயர்வற்றவன். அனைத்துமாய் இலங்குபவன் அவனே. அத்தகைய பாங்குடையவனுக்கு யார் எதிரியாக முடியும்? அப்பெரிய பொருளை எதிரி என்று கருதுபவன் அக்ஞானத்தில் உழல்கிறான். தனக்கும் மூலகாரணமாயிருப்பவன் பரவஸ்து என்பதை அன்னவன் அறிந்து கொள்வதில்லை. ஆகையினால் அப்பெரிய பொருளை எதிர்க்க முயலுகிறவன் தன்னையோ தன் தரத்தையோ சிறிதேனும் அறியாதவனாகிறான். அக்ஞானத்தால் தூண்டப்பெற்று அன்னவன் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனம் அனர்த்தமாய் முடியும். அதற்கு நேர்மாறாக ஆத்மசாதகன் ஒருவன் பரமனையே சார்ந்திருந்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்வதால் அவனுக்கு நலன் அனைத்தும் எளிதில் வந்து வாய்க்கிறது.

75. धन्वी தன்வீ—வில்லைத் தாங்கியிருப்பவன் பரமன்.

'ஆயுதங்களை எடுத்திருப்பவர்களுள் நான் தசரத ராமனாக இலங்குகின்றேன்' என்று கீதாசாரியனாகிய கிருஷ்ணபரமாத்மா பகர்கின்றான். ராமபாணம் வீண்போவதில்லை என்பது கோட்பாடு. இந்நிலையில் வில்லும் வில்லாளியும் சொரூபத்தில் ஒருவரேயாம். தசரத ராமன் மூன்று சந்தர்ப்பங்களில் தன் வில்லைக் கையாண்டான். அதன் விளைவாக வந்து வாய்த்தது நலனேயாம். முதல் பிணக்கு பரசுராமனுக்கும் அயோத்தி ராமனுக்கும் இடையில் நிகழ்கிறது. பரசுராமன் செருக்கே வடிவெடுத்தவன். அரசர்கள் பலர் அவனால் வெல்லப்பட்டார்கள். அத்தகைய செருக்குடன் அன்னவன் அயோத்திராமனைச் சந்தித்தான். மற்றவனோ தன்னுடைய பணிவால் பரசுராமனை அடக்கினான். அதுமட்டுமன்று; வெற்றிகரமாகத் தன் வில்லுக்கு நாணேற்றினான். நாண் ஏற்றும் பொழுதே தான் மண்ணுலகில் அவதரித்து வந்ததன் நோக்கம் அவனுடைய உள்ளத்தில் உதயமானது. தன்னுடைய அம்புக்கு இலக்கு யாதோ என்று மூத்தவனாயிருந்த பரசுராமனிடம் அவன் விண்ணப்பித்தான். அதே வேளையில் பரசுராமனுக்கும் தான் இதுகாறும் செய்து வந்த அடாத செயலின் குற்றமும் வெளியாயிற்று. உடனே, தான் படைத்திருந்த ஆணவ அகங்காரத்தின் மீது ராமபாணத்தைச் செலுத்தும்படி அவன் பணிவுடன் வேண்டினான். தசரத ராமனும் அங்ஙனம் செய்ய, பரசுராமனுக்கு விவேகம் உதயமானது. மேலும் தான் செய்யக்கிடக்கும் கடமை யாதோ என்று இளையவனாகிய தசரத ராமனிடம் விண்ணப்பித்தான் பரசுராமன். அவனும் அப்பெரியவனை ஹிமாசலத்துக்குச் சென்று தவம்புரிந்து தன்னிடம் எஞ்சியிருக்கும் குறை நிலையை நிறை நிலையாக மாற்றி, பரத்தில் இரண்டறக் கலக்கும்படி ஏவினான். அதற்கு நிகரான செயலை எங்குமே யாரிடத்தும் நாம் காண முடியாது. அடுத்தபடியாக ராமபாணம் வாலியினுடைய செருக்கை அழித்தது. அவனுடைய உயிரை வாங்கும் பாங்கில் ராமபாணம் வாலிக்கு மோட்சம் கொடுத்தது. மூன்றாவதாக இலங்கேசனாகிய இராவணன் மீது இராமன் எய்த அம்புகளனைத்தும் அனர்த்தமாய்ப் போய்விட்டனபோன்று தென்பட்டன. ஆயினும் அந்த அரக்க மன்னனுடைய மனதை ராமபாணம் பெரிதும் திருத்தியமைத்தது. அதன் விளைவாக அவன் எடுத்திருந்த உடல் அழிந்து போனதும் அடுத்த பிறவியில் அவன் பரமனை அடைவதற்கான பரிபாகம் அடைந்ததும் ராமபாணம் இராவணனுக்குச் செய்த நன்மையாம்.

76. मेधावी மேதாவீ—பேரறிவாளன்.

பிரபஞ்சத்திலே நமக்குக் கட்புலனாகும் பொருள்களுள் சூரியன் முதலிடம் பெறுகிறது. பிரகாசத்தில் அதற்கு நிகரான எதுவும் மண்ணுலக வாசிகளாகிய மக்களுக்குத் தென்படுவதில்லை. அதே விதத்தில் பேரறிவுக்கு உறைவிடமாயிருப்பவன் பரமன். அவனை உபாசிப்பதற்கேற்ப உபாசகன் நல்ல அறிவையும் விவேகத்தையும் அடையப்பெறுபவனாகின்றான். இறுதியில் அத்தகைய சாதகன் பர

ஞானத்துக்குத் தகுதி உடையவனுகின்ருன்.

77. विक्रमः விக்ரம:—விரைந்து நடப்பவன். அவன் அசையாப் பொருள் எனினும் எங்குச் சென்று பார்த்தாலும் அங்கு அவன் ஏற்கனவே எழுந்தருளியிருக்கும் பாங்கில் வீற்றிருக்கிருன்.

'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' என்று ஆண்டாள் அப்பரமனைப் போற்றுகின்ருள். ஈரடியாலே மூவுலகளந்தவன் எனவும் பக்தர்களால் அவன் பாராட்டப்படுகிருன். நிறைபொருளைப் பக்தர்கள் இப்படியெல்லாம் பாராட்டுவது முற்றிலும் பொருந்தியதேயாம். விக்ரம: என்னும் பதம் கருட வாகனன் எனவும் பொருள்படுகிறது. கருடன் வானத்தில் பறக்கின்றபொழுது அப்பறவைக்குப் பின்னணியில் தென்படுவது அகண்டாகாரத்தில் விரிந்தோடும் நீலநிறமான வெட்டவெளியேயாம். அப்பறவை தான் செல்லும் இடமெங்கும் நீலநிறமான வெட்டவெளியையே காண்கிறது. அதை முன்னிட்டே எங்கும் நிறைபொருளாகிய பரமனுக்குக் கருடவாகனன் என்னும் பெயர் வந்துள்ளது.

78. क्रमः க்ரம: எங்கும் வியாபித்திருப்பவன். பரமனைப்பற்றி எங்கும் வியாபித்திருப்பவன் எனப் பகர்வதே மொழியின்கண் ஏற்பட்டுள்ள குறைநிலையாம். ஒரு பொருளை மற்ளெரு பொருளோடு சீர்தூக்கி ஆராய்ந்து கொள்ளுதற்கு மொழி பயன்படுகிறது. எங்கும் நிறைபொருள் என்று பரமனைப் பற்றிப் பகர்கின்றவிடத்துத் தேசம் அல்லது இடத்துக்கு (Space) மதிப்புத் தருகிருேம். அத்தகைய இடமெங்கும் பரமன் நிறைந்திருக்கிருன் என்று நாம் பகர்கிருேம். இப்படிப் பகருமிடத்து இடமும் அந்த இடத்தில் வீற்றிருக்கும் பரமனும் ஒரே அந்தஸ்தைப் பெறுகின்றனர். ஆனுல் இடம் என்பது மனதின் கற்பனை. மனம் ஒடுங்கியவிடத்து இடம் இல்லை. எனவே எங்கும் நிறைபொருள் என்று பரமனைப் பற்றிப் பகர்வது பொருளற்றது. ஆயினும் மனதுக் கெட்டாத பெரிய பொருளை மனதைக்கொண்டு கிரகிக்க முயலுகின்றபொழுது அதற்கேற்ற பதத்தைக் கையாள்கிருேம். எங்கும் நிறைபொருள் என்பதே அப்பதமாம்.

கிரமம் என்பதற்கு ஒழுங்குப்பாடு என்பது மற்ளெரு பொருள். எதனிடத்து ஒழுங்குப்பாடு இல்லையோ அது தாறுமாருகக் காட்சி தருகிறது. எதனிடத்து ஒழுங்குப்பாடு நிறைந்திருக்கிறதோ அது பாங்குடையதாகப் புலனுகிறது. பிரபஞ்சமாகக் காட்சி கொடுப்பது பரம்பொருள். பிரபஞ்சத்தின்கண் ஒழுங்குப்பாட்டைக் காண்பவர்கள் மெய்க்காட்சி காணத் தகுதி உடையவர்கள் ஆகின்றனர்.

79. अनुत्तमः அனுத்தம:—ஒப்புயர்வற்றவன். ஒப்பானவன் யாருமில்லை என்ருல் இனி அவனைவிட உயர்ந்த பொருளைக் காண்பது அல்லது கிரகிப்பது எங்ஙனம்?

பரமன் தனக்கு மேற்பட்டவன் இல்லாதவன்.

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்,
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்,
அயர்வறு அமரர்கள் அதிபதி யவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே

என்பது நம்மாழ்வார் வாக்கு.

தனக்கு மிக்கார் யாருமில்லாதவனும், தளர்ச்சியற்ற மதி நுட்பத்தைக் கொடுத்து அருளியவனும், தேவாதி தேவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவனுயிருப்பவனும் ஆகிய பரம்பொருளின் துன்பத்தைப் போக்கக்கூடிய பாதாரவிந்தங்களை என் மனமே, நீ யாண்டும் தொழுதிருப்பாயாக! இவ்வாறு நம்மாழ்வார் பரமன் தாளிணைகளைப் பணிகிருர்.

80. दुराधर्षः துராதர்ஷ: யாராலும் அசைக்க முடியாதவன்.

மரம் ஒன்றின் மெல்லிய பகுதிகளாகிய கிளைகள், இலைகள் ஆகியவை காற்றடிக்கும்பொழுது அசைகின்றன. ஆனுல் அடிமரமோ அசையாது இருக்கிறது. காற்றடிப்பதால் கடலின்மேற்பகுதி அலையெடுத்து உருண்டோடுகிறது. ஆனல் அதன் கீழ்ப்பகுதி அசையாதிருக்கிறது. பரம்பொருளின் பாங்கு அடிமரம் போன்றதும் கடலின்கீழ்ப்பகுதி போன்றதுமாம்.

பிரதிகூலமான சூழ்நிலையை முன்னிட்டு மக்கள் அஞ்சுகின்றனர். மனக்கிலேசம் அவர்களுக்கு எளிதில் வந்தமைகிறது. ஆனல் உண்மையை உள்ளபடி அறிந்திருப்பவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் சஞ்சலப்படுவதில்லை. அவர்கள் யாண்டும் ஏத்தும் பரமனுக்கும் அசையவேண்டிய அவசியம் இல்லை.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (420) இயற்கை மரணமும் அகால மரணமும் ஒரே ஆண்டவனின் கட்டளைகளா? அவை தனித்தனி என்றால் எப்படி?

இயற்கை நடைமுறை முழுதும் ஒன்று சேர்ந்து ஆண்டவனுடைய கட்டளையாகிறது. அந்நிகழ்ச்சிகளுள் சில பொருந்தியவைகளாகவும் வேறு சில பொருந்தாதவைகளாகவும் நமக்குத் தென்படுகின்றன. ஆயினும் பொருந்தியவை, பொருந்தாதவை ஆகிய எல்லா நிகழ்ச்சிகளும் இயற்கையின் கண் நிகழ்ந்து வருகின்றன. அவைகளுள் உயிர்களின் முன்னேற்றத்துக்குப் பொருந்தியவைகளையே நாம் இறைவனுடைய கட்டளை எனக்கொள்ளுதல் வேண்டும். அதற்கேற்றபடி நாம் முரண்பாடில்லாமல் நடந்துகொள்வது நம் கடமையாகிறது. அவ்வாறு நடந்துகொள்வதன் மூலம் நாம் பரிணமத்தில் மேல் நிலைக்கு வருகிறோம். பொருந்தாதவைகள் நிகழ்கின்றவிடத்து அவைகள் வாயிலாகவும் நாம் பாடமொன்றைக் கற்றுக்கொள்கின்றோம். எச்செயல்கள் மனிதனைக் கீழ்மைப்படுத்துகின்றனவோ அவையாவும் இயற்கையினது திட்டத்திற்குப் பொருந்தாதவைகளேயாம். ஆயினும் அவைகளை அறவே தடுக்க யாருக்கும் இயலாது. பொருந்தியவைகள், பொருந்தாதவைகள் யாவும் நடைபெறுதற்கு இயற்கையில் இடம் உண்டு. அகாலமரணம் பொருந்தாது என்றாலும் அது இயற்கையில் நிகழ்கிறது. நடக்கக் கற்றுக்கொள்ளும் குழந்தை ஒன்று பல முறை தடுக்கிக் கீழே விழுவது இயல்பு. அதற்கு நிகரானது அகாலமரணம். ஆயினும் அதன் வாயிலாகவும் அம்மரணத்துக்கு உட்படும் ஜீவன் கற்கவேண்டியவைகளைக் கற்றுக்கொள்கிறான். ஆகவே இயற்கையில்நிகழவேண்டிய அனைத்தையும் தொகுத்துப் பொதுவாக இறைவனுடைய கட்டளையென்று நாம் வைத்துக்கொள்ளலாம். மேலும், அந்நியதிக்குக் கட்டுப்பட்டு முறை பிறழாமல் செயல்பட வேண்டிய இன்றியமையாமையும் நமக்குண்டு. அதற்கிடையில் மனிதனுடைய முன்னேற்றத்திற்குச் செயல்கள் அனைத்தும் பயன்பட்டு வருகின்றன என்பதை அறிந்து கொள்கின்றவன் நல்ல ஆத்மசாதகனாகின்றான். அன்னவனுக்கு அகாலமரணமும் நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது. அதாவது பொருந்திய செயல் பொருந்தாத செயல் மயமாயிருக்கும் பிரபஞ்சத்தைத்தாண்டி அப்பால் செல்லுதற்கு மனிதன் அவை யாவையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே தீவிரமான ஆத்மசாதகன் ஒருவன் யுக்தி பூர்வமாக மேற்கொண்டு ஒழுகவேண்டிய நடைமுறை ஆகும்.

கேள்வி: (421) பிரார்த்தனையில் பொருள் தெரியாதவிடத்தும் பயன் உண்டா?

பிரார்த்தனையில் இரண்டு பகுதிகள் உள. முதலாவது இறைவனுடைய மகிமையைப் பாராட்டுதல். அவனுடைய விபூதிகளையும் கல்யாண குணங்களையும் வியந்து போற்றுதல். இரண்டாவது நமக்குத் தேவையாக இருக்கும் நலனை இறைவனிடம் பரிந்து விண்ணப்பித்துக் கேட்பதாம். தாயினும் சாலப்பரிந்து நம் பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கும் இறைவன் வேண்டியதை வேண்டியாங்கு வழங்கி அருள்கின்றான். இயற்கையின் நடைமுறைகள் முழுதும் இறைவனுடைய திருவிளையாடல்கள். அவைகளை ஆன்றோர் பலமுறைகளில் விளக்கியுள்ளார்கள். அவைகளில் சில பகுதிகள் நமக்கு விளங்குகின்றன. வேறு சிலபகுதிகள் நமக்கு விளங்குவதில்லை. விளங்கியவை, விளங்காதவை ஆகிய யாவையும்பக்தி பூர்வமாகஓதுவதுநல்லபிரார்த்தனையாகும். விளங்காதவைகளை ஆராய்ந்து எவ்வளவு விரைவில் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பிரார்த்தனை நம் மனதைத் திருத்தியமைக்கிறது. 'சொல்லிய பாட்டின்பொருள்உணர்ந்துசொல்லுவார்செல்வர் சிவபுரத்து' என்பது பிரார்த்தனையைப் பற்றிய ஆப்த வாக்கியமாகும். பிறகு குழந்தையொன்று மழலைச் சொல்லின் வாயிலாகத் தனக்குத் தேவையாய் இருப்பதைத் தன் தாயிடம் மன்றாடிக் கேட்பது போன்று நமக்கு நலன் தரும் அனைத்தையும் நாம் தெய்வத்திடத்து நல்ல பாடல்கள் வாயிலாகவோ, உணர்ச்சி ததும்பும் சொற்கள் வாயிலாகவோ கேட்பது முறையாகும்.

இவையாவுக்கும் மேலே இறைவனுடைய

திருநாமத்தை ஓயாது ஜபிப்பது நல்ல பிரார்த்தனையாகும். அவனுடைய திருநாமங்களில் சிலவற்றிற்கு நமக்கு அர்த்தம் விளங்குகின்றது. வேறு சிலவற்றிற்குப் பொருள் ஒன்றும் புலப்படுவதில்லை. அப்படி இருந்தாலும், அவனுடைய நாமத்தை ஓயாது உச்சரிப்பதன் வாயிலாக நாம் நலன் அடைகின்றோம். உண்ணும் உணவில் பொருந்தியது எது, பொருந்தாதது எது என்பது ஆராய்ச்சிக்காரனுக்கு விளங்குகிறது. மக்களில் பெரும் பான்மையோர் அதில் கருத்துச் செலுத்துவதில்லை. ஆயினும் உணவின் தரம் மனிதனுடைய உடலைப் பண்படுத்த வல்லதாம். அந்த முறையில் இறைவனுடைய திருநாமத்தை ஓதுதற்கு ஏற்ப மனிதன் ஆத்மபரிபாகம் அடைகின்றான்.

கேள்வி: (422) சுவாமி விவேகானந்தர் புலால் உண்பதை ஏற்றுக் கொள்கின்றார். இது பொருந்துமா?

புலால் உணவு, மரக்கறி உணவு என உணவை இரண்டு விதமாய்ப் பிரித்து எடுக்கலாம். அவைகளுள் புலால் உணவையே புசித்துவரும் உயிர்வகைகள் உள. புலி, சிங்கம், கழுகு முதலியன புலால் உணவைஉண்டே வாழ்ந்து வருகின்றன. இனி, யானை, மான், கால்நடைகள் போன்றவை புல், இலை, தழை முதலியவைகளைத் தின்று உயிர் வாழும் ஜந்துக்களாக அமைந்திருக்கின்றன. மனிதன் வளர்க்கும் நாய், கரடி போன்ற வேறு சில ஜந்துக்களுக்குப் புலால் உணவும் மரக்கறி உணவும் சேர்ந்தே பயன்பட்டு வருகின்றன. மரக்கறி உணவை மட்டும் அருந்துகின்ற மக்கள் உடல் நலன் அதிகம் பெறுவதில்லை. பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியன மரக்கறி உணவு ஆகமாட்டா. அவைகள் பண்பட்ட பாங்கில் அமைந்துள்ள புலால் உணவு வகைகளே ஆகும். இக் கோட்பாட்டை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பொதுவாக மக்கள் எல்லாரும் புலால் உணவைப் புறக்கணிக்கும் பாங்கில் இல்லை. புறக்கணிக்கவேண்டுமென்று வற்புறுத்துவதும் பொருந்தாது. மக்களுள் தீவிரமாக ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகின்றவர்கள் பால், தயிர், நெய் முதலியவற்றைப் புசிக்கலாம். ஆனால் மாமிசத்தைப் புசிப்பது ஆத்ம சாதனத்திற்கு இடைஞ்சல் என்பதை அவர்கள் அறிய வருகின்றனர். அதன் விளைவாக அவர்கள் சுத்த ஆகாரத்தை மேற்கொள்கின்றனர்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் தம் முக்கிய சிஷ்யராகிய விவேகானந்த சுவாமிகளை உணவு நியமத்தில் கட்டுப்படுத்தவில்லை. 'நரேந்திரன் எந்த உணவை வேண்டுமானாலும் புசிக்கலாம்; அதனால் அவனுடைய பாரமார்த்திகப் பாங்கு ஒருநாளும் கெட்டுப் போகாது' என்று விவேகானந்த சுவாமிகளுக்குக் குருதேவராகிய அவர் அனுமதி கொடுத்தார். வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அவர் அகப்பட்ட உணவு வகைகள் அனைத்தையும் தாராளமாகப் புசித்து வந்தார். இயமநியமங்களில் அச்சான்றோர் கருத்தைச் செலுத்தினரே ஒழிய உணவு முதலிய சாதாரணத் தேவைகளில் கவனம் செலுத்தினர் அல்லர். இச்செயலினின்று மனிதன் அறிந்துகொள்ளவேண்டிய பேருண்மை ஒன்று உள்ளது. மனிதனுடைய ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாது இருப்பது புலனடக்கமும் மனப்பண்பாடுமேயாம். உலகம் தருகின்ற உணவு வகைகளிலே தனக்குப் பொருந்தியது பொருந்தாததை மக்கள் தாங்களே தேர்ந்து கொள்ளுதல் அவசியம். அதன்படி அவர்கள் தம் விருப்பம்போல் உணவை ஏற்றுக்கொண்டு தம் உடலைத் தக்க முறையில் பேணிப்பாதுகாத்து வரலாம். பொருந்தாத உணவை உண்பவர் மேலோர் ஆகமாட்டார் என்னும் கொள்கை தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டதன்று. இதற்கு விவேகானந்த சுவாமிகளே சான்றாகின்றார்.

பஞ்சேந்திரியங்கள் மூலமாகச் செல்லும் விஷயங்கள் யாவும் உள்ளத்துக்கு உணவாகின்றன. உள்ளத்தில் பொருந்தாத உணர்ச்சிகளையூட்டும் விஷயங்களை உள்ளே செலுத்துதல் ஆன்ம வளர்ச்சிக்குப் பெருந்தடையாகும். தூய உணர்வை வளர்க்கும் விஷயங்களை உள்ளே செலுத்துபவர்கள் மேலோர் ஆகின்றனர். உண்கின்ற உணவில் கருத்தைச்செலுத்துவதை விட உள்ளே செலுத்துகின்ற விஷயாதிகளில் கருத்தைச் செலுத்துவதுதான் நம்மை மேலோர் ஆக்குவதற்குத் துணைபுரியும். உள்ளத்தைத் தூய்மையாக்கியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார்.

திட நம்பிக்கையும் சரணுகதியும்

(சுவாமி துரியானந்தர்)

[சேலம் கல்லூரி ஆசிரியை மங்கையர்க்கரசி தமிழில் மொழிபெயர்த்தது]

இப்பிறவியிலேயே பிரம்மத்தைச் சுவானுபூதியில் அடையப்பெற்றவன் பேரானந்தத்தை அடைகிருன். இறைவன் வேண்டும் என்பவன் இறைவனை அடைகிருன். இறைவன் கருணுமூர்த்தியாதலால் இறைவனை அடைதல் எளிது. ஆனல் யார் இறைவனை வேண்டும் என்கிருர்கள்? அதுதான் வேதனைக்குரியது. ஒருவன் சரியான வழியில் தீவிரமாக இறைவனைத் தேடினல் இறைவன் இமைப்பொழுதில் அவன் முன் தோன்றுகிருன். இது இறைவனுடைய வாக்கு. தானியக்களஞ்சியத்தைச் சுற்றித் தூவப்பட்டிருக்கும் பாகில் தோய்த்த பொரியை எலிகள் தின்று திருப்தியடைந்து தானிய மூட்டைகளுக்குப் பக்கத்தில் வருவதில்லை. அதே போன்று மனிதன் மனைவி, மக்கள் போன்ற உலக போகங்களிலேயே திருப்தியடைந்து விடுகிருன். இறைவன் மிக அருகில் இருந்தும் இறையனுபவத்தால் வரும் பேரானந்தத்தை மனிதன் லட்சியம் செய்வதில்லை. மாயையின் வலிமை அத்தகையது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். யார் இறைவனை அடைக்கலம் அடைகிருர்களோ அவர்களே இந்த மாயையைத் தாண்டுகின்றனர். அதனல் முழு மனதுடன் இறைவனைச் சரணடைய வேண்டும். இறைவனுடைய கருணையினல் மோட்சத்தையும் சாந்தியையும் அடையலாம். ஆன்மீக வாழ்க்கையில் சிரத்தை முன்னேற்றத்திற்கு வழி காட்டுகிறது. நசிகேதன் எவ்வாறு சிரத்தையினல் ஞானத்தைப் பெற்றுன் என்று கடோபநிடதத்திலிருந்து அறிகிருேம். சிரத்தை உள்ள பக்தன், இந்திரியங்களை வென்றவன் ஆகியோர்ஞானத்தை அடைகிருர்கள் என்று கீதாசாரியனுகிய கண்ணன் கூறியுள்ளான். நம்மிடம் இருப்பதைத் தெளிவாகக் காண்பது போல் இவ்வுண்மைகளை அறிகிருேம். எப்படி மற்றவர்கள் பொருட்படுத்தினல் என்ன? மற்றவர்கள் எதிர்மறையாகக் கூறினுலும் ஒருவன் சொந்த அனுபவத்தைப் பற்றி ஐயப்படுவதில்லை. அனுபவத்தால் வரும் ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்கிருன். கருணுமூர்த்தியான இறைவன் எப்பொழுதும் கருணையைப் பொழிந்து கொண்டே இருக்கிருன். ஒரு விநாடிப் பொழுதில் ஒரு தீக்குச்சியினல் கல்ப காலத்து இருள் விலகி வெளிச்சம் ஏற்படுகிறது.

'சந்தமாமா எல்லாருக்கும் மாமா'— என்பது வங்காளப் பழமொழி. அதேபோல் இறைவன் எல்லாருக்கும் உரியவர் என்பதில் ஐயமில்லை. நாம் அனைவரும் பராசக்தியின் குழந்தைகள் என்பதால் அளப்பரிய ஆற்றல் படைத்திருக்கிருேம். அன்னை பராசக்தி பிரபஞ்சத்திற்குக் காரணமானவள். அந்த அன்னையின் கருணையே முக்திக்கு நம்மை எடுத்துச்செல்லுகிறது. அவள் நம் அன்னையாக இருக்க நமக்கு என்ன பயம் இருக்க முடியும்? ஒருவன் எதனைச் சிந்திக்கிருனே அதுவாகவே மாறிவிடுகிருன். ஆகையால் நாம் நம்மைப் பலவீனர் என எண்ணுவோமானல் பலவீனர் ஆகிவிடுகிருேம். அன்னையின் கருணையினல் நாம் எதைத்தான் சாதிக்க இயலாது? 'நான்', 'எனது' என்பதிலிருந்து ஒருவன் விடுபட எவ்வளவு காலமாகிறது? இதனை அன்னை பராசக்தி ஒரு நொடிப்பொழுதில் தன் கருணையினல் செய்துவிடுவாள்.

ஆழமாகவும் அகலமாகவும் உறுதியாகவும் பரவியுள்ள அரசமரத்தின் வேர்களைத் திரும்பத் தலையெடுக்காதபடி கோடரியால் வெட்டி வீழ்த்துவதுபோல் சம்சார பந்தத்தை அறவே நீக்குதல் வேண்டும். ராமபிரசாத், கமலாகாந்த் போன்ற புண்ணிய புருஷர்கள் வாழ்க்கையிலிருந்து அன்னை பராசக்தியின் குழந்தைகள் இவ்வாறு செய்திருப்பதை அறிகிருேம். அவர்கள் அவளுடைய ஆணைக்குத் தங்களை முழுமையாக ஒப்படைத்தனர். புழுதியின் நடுவிலோ, பணத்தின் நடுவிலோ, மரத்தடியிலோ, அல்லது அரசனின் சிம்மாசனத்திலோ எப்படியாயினும் எந்நிலையில் தங்களை வைத்தாலும் அன்னையை மறவாமல் இருத்தல் வேண்டும் என வேண்டினர். பூனை தன் குட்டியைத் தூக்கிப் போய்ச் சில சமயம் நல்ல படுக்கையில் வைக்

கிறது. சில சமயம் சாம்பலின் நடுவே வைக் கிறது. பூனைக்குட்டி 'மியா, மியா' என்று கத்துவதைத் தவிர ஒன்றும்செய்வதில்லை. எங் குக் குட்டியை வைக்கவேண்டும் என்றுதாய்ப் பூனைக்குத் தெரியும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். அன்னை பராசக்தி எது செய்தா லும் நம் நன்மைக்கே. அன்னைக்குச் சேவை செய்வதைத் தவிர முக்தியைக் கூட பக்தர்கள் விரும்புவதில்லை. அன்னையின் செயல்களில் ஏன் என்ற கேள்விக்கே இடமில்லை. அவள் பேராற்றல் மிக்கவள். காரண காரியத்திற்கு அப்பாற்பட்டவள். எக்காலத்திலும் எப் பொழுதும் அன்னை அவளுடைய பக்தர்களிடம் கருணை வடிவினளாக இருக்கிறாள். 'எல்லா ருடைய உள்ளங்களிலும் நான் ஆன்மாவாக இருக்கிறேன். எல்லா உயிர்களிடத்தும் நானே முதலாக, நடுவாக, முடிவாக உள்ளேன்' என்று கீதாசாரியன் கூறுகிறார். அன்னை நம்மை எந்நிலையில் வைத்தாலும் அது நம் நன்மை யின் பொருட்டே. எப்பொழுதும் அன்னையின் கமல பாதத்தில் மனது நிலைத்திருக்கும்படியும், அப்படி நாம் மறப்பினும் அன்னை நம்மை மறக் கலாகாது என்றும், விவேக வைராக்கியத்தை அருளவேண்டும் என்றும் நமது பிரார்த்தனை இருக்கட்டும். ஏனென்றால் உலகத் துன் பத்தை விவேகத்தால் வெல்ல இயலும். ஆகை யால் நம்முடைய ஒரே கடமை பரம்பொருளை நினைவில் கொள்வதே. "மனமே, இராமனை எப் பொழுதும் நினைவில் வை. மற்ற நூற்றுக்கணக் கான எண்ணங்களால் என்ன பயன்? வாயே! ராம நாமத்தை எப்பொழுதும் சொல். வீண் பேச்சால் என்ன பயன்? காதே! இராமனின் சரிதத்தைக் கேள். இனிமையான பாடல்களைக் கேட்பதால் என்ன பயன்? கண்ணே! எல்லா வற்றிலும் இராமனைப் பார். இராமனைத் தவிர மற்ற அனைத்தையும் துறந்துவிடு." இதுதான் உண்மையான ஆத்ம சாதனை. இப்படி ஒரு வன் செய்வானாகில் அவன் உய்வான். இல்லை யெனில் பிறப்பு, இறப்பு என்னும் வேதனைகளி லிருந்து தப்ப இயலாது. நம் அறிவிற்கு அப் பாற்பட்டதால் எது நலம், எது கேடு என்று நாம் கூற இயலாது. ஆகையால் நாம் அன்னை யிடம், "அன்னையே, நீ நலம், கேடு இவற்றிற்கு அப்பாற்பட்டவள். எங்களையும் நலம் கேட் டிற்கு அப்பால் எடுத்துச் செல்' என்று பிரார்த் திக்க வேண்டும். எவ்வழியில் எவ்வாறு அன்னை அதனைச் செய்வாள் என்பது தெரி யாது. ஆனால் அன்னை எடுத்துச் செல்வாள் என்பது மட்டும் நிச்சயம். எல்லாருக்கும் எப்படியும் உணவு கிடைக்கும் என்று ஸ்ரீ ராம கிருஷ்ணர் கூறுவார். சிலருக்குக் காலையிலும் சிலருக்கு நண்பகலிலும் சிலருக்கு இரவிலும் உணவு கிடைக்கும். ஒருவருக்கும் உணவில்லா மல் போகாது.

"பிரம்மத்தைப் பற்றிய அறிவு சாதாரண மக்களுக்கு இல்லை. தேகாத்ம புத்தியுள்ளவர் களுக்கு நிர்க்குண உபாசனை கடினமானது. அவர்கள் என்னிடம் மனத்தைச் செலுத்தினால் அவர்களை சம்சாரக் கடலிலிருந்து விடுவிக் கிறேன்" என்று கீதாசாரியன் கூறுகிறான். மனம், தேகம் என்ற உணர்வை விடாதவர் களுக்குப் பிரம்மத்தை அறிவது கடினமானது. இப்படிப்பட்டவர்கள் பிரம்மத்தைப் பற்றி அறியமுடியாது என்பதால் அவர்கள் கடைத் தேற முடியாது என்று சொல்லலாகாது. இந் தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க் கையில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகம் வரு கிறது. ஒரு நாள் நான் தட்சிணேஸ்வரம் சென் றிருந்தேன். நிறையப்பேர் அங்கு இருந்தனர். அவர்களில் ஒருவர் பெரிய பண்டிதர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை வேதாந்தத்திற்கு விளக்கம் கூறும்படி கேட்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் அங்கிருந்த அனைவ ருக்கும் திருப்தியேற்படும் வகையில் அப் பண்டிதர் ஒரு மணி நேரத்திற்கு மேலாக வேதாந்தத்தை விளக்கினார். அதன்பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "ஆனால் இவைகள் எல் லாம் என் மனத்தைத் தொடவில்லை. தத்து வம், ஞானம், அறிபவன், அறியப்படும் பொருள் இவையெல்லாம் சந்தேகமில்லாமல் நல்லவையே. ஆனால் நான் விரும்புவது என் அன்னை பராசக்தியின் நினைவு ஒன்றைத்தான்" என்று கூறினார். இவ்வார்த்தைகளை ஸ்ரீ ராம கிருஷ்ணர் மிக உணர்ச்சியுடன் கூறியபடியால் அங்கிருந்த அனைவர் மனமும் சிறிதுநேரத் திற்கு நெகிழ்ந்தது. இக்கருத்திற்கு முன் வேதாந்தத்தின் முடிவுகள் எல்லாம் மங்கிவிட் டன போலத் தோன்றின. ஸ்ரீ ராமகிருஷ்

ணரின் இக்கருத்து புரிந்துகொள்வதற்கு மிக எளிமையாகத் தோன்றியது.

இறைவனிடம் மனதை எவ்வழியிலாவது நிலைக்கச் செய்வதுதான் முக்கியமானது. உண்ணுதல், அருந்துதல் முதலியவை தேகம் இருக்கும் பரியந்தம் இருக்கட்டும். காளி பக்தரான ராம பிரசாத் ஒரு பாடலில், "மனமே, காளியைப் பிரார்த்தனை செய். இரவு பகலாக மந்திரத்தைச் சொல். படுப்பதை, அன்னை பராசக்திக்குச் செய்யும் நமஸ்காரம் என்று எண்ணிக்கொள். உனது தூக்கத்தை அன்னையின் தியானமாக்கு. சாப்பிடும் பொழுது அன்னைக்கு நிவேதனம் செய்வதாக எண்ணிக் கொள். எல்லா எழுத்துக்களிலும் அன்னை காளி இருப்பதால் உன் காதில் விழும் ஒலிகளெல்லாம் அன்னையின் மந்திரம். ஊரைச் சுற்றி வரும்பொழுது அன்னையை வலம் வருவதாக எண்ணிக்கொள். அன்னை எல்லாவற்றிலும் இருக்கிருள்" என்று அறிவிக்கிருர். இப்படிப்பட்ட பெரிய அருளாளர்களின் போதனைகளைப் பின்பற்ற வேண்டும். அப்பொழுது இறைவனின் திருவடிகளில் பக்தி ஏற்படுவது திண்ணம். எங்கும் எல்லாப் பொருள்களிலும் எல்லா ஜீவர்களிலும் எல்லாச் செயல்களிலும் இறைவனைக் காணும் பிரம்ம ஞானத்திலிருந்து ராமபிரசாத் கூறுவது வேறுபட்டதா? இறைவனுக்குப் பணி செய்தல், நம் அன்பிற்குரிய ஒரே பொருள் இறைவன் என்று அறிதல், இறைவனிடம் அன்பு வைத்தல், மற்ற எல்லாவற்றையும் துறத்தல், ஒருவனிடமும் துவேஷம் இல்லாமல் இருத்தல் முதலியவை இறைவனையடையச் சுலபமான வழிகள். இறைவனிடம் அன்பு ஒன்றே வேண்டியது. இறைவனிடம் அன்பு இருக்குமானல் மற்ற அனைத்தையும் நாம் அடைவோம். நமக்கு அன்பு என்பது என்ன என்று தெரியாததன்று. நாம் மனைவி, குழந்தைகள், நண்பர்கள் இவர்களிடம் அன்பு செலுத்திப் பழக்கப்பட்டவர்களே. எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கும் இவ்வுலகில் என்றும் நிலையான இறைவனை நோக்கி நாம் இவ்வன்பைத் திருப்ப வேண்டும். சிறிது காலத்திற்குப் பிறகு இவ்வுலகத்தில் மற்றவை அனைத்தும் புளித்து, ஏன் கசந்தே விடுகின்றன. இறைவனிடம் செலுத்தும் அன்பு ஒன்றே புதிதாகவும் வளர்ந்து கொண்டும் இருக்கிறது. சிறிது காலத்திற்குப் பிறகு மற்ற அனைத்துப் பொருள்களிலும் வெறுப்பே உண்டாகிவிடுகிறது. "ஐம்பொறிகளின் வாயிலாகக் கிடைக்கும் நிலையற்ற பொருள்களில் அறிவிலிகள் கொண்டுள்ள அழியா அன்பை நான் உன்னிடம் செலுத்துவேனக. அந்த ஆழமான அன்பு என் நெஞ்சை விட்டு நீங்காதிருப்பதாகுக" என்று பக்த சிரோமணியான பிரகலாதன் இறைவனிடம் வேண்டுகிருர். ஒருவன் அப்படிப்பட்ட அன்பு செலுத்துவானேயாகில் இறைவனைச் சுவானுபூதியில் அடைவதற்குத் தாமதம் ஏற்படாது. பக்தனுக்குக் காட்சி கொடுக்கும் பொருட்டு இறைவன் தூணையும் பிளந்துகொண்டு வருவான். எல்லாம் நாம் செலுத்தும் அன்பைப் பொறுத்தது. அன்பு அதிகரிக்க அதிகரிக்க உள்ளத்தில் இறைவனுடைய சான்னித்தியமும் அதிகரிக்கும். இறைவன் அகத்தூய்மையுள்ளவர்களுக்கும், சிரத்தையுள்ளவர்களுக்கும் நண்பன் ஆவான். இறைவன் எப்பொழுதும் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறன். ஆனல் நாம் மற்ற பொருள்களில் கவனம் செலுத்துவதால் இறைவனைக் காணத்தவறி விடுகிறோம். இதனல்தான் நாம் இறைவனைச் சுவானுபூதியில் பெறத் தாமதமாகிறது. இறைவன் எப்பொழுதும் நம்முடன் இருப்பதால் அவனைத் தேடி நாம் மற்ற இடங்களுக்குப் புனிதயாத்திரைகள் செய்யவேண்டிய அவசியமில்லை. சிரத்தையுடன் ஒரு வினடி இறைவனைத் தேடினலும் அவன் நம்மிடம் ஓடோடி வருகிறன். நாம் இறைவன் வேண்டும் என்று உள்ளன்புடன் நினைப்பதில்லை. மாயையின் சக்தி அவ்வளவு வலிமை உடையது என்பதால் உண்மையை நாம் அறிவதில்லை. இறைவன் தம் கருணையினல் மாயையிலிருந்து விடுபடும் வழியையும் காண்பித்துள்ளார். இறைவனின் மாயையை அவனிடம் பரிபூரணமாகச் சரணடைபவர்களே எளிதில் கடக்கிருர்கள். ஆகையால் இறைவனைச் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. இறைவன் தம் எல்லையற்ற கருணையினல் அவருடைய திருவடிகளில் நம் மனதை இருத்துவாராக. இதுவே நம்முடைய பிரார்த்தனையாக இருக்கட்டும்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-7

1890ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ஆம் தேதி விவேகானந்த சுவாமிகள் தொண்டர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் சாரம் வருமாறு:

ஆத்ம சாதனத்தை ஒருபொழுதும் கை நழுவ விட்டுவிடாதே. யாண்டும் அதைத் தீவிரமாக அனுஷ்டித்து வருவாயாக. தொண்டரினம் எல்லாரும் இதுகாறும் தொண்டு புரிந்தே முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறார்கள். நரசேவையே நாராயண சேவையாகிறது. மக்களுக்குப் புரியும் பணிவிடையே மகாதேவனுடைய வழிபாடாகிறது. ஆகையினால் உன்னையும் அத் திருக்கூட்டத்துடன் சேர்த்துக்கொள்ள முயன்று வருவாயாக! உள்ளத்தில் இறைவனுடைய சிந்தனை யாண்டும் குடிகொண்டிருக்கட்டும். அதைத் தொடர்ந்து காயத்தால் செய்யும் பணிவிடைகள் அனைத்தும் பரமனுடைய திரு உருவங்களாக இலங்கும் மக்களுக்குப் புரியும் ஆராதனையாகுக!

உனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு பாராட்டுதற்குரியதாகிறது. உன்னைத் தங்கள் குடும்பத்தில் ஒருவனாக வைத்து அன்னவர்கள் பராமரித்து வருகிறார்கள். அத்தகைய நல்லாரைக் காண்பது அரிதிலும் அரிது. இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகின்றவர்களே அத்தகைய நல்லவர்களுடன் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்பை அடையப் பெறுகின்றனர். அத்தகைய பெருவாய்ப்பு உனக்குக் கிட்டியிருப்பது கடவுளின் அருளாலேயாம். எக்காரணத்தைக் கொண்டாவது உன்னைப் பராமரிக்கின்ற அக்குடும்பத்தார் உன்னைத் திட்டினாலும் திரஸ்கரித்தாலும் அதைக் குறித்து நீ ஒருபொழுதும் மனவருத்தம் கொள்ளலாகாது. அத்தகைய சந்தர்ப்பம் தெய்வாதீனமாக வாய்த்துள்ளது என்று கருதிக்கொள். அன்னவர்களின் கண்டிப்பான நடவடிக்கை உன்னுடைய நலனுக்காக வாய்த்தது என்று ஏற்றுக்கொள். நீ எவ்வளவுக்கெவ்வளவு அக்குடும்பத்தாரிடம் அன்பு வைக்கின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு நிச்சயமாக நீ நலன் அடைவாய்.

மானிட உடல் அமைந்திருப்பது வெறும் சுக ஜீவனத்துக்காக அன்று. பரஞானம் பெறுவதற்கு அதைத் தொடர்ந்து பயன்படுத்தி வா. நன்னெறியில் நீ அதைப் பயன்படுத்துதற்கேற்ப உன் திறமை அதிகரிக்கிறது. பரமனைச் சார்ந்திருந்து பழகுதலே நல்ல பயிற்சி ஆகும். காலமெல்லாம் ஒரே குடும்பத்தாரின் பராமரிப்பில் இருந்து வருவது பக்தன் ஒருவனுக்குப் பொருந்தாது. எந்த க்ஷணத்தில் வேண்டுமானாலும் நீ இருக்கும் சூழ்நிலை மாறி அமையலாம். அதைக்குறித்து நீ மனக்குழப்பம் கொள்ளலாகாது. ஈசனுடைய அருளைச் சார்ந்து இருப்பவர்களுக்கே எல்லாச் சூழ்நிலைகளிலும் சாந்தம் வந்தமைகிறது. பக்தர்கள் அனைவரிடமும் நீ பேரன்பு வைத்துப் பழகு. பரம்பொருளே உன்னைப் பக்குவப் படுத்துதற்பொருட்டு அத்தகைய நல்ல மூர்த்திகளாக வந்து அமைந்திருக்கிறார் என்னும் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வருவாயாக! ஒவ்வொருவனும் சமுதாயத்தில் தலைவனாக விரும்புகின்றான். வெளித் தோற்றத்துக்கு அவ்விருப்பம் பாராட்டுதற்குரியதாகத் தென்படுகிறது. உண்மையில் அது அகங்காரத்தை அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய அகங்காரத்துக்கு நீ இடம் தராதே! அடியார்கள் அனைவருக்கும் அடியவனாக இருக்கும் ஆசையையே நீ வளர்த்துவா. ஆசை பொல்லாதது. ஆனால் நல்லான் ஒருவன் பூணும் தெய்விக ஆசை அவனைப் பண்படுத்துகிறது. அகங்காரத்தை அது அறவே அகற்றுகிறது. தலைவனாகவேண்டும் என்கிற எண்ணம் அகங்காரத்தைப் பேணுகிறது. தொண்டனாகவேண்டுமென்கிற எண்ணம் அகங்காரத்தை அறவே அகற்றுகிறது. காந்த ஊசி எல்லாச் சூழ்நிலைகளிலும் வடதிசையையே காட்டுகிறது. அதுபோன்று பக்தன் ஒருவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் பரநாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றான். பக்தனுடைய எண்ணமும், சொல்லும், செயலும் இறைவனுக்குரியது ஆகின்றன. சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றையும் தெய்வத்துக்குரியது ஆக்குகின்ற பெருமைபக்தனுக்கேஉரியது. அத்தகையமேன்மைகள் யாவும் உனக்கு வந்துவாய்க்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஞான வெட்டியான்-8

தியாகத்தின் மேன்மை

உடன் பிறந்த சகோதரர்களைப் பங்காளி கள் என்று சொல்லுவது உலகத்தவர்களு டைய பாங்கு. தந்தையின் சொத்தைப் போட்டி போட்டுக்கொண்டு அன்னவர்கள் பங்கு போட்டுக் கொள்கின்றனர். ஆகை யினல் அவர்களுக்கு அப்பெயர் வந்தது போலும். இது உலகத்தவர்களுடைய இயல்பு. சகோதரர்களுக்கிடையில் எவ்வளவு அன்பு இருந்தாலும் பொருள் ஆசை காரணமாக அன் னவர்கள் கொடும் பகைவர்களைப் போன்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்கின் றனர். அதன் விளைவாகத் தங்களுக்கும் தங் கள் பெற்றோர்களுக்கும் மாருத களங்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

இதற்கு நேர்மாருகத் தசரதராமனும் அவன் தம்பி பரதனும் சண்டை போட்டுக் கொண் டனர். உலகத்தவர்கள் போடும் சண்டைக்கு நேர்மாருக இச்சகோதரர்கள் புரிந்த போராட் டம் இருந்தது. பரதன் அயோத்தியில் இல்லா திருந்த பொழுது ஸ்ரீ ராமனுக்குப் பட்டம் சூட்டத் தந்தை தசரதன் அவசர அவசரமாக ஏற்பாடு பண்ணினர். ஏனென்ருல் அவருக்கு அந்தியகாலம் அணுகி விட்டது என்பதைத் திடீரென்று அவர் அறிய வந்தார். தாம் உயிரோடு வாழ்ந்திருக்கும்போதே தம் ஆருயிர் மைந்தனுக்கு முடி சூட்டி மகிழவேண்டும் என் பது அவ்விப்ரருடைய பேர்அவாவாகும்.ஆனல் அந்தத் திட்டத்துக்குப் பரதனின் தாயாகிய கைகேயி தடைசெய்தாள். தனக்கு ஏற்கனவே கொடுத்துள்ள இரண்டு வரங்களை இப் பொழுது தரவேண்டுமென்று அவள் தன் கணவன் தசரதனிடம் வேண்டினள். தருவ தாக அவரும் வாக்குக் கொடுத்தார். முதல் வரமாக இராமன் பதினன்கு வருஷ காலம் தவத்தின் பொருட்டுக் காட்டிற்குப் போகவேண்டுமென்றும் இரண்டாவது வர மாகத் தன் மகன் பரதன் நாடாளவேண்டு மென்றும் அவள் கேட்டாள். தம் மனைவியின் இத்தகைய வார்த்தைகளைச் செவிமடுத்த தசர தன் ஸ்தம்பித்துப் போனர். அவருக்கு ஒன்றும் பேச இயலவில்லை. அவருடைய பிரதிநிதியா யிருந்து இராமனை அவள் காட்டுக்கு அனுப்பி வைத்தாள். சிறிதும் இரக்கமற்ற இச்செய லால் நொந்துபோன சக்கரவர்த்தி தசரதன் உடனே உயிர் துறந்தார். அச்சமயத்தில்தன் பாட்டனர் வீட்டில் வசித்து வந்த பரதன் அவ சரமாக அயோத்திக்கு அழைக்கப்பட்டான். அயோத்தியிலே நிகழ்ந்த விபத்துக்கள் அனைத்தையும் அவன் அறியலாயினன். அவன் உள்ளத்தில் கோபாவேசம் மூண்டெழுந்தது. தன் தாயின் விருப்பத்திற்கு அவன் இணங்க வில்லை. அவள் கூறிய யோசனையை விஷ மென ஒதுக்கித் தள்ளிவிட்டு உடனே இராம னைத் தேடிக்கொண்டு அவன் வனத்திற்கு ஓடி னன். தமையனைக்கண்டவுடன் அடியற்ற மரம் போல் வீழ்ந்து பரதன் வணங்கினன். கண் ணீரும் கம்பலையுமாகத் தந்தை மடிந்து போன செய்தியை அவன் இராமனிடம் தெரிவித்தான். ஆங்கு வசித்திருந்த இராமன், இலக்ஷ்மணன், சீதை ஆகியோரும் இவர்களைத் தேடி ஓடிவந்த பரதனும் சத்ருக்கனனும் பெருந்துன்பத்திற்கு ஆட்பட்டனர். தாயைப் பிரிந்த கன்றைப்போல் அவர்கள் அனைவரும் பரிதவித்துப் புலம்பி னர். பிறகு ஒருவாறு ஆறுதல் அடைந்தவர் களாய், குடும்பத்தார் நால்வரும் காலம் சென்ற தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடமைகளை முறையாகச் செய்து முடித்தனர். பிறகு பரதன் தன் தமையனை அயோத்திக்குத் திருப்பி வர வேண்டினன். அதற்கு இராமன் கொடுத்த விடையாவது:''தாய் தந்தையர் சொற்படி நடப் பதுமைந்தர் கடமை. நான் அக்கடமையை நிறைவேற்றி வருகிறேன். நீயும் அவர்களுடைய ஆணையை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக் கின்ருய்.''

பரதன்: ''அண்ண, ராஜ்யம் உன்னுடையது; என்னுடையதன்று. அதை நான் ஏற்க மாட் டேன்.''

இராமன்: ''ராஜ்யம் தாய் தந்தையர்க்குரி யது. அவர்கள் அந்த ராஜ்யத்தைத் தம் மக்க ளுள் தங்களுக்கு இஷ்டமானவர்களிடத்தில் ஒப்படைக்கலாம். ஆகவே அவர்கள் செயலில் பிழை ஒன்றும் இல்லை.''

பரதன்: ''நம் இக்ஷ்வாகு வம்சத்தின் ஜதி

கத்துக்கு முரண்பட்டது இத்தீர்மானம். ஆகையால் இதற்கு நான் உடந்தையாக மாட்டேன்."

இராமன்: "ஐதிகத்தை மாற்றவும் பெற்ருேருக்கு உரிமையுண்டு. ஆதலால் பெற்ருேர் சொல்படி நடப்பது மைந்தர் கடமையாகும்."

பரதன்: "அண்ணு, தாய் தந்தையர் சொற்படி நடந்த பெருமை உனக்கிருக்கட்டும். தாய் தந்தையர் சொற்படி நடந்து கொள்ளாத சிறுமை எனக்கிருக்கட்டும். நீ ஆணையிட்டாலும் கூட உன் சிம்மாசனத்தின் மீது நான் அமரேன்."

இராமன்: "ஹிமாசலத்தில் யாண்டும் இருந்து வரும் உறைபனிக்கட்டி ஒரு வேளை மறைந்துபட்டுப் போகலாம். சமுத்திரமே வற்றிப் போகலாம். சூரியன் தன் பிரகாசத்தை இழந்து விடலாம். தந்தையைச் சத்திய சங்கற்பன் ஆக்குதல் பொருட்டு நான் எடுத்துக் கொண்ட விரதத்தினின்று இம்மியளவும் பிசகேன்."

பரதன்: "அண்ணு, நான் யாண்டும் உன் தொண்டன். என் தாய் செய்த பிழைக்கு நான் அவளைக் கொன்றிருப்பேன். ஆனல், அச்செயலை நீ ஆமோதிக்கமாட்டாய் என்று எண்ணியே அதிலின்று நான் பின் வாங்கினேன். ஆனல் உன் தொண்டனுய் உள்ள நான் உன் சிம்மாசனத்தின் மீது மட்டும் உட்காரமாட்டேன். இந்த விரதத்தினின்று என்னை மாற்ற உன்னுலும் முடியாது, வேறு யாராலும் முடியாது."

இங்ஙனம் இரண்டு சகோதரர்களுக்கிடையில் அவர்கள் பூண்டிருந்த தியாக புத்தி உச்ச நிலையில் இருந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் தத்தம் கருத்துக்களையே வலியுறுத்திப் பேசினர். ஒருவர் கருத்தை இன்னெருவர் ஏற்றுக்கொள்வதாயில்லை. இந்த நெருக்கடியில் வசிஷ்டர் ஓர் உபாயத்தைக் கையாண்டார். அவர் கூறியதாவது: "நீங்கள் இருவரும் கூறும் அபிப்பிராயம் உங்கள் மன பரிபாகத்தைக் காட்டுகிறது. மேற்குலத்தில் உதித்துள்ள பெருமக்களுக்கே இத்தகைய பண்பாடு வந்து அமையும். நீங்கள் இருவரும் அவரவர் பூண்டுள்ள விரதத்தின்படியே நடந்து கொள்ளுங்கள். அதற்கிடையில் அயோத்தியின் அரசாட்சி நடைபெற்ருக வேண்டும். அதற்கு ஏற்ற உபாயத்தை நாம் கையாண்டாக வேண்டும். பரதன் சிம்மாசனத்தில்அமரவேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் இராமனுடைய பிரதிநிதியாக இருந்து பதினன்கு வருஷ காலம் ராஜ்யப் பொறுப்பை ஏற்று வரட்டும்."

சகோதரர் இருவரும் இதற்குச் சம்மதம் கொடுத்தார்கள். பரதன் தமையனிடம் மற்ருெரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தான்: "அண்ணு, நான் உன் தாசனுக இருந்து உன்னுடைய ராஜ்யத்தை என்னல் இயன்ற அளவு காப்பாற்றி வருகின்றேன். மற்று, பதினன்கு வருஷங்கள் கழித்து அடுத்தநாள் மத்தியானத்திற்குள்ளாக, நீ அயோத்திக்குத் திரும்பி வராவிட்டால் நான் உயிரோடு இருக்கமாட்டேன்."

இராமன் அதற்குச் சம்மதம் கொடுத்தான். மேலும் அவன் மொழிந்ததாவது: "தம்பி, உன்னிடம் நான் ஒரு விண்ணப்பம் செய்கின்றேன். எக்காரணத்தை முன்னிட்டும் உன் தாயை நீ நொந்து கொள்ளலாகாது." பரதன் மௌன முற்றிருந்தான். தனக்குள் அவன் எண்ணிக் கொண்டதாவது: "இந்தப் பரந்த மனப்பான்மை இராமனுக்கே உரியதாகும். இத்தகைய சீரிய செயல்களைச் செய்து முடிப்பது இராமனுடைய தனி தர்மமாகிறது." இங்ஙனம் இரு சகோதரர்களும் போட்டி போட்டுக் கொண்டு செய்த தியாகத்தின் செயல் யாண்டும் நலனையே விளைவித்தது. அவர்கள் இருவரும் தன்னலமற்ற பெருந்தகையாளர்களாய் இருந்ததால் இத்தகைய அரும்பெரும் தியாகத்தைச் செய்வது அவர்களுக்குச் சாத்தியமாயிற்று. இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளும் அளவு உலகத்தவர் பெரு நன்மை அடைவர்.

இராமன் தர்ம கோப்தா. அவன் செயல்கள் யாவும் தர்மத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. புத்திரோத்தமன் இராமனும் அவன் சகோதரர்களும் தியாகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்ருர்கள். தியாக வாழ்வு யாண்டும் மக்களுக்குத் தியாகத்தின் பெருமையை விளக்கிக்கொண்டே இருக்கும். இலட்சிய வாழ்வு வாழ விரும்புகின்றவர்களுக்கு இராமனும் அவன் சகோதரர்களும் எடுத்துக்காட்டுகளாக இருந்துவருகிருர்கள்.

ஊர் நடுவே ஓர் அடவி

இன்று உலகெங்கும் இயங்கிவரும் வல்லரசு நாடுகளுள் ஒன்ருக ரஷ்யா இருக்கிறது. அதன் நாகரிகம் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்நாட்டின் தலைமைப் பட்டணம் மாஸ்கோ. புதிய பண்புகள் அனைத்துக்கும் உறைவிடமாக அந்நகர் இலங்குகிறது. அதற்கிடையில் அந்நகரை ஒட்டி அடர்ந்த காடு ஒன்று அமைந்துள்ளது. அதை முற்றிலும் அடவி மயமாக வைத்து அந்நாடு அதைப் பாதுகாத்து வருகிறது. அந்நாட்டுக் காட்டு இலாகா (Forest Department) கண்ணும் கருத்துமாக அந்த வனத்தைப் பேணி வருகிறது. ஊர் மக்களும் முழு ஒத்துழைப்புடன் அதைக் காப்பாற்றிவருகின்றனர். மக்களுக்கு வாழ்க்கை சம்பந்தமான பாடம் புகட்டுதற்கு அவ்வனம் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

பழங்காலத்து இந்தியப் பண்புக்கும் வனவாசத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. மக்களுடைய மேலான வாழ்க்கைக்குப் பொருத்தமான தத்துவங்கள் பல அத்தகைய வனாந்தரங்களில் உருவெடுத்தன. தசரதராமனுடைய வாழ்க்கையில் முக்கியமான பகுதி ஆரண்ய காண்டத்தில் அடங்கியிருக்கிறது. அதே விதத்தில் பாண்டவர்களின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக மஹாபாரதத்தில் வனபர்வம் அமைந்துள்ளது. நைமிசாரணியத்தில் வசித்துவந்த ரிஷிகள் மானுட ஜன்மம் எடுத்தவர்களுடைய பண்பாட்டுக்கு இலக்காக விளங்கினர். பழங்காலத்துக் கோயில்களும் தில்லைவனம், வேதாரண்யம் இப்படியெல்லாம் பெயர் பெற்றிருந்தன. இவைகளுள் கடம்பவனம் என்பது மதுரைக்கு அமைந்த பழங்காலத்துப் பெயராகும். ஆங்கு அக்காலத்தில் இருந்த கடம்ப மரம் ஸ்தல விருக்ஷமாகக் கருதப்பட்டது. அது பட்டுப்போன பிறகு அதன் கிளை ஒன்றை எடுத்து அதற்கு வெள்ளிப் பூண் போட்டு ஸ்தல விருக்ஷம் என்கின்ற பெயர் கொடுத்து இன்றைக்குக் கோயிலில் காப்பாற்றி வருகிருர்கள்; இது போதாது. கடம்பவனத்தைப் புதுப்பிப்பது முற்றிலும் சாத்தியம். ஊருக்கருகில் இக்காலத்துக்கு ஏற்ற முறையில் கடம்பவனத்தைப் புதுப்பிப்பது முற்றிலும் அவசியமாகிறது. கடம்பவனம் எனக் கூறப்படினும் எல்லாவிதமான மரங்களையும் அதில் வைத்து வளர்க்கலாம். அங்ஙனம் அமைக்கப் பெறுகிற வனம் வாழ்க்கை சம்பந்தமாக மனிதன் பெறவேண்டிய பாடத்தைப் புகட்டுதற்கு நன்கு பயன்படும்.

இப்பூவுலகில் நிலம் கால் பங்கும் நீர் முக்கால் பங்கும் அமைந்திருக்கின்றன. ஆதலால் தான் மனிதனுக்குத் தேவையான அளவு மழை பெய்கிறது. அதே பாங்கில் பழங்காலத்தில் நாட்டுப்புறம் மிகக் குறைந்தும் காட்டுப்புறம் மிகுந்தும் இயற்கையாகவே அமைந்திருந்தன. அதன் விளைவாக நலன்கள் பலவற்றை அக்காலத்து மக்கள் பெறுவாராயினர். இன்றைக்கோ நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. நாட்டுப்புறம் அதிகரித்து வருவதற்கேற்ப காட்டுப்புறம் வேகமாகக் குறைந்து வருகிறது. அதன் விளைவாகக் கேடுகளும்பல விதங்களில் உருவெடுத்து வருகின்றன.

இக்கேட்டைத் தடுப்பதற்கு ஏற்ற ஏற்பாட்டை மனிதன் தனக்குத்தானே நன்கு உண்டுபண்ணிக்கொள்ளலாம். மிகப் பழங்காலத்திலிருந்து இன்று வரையில் நன்கு உருவெடுத்து வருகின்ற மதுரை போன்ற நகரத்தை ஒட்டி மனிதன் ஒரு வனத்தை அதிவிரைவில் உருவெடுக்கச் செய்யலாம். உயிரற்ற யந்திரங்களோடு தொடர்புகொண்டுள்ள இக்காலத்திய மனிதன் உயிர்த் தத்துவமே வடிவெடுத்து இலங்கும் வனத்தைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது முற்றிலும் அவசியமாகிறது.

மனதை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்குச் சூழ்நிலை இன்றியமையாததாகும். கந்தல்துணி அணிந்துகொண்டு குடிசையில் வாழ்ந்திருக்கும் மானுடன் ஒருவன் மனதிலே மேன்மையடைவது அரிதிலும் அரிதாம். இனி, பகட்டுடனும் படாடோபத்துடனும் கூடிய பணக்காரனுடைய வாழ்வும் அதே பாங்கில் பாராட்டத் தக்கதன்று.

இயற்கையில் உயிர் வகைகள் பலப்பல

படித்தரங்களில் இருக்கின்றன. அவைகளுக் கிடையில் வேற்றுமையை உண்டுபண்ணும் சூழ்நிலையைவிட ஒற்றுமையையும் இனிமை யையும் உண்டுபண்ணும் சூழ்நிலை அதிக மானது. அவைகளுள் மகோன்னத நிலை பெறு வது மனம். ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய இரண்டுவித உயிர்வகைகளும் ஆரண்யத்தில் அருமையான இடம் பெற்றிருக்கின்றன. வானளாவும் விருக்ஷங்கள் வனஸ்பதி என்னும் பெயர் பெறுகின்றன. பருவத்திலே பூத்துக் காய்த்துப் பழுத்து வருவது அவைகளின் முக்கியமான செயலாகிறது. அந்த அரிய செயலைக் கவனித்து வரும் மனிதனும் மனத் தகத்து மேன்மை அடைகின்றான். புள்ளினங் கள் பாடுவது மனிதனிடம் தன்னையறியாது பக்தியை ஊட்டுகிறது. மனிதனைப் பண் படுத்துதற்குக் கானகம் உதவுவது போன்று பட்டணங்கள் உதவுவதில்லை. ஆகையினால் தான் பண்பாட்டிலே சமுதாயத்தை மேல் நிலைக்குக் கொண்டு வர அவாவுறும் சான்றோர் கள் யாண்டும் இயற்கையின் உதவியை நாடி நிற்கின்றனர். அடர்ந்த அடவி அத்துறையில் மானுடனுக்குப் பேருபகாரம் பண்ணுகிறது. இயற்கை நல்கும் இந்த வரப்பிரசாதத்தைப் பயன்படுத்த மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

தொழிற்சாலைகளும், இயந்திரங்களும் கூடி ஓயாது ஓலமிட்டு வரும் சூழ்நிலை மனிதனுக் குச் சிறிதேனும் பொருந்தாது என்பதை அவன் எண்ணிப்பார்ப்பதில்லை. அதன் விளை வாக இக்காலத்திய மனிதன் படிப்படியாகப் பண்பிலே கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருக் கிறான். இதற்கு நேர் மாறாக வாரத்தில் ஒரு நாளாவது இறைவனுடைய அற்புதமான சிருஷ்டியாக அமைந்துள்ள வனாந்தரத்துக்குச் சென்று அவன் அமைதியாக இரண்டொரு மணி நேரம் அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்வானு கில் அதினின்று ஒப்பற்ற பேறதனை அம்மனி தன் அடையப் பெறுவான். ஸ்தாவர ஜங்க மங்களாக வனத்தில் அமைந்திருக்கும் உயிர் களோடு மனிதன் இணக்கம்கொண்டு பழகு தல் முற்றிலும் அவசியம். 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பது ஆப்த வாக்கியம். ஆகையால் அத்தகைய உயிர்களோடு இணங்கி வாழும் பாங்கில் மனிதன் காட்டில் சிறிது நேரம் அமர்ந்து இருப்பானாகில் அதன் விளைவாக அவன் மனது தெளிவடைகிறது. மனத் தெளிவுக்கு ஏற்ப மனிதன் மேலோன் ஆகிறான். இறைவணக்கத்திற்கு நிகரானது இடையிடையே உவகையுடன் வனவாசம் பண்ணுவதாகும். ஏகாந்தமும், நல்லார் இணக் கமும் ஒன்று சேர்ந்தால் அவை மனிதனுக்கு உண்டுபண்ணும் நலன்கள் பல உள. அவை யாவற்றையும் மனிதன் வனத்தைப் பயன் படுத்துவதன் மூலம் அடையப்பெறலாம். இக் காலத்திய மனிதனுக்கு இத்தகைய தெய்விகப் பண்பு வாய்ந்த சூழ்நிலை முற்றிலும் அவசியமா கிறது. ஆதலால் மக்கள் நலத்தில் கருத்துச் செலுத்துகிறவர்கள் மதுரைக்கு அருகிலே பண்டொரு காலத்திலிருந்த கடம்ப வனத் தைப் புதுப்பிப்பதில் கருத்துச் செலுத்துவார் களாக. அவ்வாறு கருத்துச் செலுத்துவது கடவுள் வழிபாட்டுக்கு நிகராகிறது.

உச்சிஷ்ட கணபதி

மற்றத் தெய்வங்களிடத்துக் காணமுடியாத சிறப்பு ஒன்று கணபதிக்கு உண்டு. பல வடிவங்களுள் அவன் உச்சிஷ்ட கணபதி என்னும் இயல்பைப் பெற்றிருப்பதுவே அச்சிறப்பு. எச்சில் பட்ட கணபதி என்று அது பொருள்படுகிறது. தூய்மையே தெய்வ சொரூபம் என்னும் எண்ணத்தில் ஊறியவர்கள் நாம். அதன்பொருட்டு நாம் சதாசாரம் உடையவர் களாக இருந்து பழகுகிறோம். அதை நன்கு பழகிய பிறகு தூய பழக்கவழக்கமே நமக்கு ஒருவித இடையூறு ஆகிவிடுகிறது. ஒரு நாள் நீராடாவிட்டால் நாம் கடவுள் வழிபாட்டுக் குத் தகுதியற்றவர்கள் என நினைக்கிறோம். சுத்தம், அசுத்தம் ஆகிய இரண்டு நிலைகளையும் கடந்த நிலைக்குப் போவதுதான் நம் குறிக்கோள். அழுக்கை அழுக்காகக் கருதாதே என்னும் பாடத்தை உச்சிஷ்ட கணபதியின் உபாசனை நமக்குப் புகட்டுகிறது.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு. V. S. நரசிம்மன்)

(இத்தாலி நாட்டின் கிறிஸ்துவ பாதிரிகள் ஹிந்து மதத்தைப் பற்றி எழுப்பிய வினாக்களும் ஸ்ரீமத் சுவாமிகளின் விடைகளும் தொகுத்துத் தரப்படுகின்றன.)

கேள்வி : 19. தனது அனுபவமே முடிந்த நிலை என்று ஹிந்து நம்புகின்றான். கிறிஸ்துவனும், முஸ்லீமும் அவ்வண்ணம் தத்தம் நம்பிக்கையை வலியுறுத்துகின்றனர். அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை எது?

பதில் : அனைவருக்கும் பொதுவானது 'உறக்கம்' தான்! ஏழு படித்தரங்களில் உணர்வு நிலை நமக்குக் கிட்டுகின்றது. மனிதன் ஆராய்ச்சி செய்யக்கூடிய முறையில் மூன்று நிலைகள் — விழிப்பு, கனவு, உறக்கம்—உள்ளன. 'விழிப்பு' நிலையில் பல கருத்துக்களில் ஒற்றுமை காணப்படாது. 'விழிப்பு' நிலை ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அனுபவம். கனவில் அவன் தனக்குத்தானே புதிய உலகைச் சிருஷ்டி செய்கின்றான். இரண்டு கனவுகள் ஒத்துப் போவதில்லை. மேலும் மனிதன் விழிப்பு நிலையில் திட்டமிட்டுச் செயல் புரியலாம்; தன் வசத்திற்கு அதை உட்படுத்தலாம். ஆயின் கனவோ அவன் கைவசம் கிடையாது; மாறாக, கனவில் அவன் தன் பிடிப்பை முற்றிலும் இழக்கின்றான். கனவு நிலை நமக்கு எதை உணர்த்துகின்றது? விழிப்பு நிலையில் எதை எண்ணுகின்றோமோ, அது கனவிலும் சாத்தியம் என்று நமக்குத் தெரிவிக்கின்றது.

மூன்றாவது நிலை ஆழ்ந்த உறக்கம். சுழுப்தி எனப்படும் இந்நிலை அனைவர்க்கும் பொது. ஹிந்து உறக்கம், கிறிஸ்தவ உறக்கம், இஸ்லாம் உறக்கம் என்ற பாகுபாடு கிடையாது. ஒரு விதத்தில் சுழுப்தி சமாதியைப் போன்றது எனலாம். அதைப் போலவே, பேருணர்வும் (பிரக்ஞை, Pure Consciousness) எல்லாருக்கும் பொது. ஹிந்து, முஸ்லீம் என்ற பேதம் அதில் இல்லை. அன்பு அனைவருக்கும் பொதுவன்றோ? அங்ஙனமே சமாதியும். மனிதனின் குறுகிய மனப்பான்மைதான் பேதத்திற்கு அடிப்படை.

பூரண உணர்வை நாம் ஒருவாறு ஆழ்ந்த உறக்கத்தில் அனுபவிக்கின்றோம். அஞ்ஞானம் அகன்றபின் எஞ்சியிருப்பதுவே பேருணர்வாம். அதுவே முடிவான பரம்பொருள், இரண்டற்ற அத்வைத வஸ்து. 'பிரக்ஞானம் பிரம்மம்' என்று வேதாந்தம் இதையே உபதேசிக்கின்றது. 'அல்லாதான் பரம்பொருள்' என்று முஸ்லீம் உரைக்கும்போது, வேறு சொல்லைப் பயன்படுத்துகிறான். 'பரமண்டலத்தில் உள்ள பிதா' என்பதும் அப்படியே! ஒரே பேருணர்வைப் பல பெயரிட்டுப் பல வர்ணனைகள் தந்து வழிபடுகின்றோம். மாற்றங்கள் பெயரிலும், நமது உணர்விலும்தான் உள்ளன. எனவே அந்தப் பேருணர்வை இலட்சியமாகக் கொள். அங்கே நீயோ, நானோ இல்லை. நம்முடைய 'புத்தி' கூட அங்கே செயல்படாது. சுழுப்தியை ஆராய்வதன் மூலம் 'சமாதி' நிலையை ஒருவாறு நாம் புரிந்து கொள்ளலாம். எனவே இது நமக்குக்கிடைத்தவரப்பிரசாதம். இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பைச் சுவாமி விவேகானந்தர் விளக்குகின்றார். ஆங்கு காலமும், இடமும் கிடையாது; ஜீவபாவம் இல்லை; ஆயின் ஒரு வித்தியாசம் உள்ளது. மூடன் ஒருவன் உறங்கச் சென்றால், விழித்து எழும்போது அவனிடம் பெரிய மாற்றம் இல்லை. ஆயின் அவன் சமாதியில் திளைத்து எழும்போது அறிவுப் பிழம்பாக மாறி வருவான். இந்தப் பூரண போதம், பேரானந்தம் ஹிந்து, கிறிஸ்துவன், முஸ்லீம் என்று பாகுபடுத்துவது கிடையாது. எனவே அந்தப் பேரானந்த நிலையை எப்பெயரிட்டு அழைத்தாலும் சரி; இது எமக்கு மட்டுமே உரியது என்று எந்த மதத்தினரும் ஏகபோக உரிமை கொண்டாட முடியாது. அதுவே முடிந்த நிலை, அதற்கு அப்பால் ஏதும் இல்லை. (ஸா காஷ்டா ஸ பரா கதி:—கடோபநிஷத்).

கேள்வி: 20. சத்திய நிலைக்குப் பல பாதைகள் இருக்கின்றனவா?

பதில்: பாதைகள் பல; அவை சென்று அடையும் இலக்கு ஒன்று. சத்தியம் ஒன்று; அதன் வர்ணனை அநேகம். சாதகனின் மனப் பக்குவத்திற்கு ஏற்ப-சாத்விக, ராஜசிக,

தாமசிக — அனுபவங்களும் மாறுபடலாம். ஆயின் இவற்றைப் பற்றி அதிகம் கவலைப் படத் தேவையில்லை. தத்துவம் தெளிவாக உள்ளது. 'விழிப்பு நிலையே வேற்றுமை களுக்கு இடம் அளிக்கின்றது. ஆழ்ந்த உறக் கத்தில் அவை மறைந்துவிடுகின்றன. அந்த அனுபவத்திற்கு எந்தப் பெயரை வேண்டுமா யினும் தரலாம். அனைவருக்கும் பொதுவானது அந்த நிலை. நமக்கு விருப்பமுள்ள பெயரை அதற்குத் தரலாம்.

கேள்வி: 21. ஒருவனுடைய நெறி எனக் குப் புதியதாகத் தோன்றும்போது, அவனைத் திருத்தலாமா ?

பதில்: எவரையும் தடுக்கவோ, மாற்றவோ கூடாது. ஒவ்வொரு மதத்திற்கு எனக் குறிப் பிட்ட நெறி உள்ளது. அவரவர் சம்பிரதா யத்தை விதிப்படி பின்பற்ற வேண்டும். அதை மாற்றவேண்டிய தேவை இல்லை. ஒரு சிறு செடியைச் சுற்றி வேலி அமைக்க வேண்டி யது அவசியம்; மரமாக வளர்ந்தபின் அது தேவையில்லை. அதுபோல் ஆன்மீக முன்னேற் றம் ஏற்பட்டால், இந்தக் கட்டுப்பாட்டிற்கு அவசியம் இல்லை. எனவே வீணே பேதத்தை வலியுறுத்தாதீர்கள்; ஒன்றுபட்ட, மேலான சமரச அனுபவத்திற்கு வழிகோலுங்கள்.

கேள்வி: 22. எல்லா மதங்களும் விழிப்பு நிலையில் உள்ளன; அத்வைதமும் அவ்வாறே. எனவே ஒவ்வொருவரும் தத்தம் வழியைப் பின்பற்றலாமே?

பதில்: ஆம். அதுதான் செய்யவேண்டியது. ஆழ்துயிலில் வேற்றுமைகள் மறைந்துவிடு கின்றன. 'சத்' பொருள் ஒன்றே உள்ளது. அது 'இரண்டற்றது'. அத்வைதம் மதம் அன்று; முடிந்த நிலையைக் குறிக்கும் உண்மை ஆகும். அத்வைதம் என்ற சொல் 'பரம் பொருள் இரண்டற்றது; இருப்பது ஒன்றே' என்று பொருள்படும்.

கேள்வி: 23. சத்தியத்தின் ஒரு வகை யான நோக்கு என்று அத்வைதத்தைக் கூற லாமே?

பதில்: ஒரு விதத்தில் சத்தியத்திற்கு அத் வைதமும் ஒரு மார்க்கம் எனலாம். ஆயின் காண்போன், காணப்படும் பொருள் என்ற பேதம் அப்போது உள்ளது. ஆயின் சத்தி யத்தை அறிந்த உடன் நீங்கள் அதனுடன் ஒன்றித்துக் காணப்படுவீர்கள். எனவே அப்போது அது ஒரு மார்க்கம் அன்று; அதுவே சத்தியம்.

கேள்வி: 24. அத்வைத நிலையில் இருக்கும் போது 'அத்வைதம்' பற்றிப் பேச இயலுமா?

பதில்: இயலாது. அங்கே பேசுவதும், பேசுபவரும் கிடையாது. தனிப்பட்ட வ்யக்தி (Individuality) இல்லாத போது, யார் பேச முடியும்? மேலும் அப்போது பேசுவதற்கு என்ன தேவை உள்ளது? விழிப்பு நிலையில் கூட, பரவசம் அடையும் போது, பேச நா எழுவதில்லையே! அனைத்து எல்லைகளையும் கடந்தபின், ஜீவபாவம் அற்றபின், யார் பேச முடியும்? எதைப்பற்றிப் பேச முடியும்?

கேள்வி: 25. அனுபவம் சரிவர அடையா தவர்கள்தாம் அதிகம் பேசுகின்றனர்.

பதில்: ஆம். நாம் அந்த அனுபவத்தைப் பெறவில்லை; எனவே தான் வீண்பேச்சுப் பேசு கின்றோம். நாம் ஏதோ சிறிதுதான் அறிந் துள்ளோம். நம்முடைய குறை நிலையை, தகு தியை உணர்ந்துள்ளோம். எனவே நாம் சரி யான பாதையில்தான் செல்கின்றோம் என்ற மனநிம்மதியை மட்டுமே இதனால் அடைந்துள் ளோம். முழுமையாக நாம் அத்வைத நிலையை அனுபவித்தவர்களல்லர்.

கேள்வி: 26. அத்வைதிகள் 'இரண்டற்றது' என்று கூற, மற்றவர்கள் அதற்கு மாறாகக் கூறுகின்றார்களே ?

பதில்: ஹிந்து தத்துவ சாஸ்திரத்தில் முப் பெரும் ஆசாரியர்களுக்கும் உரிய, உன்னத நிலை அளிக்கப்பட்டுள்ளது. பைபிளில் கூட இந்த மூன்று நிலைகளைக் காணலாம். 'பரமண்டலத்தில் உள்ள பிதா'-துவைதம்; 'என் மூலம் அன்றி யாரும் பிதாவை அடைய முடியாது' — விசிஷ்டாத்வைதம். 'நானும், பிதாவும் ஒன்றே'—அத்வைதம். நம்முடைய விழிப்பு நிலை, துவைதம்; கனவு, விசிஷ்டாத் வைதம்; ஆழ்துயில் அத்வைதம் ஆகின்றன. அவஸ்தா திரயத்தின் மூலம் மனிதனின் சிறப்பு வெளிப்படுகின்றது; பூரணமாகிய மெய்ப்பொருளின் தனிப் பெருமை இது. 'ஒன்றிலே மூன்றும்; மூன்றிலே ஒன்றும்' என அது இலங்குகின்றது.

குறிப்புகள்

ஆவுடையாபுரத்தில் கும்பாபிஷேகம்:

பொதுமக்களிடையே பக்தியைப் பரப்புவதற்குத் தேர்த்திருவிழாவும் கும்பாபிஷேக விழாவும் அமைக்கப்பட்டன. பொருளை மிகுதியாகச் செலவழித்து ஒரு கூட்டத்தினர் மட்டும் பயன் அடைவதற்கும் தாறுமாறான வழியில் குதித்துக்கும்மாளம் போடுவதற்கும் அச்செயல்கள் அமைக்கப்பட்டவைகளல்ல. ஒரு கூட்டத்தினர் கும்பாபிஷேகத்தை முகாமையாகக் கொண்டு பொதுமக்களுடைய பணத்தைச் சுயநலத்துக்குப் பயன்படுத்தி நாகரிகமற்ற முறையில் புனிதமானசெயலைப் பிறர்பார்த்து நகைக்கும்படிசெய்து விடுகிறார்கள். இத்தகைய செயல்களைப் போக்கி, பொதுமக்களுடைய சொத்து நல்ல காரியத்துக்குப் பயன்படுவதற்கும் பாமரமக்களிடையே பக்தியை வளர்ப்பதற்கும் கட்டுப்பாடும், ஒழுங்குப்பாடும், புனித உணர்வும் கூடிய நிகழ்ச்சிகளை அமைத்துச் சிறுவர்கள் பெரியவர்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தில் பங்குகொண்டு பயனடையும்படியாகச் சில கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன.

சமீபத்தில் 1—7—84 அன்று ஆவுடையாபுரத்தில் அருள்மிகு சந்தன மாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா நடந்தது. அவ்விழாவில் சிறுவர்களும் பெரியவர்களும், பங்கு கொண்டு தங்கள் உள்ளத்தில் அருள் உணர்வை வளர்த்துக்கொண்டார்கள்.

ஆவுடையாபுரம் விருதுநகருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய கிராமமாகும். அக்கிராம மக்கள் ஒற்றுமையாக இருந்து நிதி திரட்டி அவ்வூரில் சந்தன மாரியம்மன் கோவில் கட்டி மாரியம்மன் சிலையும் வடித்துப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். 1—7—84 அன்று தாங்கள் கட்டிய கோயிலுக்குச் சிரத்தையோடு கும்பாபிஷேக விழாவையும் நடாத்தினார்கள். அதற்காக 30—6—84 சனிக்கிழமையன்று அதிகாலை 5 மணிக்குச் சந்தன மாரியம்மன் ஆலயத்துக்குப் பக்கத்திலுள்ள செல்வ விநாயகர் கோவிலில் கணேசஹோமம் துவக்கப்பட்டது. "ஓம் கணேசாய ஸ்வாஹா" என்ற மந்திரத்தைஉச்சரித்துக் கொண்டு நெய்யில் அருகம்புல்லைத் தோய்த்து ஓமகுண்டத்தில் இட்டுக் கணேசஹோமம்செய்தார்கள். அரைமணிநேரம் அந்நாமத்தை உச்சரித்துக்கொண்டு, அமைதியாகவும் ஒழுங்காகவும் பக்தி உணர்வோடும் அந்த யாகத்தை அவர்கள் செய்து முடித்தார்கள்.

ஐந்தரை மணிக்குச் சந்தன மாரியம்மன் ஆலயத்தின் முன் புண்ணிய தீர்த்தங்கள் நிரப்பப்பட்ட பதினொரு கும்பங்களை வைத்து ஆவாஹனம் செய்தார்கள். ஆறுமணிக்கு "ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்" என்ற மந்த்ர ஜபம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் அனைவரும் கலந்து கொண்டனர். அவ்வூரில்உள்ள ஸ்ரீ பாலமுருகன் துவக்கப்பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும், வ. உ. சி. இளைஞர் மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு ஜபயக்ஞத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். இரவு ஒருமணியிலிருந்து விடியற்காலை ஐந்து மணிவரை அவ்வூர் பஜனைக் கோஷ்டியினர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பக்தி உணர்வோடு ஜப யக்ஞத்தை நிகழ்த்தினார்கள். இருபத்துமூன்று மணி நேரம் ஜபயக்ஞம் நிகழ்ந்தது. அந்த ஜபயக்ஞமானது ஆலயத்தில் அருள் சக்தியைத் தோற்றுவித்தது.

30—6—84 சனிக்கிழமை இரவு ஒன்பதரை மணிக்குமேல் அம்மனுடைய சிலையைப் புதிதாக எழுப்பப்பட்ட கோயிலின்கண் அருளாளர்களும், பக்தர்களும் சேர்ந்து பிரதிஷ்டை செய்தார்கள்.

1—7—84 ஞாயிற்றுக்கிழமை காலை ஐந்து மணி வரையிலும் ஜபயக்ஞம் நிகழ்ந்தது. காலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணி வரை அருள்மிகு சந்தன மாரி அம்மன் கோவில் முன் சக்தி ஹோமம்செய்யப்பட்டது. 'ஓம் ஐம் மஹாசக்த்யை ஸ்வாஹா' என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு வில்வதளத்தை நெய்யில் தோய்த்து ஓமகுண்டத்தில் ஆகுதி செய்தார்கள். அதன் மூலம் ஆலயத்தின்கண் அருள் சக்தியை ஏற்படுத்தினார்கள். ஆறு மணிக்கு ஓமம் சிறப்பாக, பூரண ஆகுதியோடு நிறைவு பெற்றது. சரியாகக் காலை ஏழுமணிக்கு மங்கள இசை முழங்க 'ஓம் சக்தி ஜெய்சக்தி' என்று

மக்கள் பக்தியோடு கோஷங்கள் செய்யக் குட முழுக்கு நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சியில் சுமார் இரண்டாயிரம்பேர் பங்கு கொண்டார்கள். காலை ஏழரை மணி அளவில் ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனை சிறப்பாக நிகழ்ந்தது. ஏழரை மணியிலிருந்து எட்டரை மணிவரையில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட மக்களுக்குப் பக்தியின் சிறப்பைப் பற்றியும், வழிபாட்டு முறையைப்பற்றியும், ஆன்மீகச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

காலை 11-30 மணி அளவில் அவ்வூரில் உள்ள இஸ்லாமியப் பெருமக்கள் முந்நூறு பேருக்குமேல் மேளதாளத்துடன் சந்தன மாரியம்மன் ஆலயத்திற்கு வழிபாட்டுக்கு வந்து தங்களுடைய காணிக்கையாக அம்மனுக்குப் பெரிய குத்து விளக்கு ஒன்றை வழங்கினர்கள். தேங்காய் உடைத்துப் பழங்களையும் வைத்து, பக்தி உணர்வோடு அம்மனுக்கு அர்ச்சனை செய்து அவர்கள் வழிபாடு செய்த நிகழ்ச்சியானது அங்குள்ள இந்துக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அவர்கள் மகிழ்ச்சியோடு பிரசாதத்தை ஏற்று மகிழ்ந்தனர். உண்மையான பக்தி ஓங்குமிடத்துச் சண்டை சச்சரவுகளுக்கோ, மதவெறிக்கோ இடமில்லை என்பது அன்று நிரூபிக்கப்பட்டது. எல்லாத் தெய்வங்களையும் வணங்கும் மக்கள் தங்களுக்கிடையில் சகோதர மனப்பான்மையை வளர்க்கும்பொழுது தான் உண்மையான தெய்வ பக்தி வெளிப்படுகிறது. உள்ளத்தில் தூய்மையையும், புனிதத் தன்மையையும் வளர்ப்பதே மெய்யான பக்தியாகும்.

ஆவுடையார் ஊருக்குப் பக்கத்திலுள்ள காளப்பெருமாள்பட்டி, நல்லாம்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்தும் பெருமக்கள் மேளதாளத்துடன் சந்தன மாரியம்மனை வந்து தரிசித்துச் சென்றுர்கள். அவர்களும் பச்சை நிறக் குழல் விளக்கு ஒன்றும் ரூபாய் ஐம்பத்தொன்றும் ஆலயத்துக்குக் காணிக்கையாகச் செலுத்தி வழிபட்டுச் சென்றனர். அன்று மாலை 3 மணி அளவில் குடமுழுக்கு. தீர்த்தக்குடத்தை யானை மீது வைத்து அவ்வூரில்உள்ள அனைத்துத் தெருக்களிலும் குடமுழுக்கு நீர் புரோக்ஷணம் செய்யப்பட்டது. மாலை 7 மணி அளவில் நடந்த குத்துவிளக்குப் பூஜையில் 122 பெண்கள் குத்துவிளக்கு ஏற்றிக் கலந்து கொண்டனர். சுமார் 1500 பெண்கள் மலர்தூவி அம்மனை வழிபட்டனர். அனைவருக்கும் குங்குமப் பிரசாதமும், பொங்கலும் வழங்கப்பட்டன. அன்று இரவு இன்னிசைக் கச்சேரி ஒன்றும் இலக்கியச் சொற்பொழிவு ஒன்றும் சிறப்பாக நிகழ்ந்தன. புலிவேஷம், கும்மி முதலிய கிராமநிகழ்ச்சிகளையும் பக்தியுடன் அன்றைக்கு அவ்வூர் மக்கள் நிகழ்த்திக் காட்டினர். அன்று முழுவதும் அவ்வூர் மக்கள் தெய்வ சிந்தனையுடன் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமானர்கள்.

செய்திகள்

நிகழ்பவை :

நீலகிரி ஜில்லா குன்னூரில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் 17-8-84 வெள்ளிக் கிழமையன்று மௌண்ட் பிளசன்ட், ஹிந்து வித்யாலயாப் பள்ளியில் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

20-8-84 திங்கட்கிழமையன்று ஆடி விடுமுறைக்குப்பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

21-8-84 செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீ ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையில் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

26-8-84 ஞாயிற்றுக் கிழமைஅன்று மாலை 6-30 மணியிலிருந்து 8-30 மணி வரையில் கரூர் பசுபதீஸ்வரர் கோவிலில் அந்தர்யோக முறையில் ஸ்ரீமத் போதானந்த சுவாமிகள் நிகழ்ச்சிகள் நடாத்துவார்கள்.

29-8-84 புதன் கிழமையன்று ஸ்ரீ விநாயக சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல்12மணி நேரம் அகண்ட நாம பஜனையும்,பகல் 11மணியிலிருந்து 12 மணி வரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள். அன்று இரவு 7 மணிக்குமேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜை செய்து விநாயக சதுர்த்தியைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	4-50
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஞானயோக விளக்கம்	...	8-00
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
விவேகானந்த விவரணம்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
பஜனைப்பாடல்கள்	...	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	டி ...	3-00
சின்மயானந்த குரு	டி ...	3-00
ஆனந்தமானபரம்	டி ...	3-00
சுகவாரி	டி ...	3-00
மௌனகுரு வணக்கம்	டி ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	டி ...	2-50
மலைவளர் காதலி	டி ...	1-50
பரசிவ வணக்கம்	டி ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	2-50
ஹரிச்சந்திரன்	டி ...	2-00
தவப்புதல்வர்கள்	டி ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	டி ...	1-75
விபீஷணன் சரணாகதி	டி ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொரூபம்	—	1-25

*சிவதத்துவம்	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*முருகக்கடவுள்	...	0-75
வர்ணாச்ரம தர்மம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது! ஞானகாண்டம் எது!		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (12th Imp.)	...	30-00
Sri Lalithambiha Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	9-00
Ramakrishna lives Vedanda	...	8-00
Mahaveer Sri Hanuman	...	7-75
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Man Making Message	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Facets of Brahman or The Hindu Gods	..	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Thus Speaks Tayumana Swamigal	...	3-50
*Introducing The Gita	...	2-00
Holy Bible---In the Light of Vedanda	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25
The Teacher	...	1-00
The School	...	1-00

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.